1240

PRINCIPLES OF EDUCATION

IN TAMIL

OFFICE OF THE ... OF BOOKS MADRAS 7 SEP 1938

By

Mr. A. JEBARATNAM

TEACHER

BISHOP SARGENT SECONDARY TRAINING SCHOOL

PALAMCOTTAH

PRINTED AT THE HILAL PRESS

TINNEVELLY.

1938.

Copyright.]

[PRICE As. 10.

மனோதத்துவ சாஸ்திரம்

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - SEP 1938
MADRAS

பாளையங்கோட்டை
பிஷப் ஸார்ஜண்ட் செக்கண்டரி ட்ரேயினிங் ஸ்கூல்
உதவி ஆசிரியர்
ஸ்ரீமான் A. ஜெபரத்னம்
எழுதியது

371

காபிரைட்]   1938   [விலை அணு 10

First Edition — 1935

Second Edition — 1938

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
7 - SEP 1938
MADRAS

FOREWORD.

Mr. JEBARATNAM, the Head Tamil Pandit of the Bishop Sargent Secondary Training School, who has just passed the Pandits' Examination in the Annamalai University in the First Class, has felt the need of Tamil books on Special Scientific subjects and has written this book on 'Principles of Education' for the use of Higher Elementary Students. The want of such books in Tamil, treating of Psychological Principles underlying the general education, stood in the way of real knowledge of the Training Students. Even though it is not a subject for Government Examination, yet the Principles should be instilled in the minds of the students as well as in those of the teachers working in Elementary Schools.

At the last conference of the Heads of the Training Schools of Christian Institution in South India, it was thought advisable that at least a period, a week, should be devoted to the 'Principles of Teaching' in the Higher Elementary Classes. But want of suitable text-book was keenly felt as an obstacle and now this book will satisfy all Training Schools and Trained teachers. I hope it will be introduced in all the Higher Elementary Training Schools and the students will be better fitted for work as teachers in Elementary Schools.

I have gone through the whole book and it is very ably written with suitable illustrations and diagrams here and there and the author has exhausted all the Principles of teaching under various headings.

True, Tamil books don't sell well. But this is a book whose want was felt for a long time and I congratulate the author on bringing out such a book in suitable time in such a simple and clear language. I hope the Training School authorities will patronise this effort and encourage the sale of the book. I am sure it will become popular in the Training Schools in South India and also among the Elementary School teachers.

G. DEVADASON, B. A., L. T.,
Head Master and Lecturer in Psychology
BISHOP SARGENT SECONDARY
TRAINING SCHOOL.

PALAMCOTTAH
13—4—35

பொருள் அடக்கம்

அத்தியாயம்		பக்கம்.
1.	கல்வியின் நோக்கம்	1
2.	ஆசிரியரும் மனோதத்துவ சாஸ்திரமும்	3
3.	மனோதத்துவ சாஸ்திரம்	5
4.	கல்வித்துறையில் மனோதத்துவ சாஸ்திரத்தின் உபயோகம்	9
5.	பிரக்ஞை அல்லது தன்னறிவு	13
6.	மனதின் தொழில்கள்	14
7.	மனோவளர்ச்சியின் பல நிலைகள்	17
8.	ஐம்புலன்களின் பயிற்சி	28
9.	பொருளறிதல் அல்லது விஷயத்தெளிவு	38
10.	அப்பர்செப்ஷன்	42
11.	உற்றுநோக்குதல்	45
12.	கவனம் அல்லது உளநோக்கம்	47
13.	பற்று அல்லது உள்ளக்கவர்ச்சி	53
14.	ஞாபகம் - மனப்பாடம்	59
15.	கற்பனு சக்தி	64
16.	போது அறிவு அல்லது பகுத்தறிவு	67
17.	செய்தல்	71
18.	பழக்கம்	81
19.	நற்குணம் அல்லது நல்லொழுக்கம்	83
20.	களைப்பு	88
21.	வீட்டு வேலை	91
22.	பரீக்ஷைகள்	94
23.	முறைக் கோட்பாடுகள்	98
24.	ஐந்துபடிகள் அல்லது ஹேர்பார்ஷியன் ஸ்டேப்ஸ்	106
25.	பள்ளிக்கூட ஆட்சிமுறை - பரிசும் தண்டனையும்	110
26.	சுயநோக்க முயற்சிமுறை	119

1. கல்வியின் நோக்கம்.

பல்லாண்டுகட்கு முன்னர் கிரேக்க தேசத்திலிருந்த பெரிய தர்க்க சாஸ்திரியாகிய அரிஸ்டாட்டில் என்பவர் கல்வியின் நோக்கம் என்ன என்னும் கேள்வியைக் கேட்டார். ஆனால், அக்கேள்விக்கு அவர் விடை கூறவில்லை. அதற்கு விடை கூறுவது எளிதல்ல. ஆயினும், பின்கண்டவாறு பலரும் பலவிதமாகக் கூறுகின்றார்கள்.

கல்வியால் பிழைப்புண்டாகவேண்டும் என்பர் ஒரு சாரார். கல்வி ஜீவனத்துக்கு ஏதுவாக இருக்கவேண்டும் என்பது ஒருவாறு நியாயந்தான். ஒருவனுக்கு அவன் கற்ற கல்வியால் பிழைப்புண்டாகாவிட்டால் பயனில்லைதான். ஆனால், கேவலம்! வயிற்றுப் பிழைப்பை மட்டும் கருதிக் கல்வி கற்பது மிகவும் குறுகிய நோக்கம். இதுவே கல்வியின் நோக்கமாக இருப்பின் தற்காலம் உலகத்தில் அபிவிருத்தி யடைந்திருக்கும் பலவித கலைகளும், அறிவுப் பெருக்கமும் ஏற்பட்டிருக்கமாட்டா. எந்த இடத்தில் பிழைப்புக் கிட்டுமோ அந்த அளவில் கல்வியைப் பற்றிய முயற்சி நின்றுவிடு மல்லவா?

ஏராளமான அறிவைப் பெறுவதற்காகக் கல்வியைக் கற்க வேண்டும் என்பர் மற்றொரு சாரார். மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவுக்கும் உடைக்கும் வழியுண்டாகாவிட்டால், வெறும் அறிவை மட்டும் சம்பாதித்துப் பயன் என்ன? அறிவால் பிழைப்பு உண்டாகவேண்டுவது அவசியம் அல்லவா?

கல்வியால் சன்மார்க்கமும் நற்குணங்களும் உண்டாக வேண்டும் என்பர் வேறொரு கட்சியார். நற்குணங்களை உண்டுபண்ணாத கல்வியால் பயனில்லை. ஆனால், அறிவும்

பிழைப்பும் இல்லாத நிலைமையில் நற்குணங்கள் மட்டும் அபி விருத்தி யடைந்து பிரயோஜனமில்லை. ஆகையால், நற்குணங்களை உண்டுபண்ணுவது மட்டும் கல்வியின் நோக்கமாக இருக்கமுடியாது.

மனிதன் தன்னந் தனியாக இருந்து உயிர் வாழ்கிறவன் அல்ல. அவன் மனித சமுதாயத்தின் நடுவிலே பலரோடும் சம்பந்தப்பட்டு வாழ்க்கை செய்யவேண்டியவனாக இருக்கிறான். மற்ற மனிதர்களோடு செம்மையாகப் புழங்கி வாழத் தெரியாத மனிதனை நாம் மதிப்பதில்லை. அவன் நாகரிகம் அற்றவன் என்றெண்ணி அவனை ஒதுக்குகிறோம். ஆகையால், ஒரு மனிதனை சமூக வாழ்க்கைக்கு லாயக்குள்ளவனாக்குவது கல்வியின் நோக்கம் என்பர் சிலர். இதிலும் நியாயம் உண்டு. ஆனால், இந்நோக்கம் ஒன்றே முற்றிலும் சரியென்று ஒப்புக்கொள்ள முடியாது. கல்வியால் பிழைப்பும், அறிவும், நற்குணங்களும் உண்டாகவேண்டுவது அத்யாவசியம் அன்றோ!

மேற்கூறப்பட்ட நான்கு நோக்கங்களும் சிரேஷ்டமானவைதான். ஆனாலும், ஒவ்வொன்றிலும் குறையிருக்கிறது. இந்த நான்கு நோக்கங்களையும் ஒன்றாகத் திரட்டினால் நாம் ஒருவாறு அக்கேள்விக்கு விடை கூறலாம். அதாவது, கல்வியால் உழைப்பும் பிழைப்பும் கிடைக்கவேண்டும்; அறிவு விருத்தியடைய வேண்டும்; நற்குண நல்லொழுக்கங்கள் உண்டாதல் வேண்டும்; மற்ற மனிதர்களோடு சீராய்ப் பழகி வாழ்க்கை செய்வதற்குரிய நாகரிகம் வளர்ச்சியடைதல் வேண்டும். இதனை வேறு விதமாகக் கூறினால், கற்ற ஒருவன் திடகாத்திரமான சுகசரீரமும், மனோபலமும், நற்குணங்களும் படைத்தவனாகவும் பிறருடன் கண்ணியமாகப் புழங்கி வாழ்க்கை செய்கிறவனாகவும் இருக்கத் தக்கதாகக் கல்வி கற்பிக்கப்படவும், கற்கப்படவும் வேண்டும்.

கல்வியின் நோக்கம் அந்தந்தக் காலத்துக்கும் இடத்துக்கும் உரிய வாழ்க்கையின் நோக்கத்தைப் பொறுத்தது. தேசங்கள்தோறும் காலங்கள்தோறும் கல்வியின் நோக்கம் வேறுபடும். நாம் தற்காலத்தில் மேற்கூறப்பட்ட நோக்கத்தைச் சரி என்று ஒப்புக்கொள்வதில் பிழை இல்லை என்று நினைக்கிறேன். ஆதலால், நாம் நமது பிள்ளைகட்கு என்ன விஷயம் கற்பித்தாலும் இந்த நோக்கத்தின் நாலு அம்சங்களும் சித்திப்பதற்கு ஏதுவாக முறைகளைக் கையாண்டு கல்வி கற்பித்து வரவேண்டியது.

---

2. ஆசிரியரும் மனோதத்துவ சாஸ்திரமும்.

பிள்ளைகளின் உடலைப் போஷிப்பதும் பேணி வளர்ப்பதும் பெற்றோர்களுடையவும், வைத்தியர்களுடையவும் கடமையாகும். மனித உடலைப் பாதிக்கக்கூடிய பலவேறு வகைப்பட்ட நோய்களின் இயல்பும், அவற்றுக்குச் செய்ய வேண்டிய பரிகாரமும் என்னவென்று படிக்கும் முன், ஒரு வைத்தியர் மனித உடலின் கூறுபாடுகளைப்பற்றி நன்றாய்க் கற்றிருக்கவேண்டும். பிள்ளைகளின் மனதைப் போஷித்து வளர்ப்பது ஆசிரியருடைய கடமை. பிள்ளைகளின் மனது சம்பந்தப்பட்ட வேலையைச் செய்கிறவர் ஆசிரியரே. பிள்ளைகளுடைய மனதின் பல நிலைகள், அந்நிலைகளுக்குரிய மனதின் பல தொழில்கள், மனது இயல்பாக வளரும் விதம், ஆசிரியர் அதனை வளர்க்கும் விதம் இவற்றைப் பற்றிய நுண்ணறிவில்லாத ஒருவர் மனப்பயிற்சி செய்தலாகிய மகா புனிதமான, உன்னதமான, சீரான ஆசிரியத் தொழிலுக்கு உரியவர் ஆகார். ஒரு இயந்திரத்தை இயக்குகிறவனுக்கு அவ்வியந்திரத்தின் பல உறுப்புக்களும், அவற்றின் அலுவல் அவசியங்களும் தெரிந்திருக்காவிட்டால் அவன் அதனைச்

சீராகச் செலுத்துவது எப்படி? மனமாகிய மகத்தான இயந்திரத்தை இயக்கிச் செல்லவேண்டிய ஆசிரியர் அவ்வியந் திரத்தின் நுட்பங்களைப் பற்றிய தெளிவான அறிவுடையவ ராக இருக்கவேண்டுவது அவசியம்.

மனோதத்துவ சாஸ்திரம் கல்லாதவர்கள் யாவரும் அறவே போலி ஆசிரியர்களாக இருப்பர் என்பதும் இல்லை. சாஸ்திரத்தைப் புத்தகத்திலிருந்து படியாமற் போனாலும், சிலர் தங்கள் அனுபவத்திலிருந்து, பல பிள்ளைகளுடன் பழகி, அவர்களைப் பார்த்துப் பார்த்து, நாளடைவில் பிள்ளை களின் மன இயல்பை ஓரளவு அறிந்துகொண்டு, அதற்கு ஏற்க முறைகளைக் கையாண்டு ஆசிரியத் தொழிலில் சித்தி பெறுகிறார்கள். ஆயினும், நீண்ட காலம் காத்திருந்து படித்து மனதின் இயல்பை அறிவதைவிட, மனோதத்துவ சாஸ்திரத்தை ஏற்கனவே படித்துக்கொண்டால், சுருங்கிய கால அளவில் அடையக்கூடிய அந்த அனுபவத்தைக் கொண்டு, ஆசிரியத் தொழிலில் புகும் ஆரம்ப காலம் முதலே அவர்கள் நல்ல வேலை செய்து, பல குழந்தைகளுக்கு உப காரமாய் இருக்கக்கூடும் அல்லவா?

மனோதத்துவ சாஸ்திரத்தைக் கற்றுவிட்டதினால் மட் டும் ஒருவர் சிறந்த ஆசிரியராகிவிடலாம் என்பதும் இல்லை. என்றாலும், மனதின் இயல்பை அறியாமல் தவறான முறை களைக் கையாடிக் கற்பித்துத் தடுமாற்றமடையாதபடி மனோ தத்துவ சாஸ்திரம் ஒருவரைத் தடுக்கும் என்பதற்கு ஐய மில்லை. பிறக்கும்போதே ஆசிரியராகப் பிறப்பவர்கள், ஆசி ரியத் தொழில் செய்வதற்குரிய இயற்கை வரம் பெற்றவர்கள் தான் அத்தொழிலைப் பரிபூரணமாகச் செய்யக்கூடியவர்கள். மற்றவர்கள் கால பேதத்தால் ஆசிரியத் தொழிலிற் புகுந்து கொண்டால், அவர்கள் அத்தொழிலின் பேரால் சிறுவர்களுக் குத் தீமை செய்துவிடாதபடி தடுப்பதற்கும், நாளடைவில்

அவர்களையும் நல்ல ஆசிரியர்களாக மாற்றுவதற்கும் மனோ தத்துவ சாஸ்திரம் உதவுகின்றது.

ஆசிரியத் தொழில் செய்வதற்கு இயற்கை வரமுடையவர் மனோதத்துவ சாஸ்திரமும் கற்றுவிட்டால், அவர் ஓர் ஆசிரிய ரத்னமாக விளங்கக்கூடும் என்பதற்கு ஐயமில்லை.

---

3. மனோதத்துவ சாஸ்திரம்.

மனதின் தன்மை தத்துவங்களைப் பின் வரும் அத்யாயங்களில் ஆசிரியர்க்கு வேண்டிய அளவு மட்டும் சுருக்கி, விளக்கமாகக் கூறப்பட்டிருக்கிறது. மனது என்பது என்ன? அதின் தத்துவங்கள் என்ன? என்ற இக்கேள்விகட்கு இந்த ஒரே அத்யாயத்தில் விடை கூறிவிடுவது அசாத்தியம். இக்கேள்விகட்கு விடை கூறுவதுதான் இந்த நூல். அதற்கு முகவுரையாக அத்யாவசியமான சில விஷயங்களை மட்டுமே இங்குக் கூறுவோம்.

நமது உடற்கூற்றில் எலும்பு, தசை, இரத்தம், ஜீரணம், விஸர்ஜனம் என்று பல மண்டலங்கள் இருப்பதை அறிவோம். அவற்றுள் நரம்பு மண்டலமும் ஒன்று. அதற்கு சிரசு பிரதான ஸ்தலம். நமது தலை, ஓடுகளால் ஆகிய ஒரு அறை. அது நிரம்ப மூளை என்னும் ஸ்தூலப் பொருள் இருக்கிறது. அந்த மூளையின் தொடர்ச்சி நமது முதுகு எலும்பின் நடுவிலிருக்கும் குழல் வடிவமான நீண்ட அறைக்குள்ளும் செல்லுகிறது. அதற்கு முள்ளந்தண்டுக்கொடி என்று பெயர். தலையோட்டு அறைக்குள்ளிருக்கும் மூளை மூன்று பகுதியாகச் சேர்ந்திருக்கிறது. அதில் ஒரு பகுதிக்கு பெரிய மூளை என்று பெயர். மற்றொரு பகுதிக்கு சிறிய மூளை என்று பெயர். மூன்றும் பகுதிக்கு முகுளம் என்று பெயர். மூளையின் நாலாம் பகுதியாகிய முள்ளந்தண்டுக்

கொடி இந்த முகுளத்திலிருந்து ஆரம்பித்துச் செல்கிறது. நரம்பு மண்டலம் இத்துடன் முடிவதில்லை.

இரத்தாசயத்திலிருந்து நாடிகள் புறப்பட்டுத் தேகமெங்கும் சுத்த இரத்தத்தைக் கொண்டு சென்று, நாளங்கள் வழியாக அசுத்த இரத்தத்தைப் பெற்றுக்கொள்கிறது. இது போலவே மூளையிலிருந்து நரம்புக் கொடிகள் புறப்பட்டுத் தேகமெங்கும் கொடிகள்போல் பரவிக் கிடக்கின்றன. இக் கொடிகள்தான் உணர்ச்சிக்குக் காரண பூதமாய் இருப்பவை. உடலின் எந்தப் பாகத்திலும் ஏதாயினும் ஊறுபாடு ஏற்பட்டால், அந்த உணர்ச்சியை அந்த இடத்தில் பரவிக் கிடக்கும் நரம்புக் கொடி மூளைக்குச் செலுத்துகிறது. மூளை அந்த உணர்ச்சியைப் பெற்றுக்கொண்டு, ஏற்பட்ட ஊறுபாடு இன்ப வுணர்ச்சியாய் இருந்தால் அதற்கேற்கவும், துன்ப வுணர்ச்சியாய் இருந்தால் அதற்கேற்கவும் பரிகாரம் செய்யும்படி நரம்புக் கொடிகள் மூலமாகப் பல பல அங்கங்களுக்கும் செய்தி அனுப்பித் தொழில் செய்கிறது. மூளையும் அதன் நுண்ணிய பிரிவாகிய நரம்புக் கொடிகளும் சேர்ந்து நரம்பு மண்டலம். இந்த நரம்பு மண்டலம் முழுவதும் ஸ்தூலப் பொருள். இந்த ஸ்தூலப் பொருளாகிய மூளையின் மூலமாகத் தொழில் செய்கிற—அதாவது, வெளியுலகத்தில் நடப்பதை அறிந்து, அதை உணர்ந்து, அதற்கேற்றபடி தொழில் செய்கிற — சூட்சமமான சக்திதான் மனம். அதற்கு ரூபம் இல்லை. அது மூளையின் மூலமாக வேலை செய்கிறது. மூளையில்லையானல் மனம் இல்லை. மூளை அசௌக்கியப்பட்டால் மனதுக்கும் அசௌக்கியம், நன்ருய் வேலை செய்யாது. மூளை சுகமாய் இருந்தால் மனமும் சுகம், நன்ருய் வேலை செய்யும். ஆனலும், மூளை மனம் அல்ல, மனதின் மூலமாக வேலை செய்யும் ஒரு சூட்சமப் பொருள். மனதின் வேலைகள் மூன்று. அவை: அறிதல், உணர்தல், செய்தல்.



1. பெரிய மூளை.
2. சிறிய மூளை.
3. முகுளம்.
4. முள்ளந்தண்டுக் கோடி.



1. முள்ளந்தண்டுக் கோடி.
2. உணர்ச்சி நரம்பு.
3. சலன நரம்பு.

மனதின் முத்தொழில்களையும் மற்றத் தத்துவங்களையும் பற்றிச் சொல்லும் நூல் மனோதத்துவ சாஸ்திரம். இந்த மூன்று தொழில்களையும், மற்றத் தத்துவங்களையும் பற்றிப் பின்வரும் அத்தியாயங்களில் காண்க.

படத்துக்கு விளக்கம்.

மூளை. இதில் பல மடிப்புகள் காணப்படும். அதிகமான அளவான மூளையைத் தலையில் சிறிய அறைக்குள் மடித்து மடித்து அடக்கி வைத்திருப்பதால் இம்மடிப்புகள் காணப்படுகின்றன. மடிப்புகள் அதிகமானால் மூளையும் அதிகமென்று அர்த்தம். மடிப்புகள் குறைந்தால் மூளை குறைவு.

பெரிய மூளை. மூளையின் மொத்த கனத்தில் பெரிய மூளை எட்டில் ஏழுபாகம் கனமுள்ளது. நடுவில் காணப்படும் பிளவால் இரண்டு கோளங்களாகப் பிரிக்கப்பட்டுத் தெரிகிறது. இதன் வெளிப்பாகம் சாம்பல் நிறமாகவும் உட்பாகம் வெண்ணிறமாகவும் இருக்கின்றன. இது மற்ற மூளைகளின் வேலையை மேல்பார்வை செய்வதுடன், மனதின் முத்தொழில்களாகிய அறிதல், உணர்தல், செய்தல் ஆகிய இவற்றுக்கு இருப்பிடமாக இருக்கிறது.

சிறிய மூளை. இதன் வெளிப்பாகம் சாம்பல் நிறமாகவும் உட்பாகம் வெண்ணிறமாகவும் இருக்கின்றது. மனிதனுடைய ஆதீனத்துக்கு உட்பட்டு வேலைசெய்கிற தசைநார்களாகிய கை கால் முதலியவற்றை ஆளுவது இம் மூளை தான்.

முகுளம். இதன் வெளிப்பாகம் வெண்ணிறமாகவும் உட்பாகம் சாம்பல் நிறமாகவும் இருக்கும். ஜீவாதாரமான

முக்கிய உறுப்புக்களாகிய இரத்த மண்டலம், சுவாச மண்டலம், ஜீரண மண்டலம் முதலிய மனித சுயாதீனத்துக்குட்படாமல் வேலைசெய்யும் தசைநார்களை ஆளுவது இதுவே.

முள்ளந்தண்டுக் கோடி. இதன் வெளிப்பாகம் வெண்ணிறம், உட்பாகம் சாம்பல் நிறம். திடீரென்று முள் தைத்துவிட்டது. அவ்விடத்திலுள்ள நரம்புக் கொடி முள் தைத்த விஷயத்தை மூளைக்கு அறிவிக்கிறது. இந்த அறிவிப்பு முள்ளந்தண்டுக் கொடி வழியாகத்தான் பெரிய மூளைக்குப் போகவேண்டும். முள்ளந்தண்டுக் கொடி நடந்த விஷயத்தைப் பெரிய மூளைக்கு அனுப்பி, அங்கிருந்து விடை வரும் முன் தைத்த முள்ளால் ஏற்படக்கூடிய விபத்தை நீக்கும்படி, அச்செய்தியை மூளைக்கு அனுப்பாமல் தானாகவே நரம்புக் கொடிகளின் மூலமாய் காலுக்கும் கைக்கும் உத்தரவிட்டு, கால் மேலே எழும்பவும் கை அந்த முள்ளைப் பிடுங்கிவிடவும் ஏற்பாடு செய்கிறது. காலும் கையும் முள்ளந்தண்டுக் கொடியின் உத்தரவுக்குக் கீழ்ப்படிந்து முள்ளை அகற்றுகின்றன. பின்பு நடந்த விஷயம் பெரிய மூளைக்கு அறிவிக்கப்படுகிறது. [அது அதை அறிந்து, (இது அறிதல் தொழில்) வருந்துகிறது (இது உணர்ச்சித் தொழில்); மேற்கொண்டு செய்யவேண்டிய பரிகாரத்துக்கு அழுதுகொண்டே மருந்து முதலியன இடுவதற்கு மற்ற உறுப்புகளை ஏவுகிறது. (இது செய்தல் தொழில்).] இவ்வாறு முள்ளந்தண்டுக் கொடி பெரிய மூளையின் அனுமதி இல்லாமல் தொழில் செய்வதற்குப் பிரதிக்கிரியை என்று பெயர். ஆகவே, முள்ளந்தண்டுக் கொடி நரம்புக் கூட்டத்தையும் மூளையையும் இணைக்கிற மத்தியஸ்தமாகவும், பிரதிக்கிரியை நடப்பிக்கிறதாகவும் இருக்கிறது.

உணர்ச்சி நரம்பு. இது முள்ளந்தண்டுக் கொடியிலிருந்து புறப்பட்டு, உடல் உறுப்புக்களின் அந்தம்வரை

சென்றுகிடக்கும் நரம்புக்கொடி. உடலின் உறுப்புக்கு உண்டாகும் ஊறுபாட்டை முள்ளந்தண்டுக் கொடி வழியாக மூளைக்கு அறிவிப்பது அதன் வேலையாகும்.

சலன நரம்பு. உணர்ச்சி நரம்பு வாயிலாகத் தனக்கு வந்த உணர்ச்சியை மூளை அறிந்து, உடலுக்கு உற்ற ஊறுபாட்டுக்குச் செய்யவேண்டிய பரிகாரம் செய்யும்படி உடலின் உறுப்புக்களுக்கு உத்தரவு அனுப்பி வேலை செய்விக்கிற நரம்புக்கொடிகளில் ஒன்று இது.

தக்கவாறு போஷிக்கப்படாவிட்டாலும், சுத்தமான ஆகாயமின்மை, மது முதலியவற்றால் ரத்தம் அசுத்தமடைந்தாலும், ஓய்வில்லாமல் அதிக வேலை கொடுத்தாலும் மூளை சோர்வடைந்து, நன்கு வேலை செய்யக்கூடாத நிலைமையில் இருக்கும். இக்குறைகள் நேராவண்ணம் கவனித்துக்கொள்ள வேண்டும்.

---

4. கல்வித்துறையில் மனோதத்துவ சாஸ்திரத்தின் உபயோகம்.

பசியாலும் தாகத்தாலும் வருந்துகிறவன், நோயாளி, வெறியன், களைத்தவன், அதிகமான வெயில் அல்லது குளிர், காற்றின்மை இவற்றால் பீடிக்கப்படுகிறவன் முதலிய இவர்கள் மனதினால் செய்யக்கூடிய வேலைகளைச் செய்ய அசக்தர்களாய் இருக்கிறார்கள். ஏனென்றால், மனதுக்கும் உடலுக்கும் நெருங்கிய சம்பந்தமிருக்கிறது. சரீரம் சுகஸ்திதியில் இருந்தால் மட்டுமே மனம் வேலை செய்யக்கூடிய நல்ல ஸ்திதியில் இருக்கக்கூடும்.

ஒருவன் பல மணிக் காலமாய்ப் பல பல விஷயங்களைச் சிந்தித்து ஆராய்ந்து படித்து அல்லது எழுதி அல்லது

கணக்குப் போட்டிருக்கிறுன்; அவன் மனம் களைப்படைந் திருக்கிறது. மற்றெருருவன் துயரகரமான ஒரு செய்தியைக் கேட்டு மனக்கவலையில் ஆழ்ந்திருக்கிறுன். இவ்விருவருடைய மனமும் ஆரோக்கியமாக இல்லை. இவர்கள் மனம் நல்ல நிலையில் இல்லாதபடியால் இவர்களால் சரீரத்தால் உழைத்துச் செய்யக்கூடிய வேலைகளைச் செய்யமுடியாது. மனம் களைப்பு அல்லது வருத்தம் அடைந்தால் உடலும் களைத்துச் சோர்ந்து வேலை செய்யக்கூடாத நிலையை அடைகின்றது. இதனுல் உடலும் மனமும் ஒன்றை யொன்று சார்ந்திருக்கின்றன வென்று அறிகிறேம். இதைக் கருதித்தான் பாடசாலைச் சுற்றுப்புறம் குளிர்ச்சியும், நல்ல சுத்தமான காற்றேட்டமும், போதிய அளவு வெளிச்சமும் உடையதாக இருக்கவேண்டும் என்றும்; பிள்ளைகள் நல்ல ஆகாரம், ஆகாயம், தேகாப்பியாசம் இவற்றுல் சரீர சுகத்தைச் சதா பேணி வளர்த்துக்கொள்வது அத்தியாவசியமென்றும் சொல்லப்படுகிறது.

சில பையன்கள் கரும் பலகையில் எழுதப்பட்டிருக்கும் வாசகங்கள், படங்களைத் தவருக எழுதுவதைப் பார்க்கிறேம். சிலர் நாம் கேட்கும் வினுக்களுக்கு விடை கூருமல் விழித்துக்கொண்டு மௌனம் சாதிப்பதையும் காண்கிறேம். இப்பிழைகளைத் திருத்தும்படி முயன்றும் பயனில்லை; அவர்களுடைய கண், காதுகளில் பிழை இருக்க, நாம் அதை அறியாமல் அவர்களைத் திருத்த முயல்வது கல்லில் நார் உரிப்பதாகவே முடியும். ஐம்பொறிகள் நன்னிலையில் இருந்தால்தான் நல்ல மனே வேலை நடக்கும். அவர்களுடைய ஐம்பொறிகளில் ஊனமிருப்பதைக் கவனியாமல் 'மண்டு, கொஞ்சமேனும் மூளை கிடையாது' என்று சொல்லி, அவர்களை அடித்து இம்சிப்பது தவறு அல்லவா? பிள்ளையினுடைய ஐம்பொறிகளும் சரியாய் இருக்கின்றனவா என்று கவனித்த பின்பே, அவன் இயல்பாகவே விவேகத்தில் குறைந்தவனு, அல்லவா என்று தீர்மானிக்கவேண்டும்.

ஐம்பொறிகளாவன : மெய், வாய் (நாவு), கண், மூக்கு, செவி. இவ் வைம்பொறிகளின் மூலமாகவும் முறையே ஸ்பரிசம் (உணர்தல்), ரஸம் (ருசித்தல்), ரூபம் (பார்த்தல்), கந்தம் (மணம் அறிதல்), சப்தம் (கேட்டல்) ஆகிய ஐம்புலன்களும் உண்டாகின்றன. இந்த ஐம்பொறிகளிலும் குறைவு ஏற்பட்டால் ஐம்புலன்களிலும் குறைவு ஏற்படும். ஐம்பொறிகளும் சுகஸ்திதியில் இருப்பவர்களுடைய அறிவுக்கும் குருடு, செவிடு ஆகிய உறுப்புக் குறைவுடையவர்களுடைய அறிவுக்கும் வேற்றுமை இருப்பதைக் காணலாம். குருடரும் செவிடரும் விஷயங்களைக் காணவும், கேட்கவும் இயலாதிருப்பதால் அநேக விஷயங்களை அறியக்கூடாமலிருக்கிறார்கள். ஐம்பொறிகளும், அப்பொறிகளின் வாயிலாய் உண்டாகும் ஐம்புலன்களும் இல்லாத ஒரு மனுஷன் இருக்கிறான் என்று வைத்துக்கொள்வோம். அவனுக்கு மூளையிருந்தும் அவன் எவ்விதமான அறிவும் அடையக்கூடுமா? கூடாது. மனிதன் அறிவடைவதற்கு - மனதிலே அறிதல், உணர்தல், செய்தல் ஆகிய முத்தொழில்களும் நடைபெறுவதற்கு ஐம்புலன்களும் அடிப்படையானவை. இவ் வைம்புலன்களும் மனதுக்கு வாசல்கள். இவ் வாசல்கள் அடைபட்டால் மனதின் தொழில்கள் நடைபெறா. மனதின் தொழில்கள் நடைபெறாவிட்டால் மனோவளர்ச்சி இல்லை. ஆதலால், தக்க மனோவளர்ச்சியுண்டாகும்படி ஐம்புலன்களைப் பயிற்சி செய்யவேண்டும். ஐம்புலன்களின் வளர்ச்சி மனதின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. இந்த ஐம்புலப் பயிற்சி கொடுக்கும் நோக்கத்தைக் கருதித்தான் எலிமெண்டரி பாடசாலைக்குரிய பாடத்திட்டமும் (Syllabus), போதனா முறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. சிறுவருக்குப் பொருட்கள், படங்கள் முதலிய உபகரணங்களைக் காட்டி அவர்கள் அவற்றைக் கண்ணால் பார்த்தும், கையால்

தொட்டும், மூக்கால் முகர்ந்தும், நாவால் ருசித்தும், அவற்றைப்பற்றி ஆசிரியர் சொல்கிறவற்றைக் காதால் கேட்டும் தங்கள் ஐம்புலன்களின் வழியாகவும் கல்வி கற்க வேண்டும். இதைப் பின்னால் விளக்கமாய்க் கூறுவோம்.

பூர்வகாலத்தில் கல்வி கற்பிக்கப்பட்டு வந்த முறைகள் தவறானவை என்று மனோதத்துவ சாஸ்திரம் எடுத்துக்காட்டுகிறது. முன்னோர் அக்காலத்தில் மனது என்பது ஒரு வெற்று அறை என்றும், அதற்குள் பாடங்களை அடைந்து வைக்கலாம் என்றும் எண்ணினார்கள். பின்கண்ட சூத்திரம் இக்கருத்தை வலியுறுத்துகிறது.

கோடல் மரபே கூறுங் காலை

....

இருவென இருந்து சொல்லெனச் சொல்லி
பருகுவன் அன்ன ஆர்வத்தன் ஆகி
சித்திரப் பாவையின் அத்தகவு அடங்கிச்
செவி வாய் ஆக நெஞ்சு களன் ஆகக்
கேட்டவை கேட்டு விடாது உளத்து அமைத்துப்
போ எனப் போதல் என்மனார் புலவர்.

இதன் பொருளாவது: "மாணவன் ஆசிரியரிடம் பாடம் கேட்கும் முறை என்னவென்றால், இரு என்று ஆசிரியர் சொன்னபின் இருந்து, முன் படித்த பாடத்தைச் சொல் என்று அவர் சொன்னவுடனே மாணவன் அதை மனப்பாடமாய்ச் சொல்லவேண்டும். பின்னர், அவன் புதுப்பாடம் கேட்கும்போது, சித்திரத்தில் எழுதிய பிரதிமைபோல அசைவற்றிருந்து, காது கல்வியாகிய நீரைப் பருகும் வாயாகவும், மனம் அந்நீரைக் கொள்ளும் இடமாகிய வயிறாகவும் ஆசிரியரிடம் கேட்டவற்றை மனத்தில் அடக்கிக்கொண்டு ஆசிரியர் 'போ' என்ற பின் எழும்பிச் செல்லவேண்டும்." ஆசிரியர் சொல்லிக்கொண்டே போவதை மாணவன் அசைவற்றிருந்து கேட்டு மனப்பாடம் செய்துகொள்ளவேண்டியது

என்பது இதன் கருத்து. விஷயங்களை நிறைய நெட்டுருச் செய்தலே கல்வியாகக் கருதப்பட்டது. மனது ஒரு அறை, அதை நிரப்பவேண்டும் என்று எண்ணினார்கள்.

தற்காலம் பிரசங்க முறையில் பாடம் சொல்லி வைப்பது தவறு என்கிறோம். ஏனென்றால், மனதும் உடலைப் போலவே வளரக்கூடிய பொருள். உடலுக்குக் காலத்துக்கு ஏற்ற உணவு கொடுத்து வளர்ப்பதுபோல மனதுக்கும் அதன் வளர்ச்சிக்கு ஏற்றவாறு பயிற்சி கொடுத்து அதை வளர்ப்பதுதான் தற்காலக் கல்வியின் நோக்கம். மனதை நிரப்புவது கல்வியாக எண்ணப்பட்டது முற்காலத்தில். இக்காலம் மனதைப் பயிற்சி செய்வதுதான் கல்வியாக எண்ணப்படுகிறது. மனது முதலில் புலப்பாட்டு நிலையில் இருக்கிறது. இந்நிலையிலிருந்து பொருளறிவு நிலைக்கு வளர்ந்து, அந்நிலையிலிருந்து பொது அறிவு அல்லது பகுத்தறிவு நிலைக்கு வளரும்படி மனதைப் பயிற்றுவித்து—உற்றுநோக்குதல், கற்பனாசக்தி, ஆழ்ந்து யோசித்தல், உண்மை காண்டல் முதலிய மனதின் தத்துவங்கள் பரிபூரணமடையும்படி செய்வதே கல்வி என்று எண்ணப்படுகிறது.

---

5. பிரக்ஞை அல்லது தன்னறிவு.

நாம் தூங்கும் சமயம் தவிர மற்ற நேரமெல்லாம் நமது மனது வேலை செய்துகொண்டே இருக்கிறது. மனம் எப்பொழுதும் வெளியுலகத்துடன் சம்பந்தப்படுகிறது. மனதையும் வெளியுலகத்தையும் சம்பந்தப்படுத்திவைப்பது ஐம்புலன்கள். இவைகளின் மூலமாய் மனதில் அறிதல், உணர்தல், செய்தல் ஆகிய முத்தொழில்களும் நடக்கின்றன. உதாரணமாக, ரஸ்தாவில் ஓடுகிற ஒரு மோட்டார். இது வெளியுலகத்திலுள்ள விஷயம். கண்புலன் இதைப் பார்க்கிறது. தென்காசிக்குப் போகிற மோட்டார் என்று மனம்

அறிகிறது. கோவில் மணியடிக்கும் சப்தம். இது ஒரு வெளியுலக விஷயம். காதுப்புலன் இதைக் கேட்கிறது. ஆராதனை வேளை என்று மனம் அறிகிறது. சிறிது காலத்துக்கு முன் தமது தந்தையை இழந்துவிட்ட நண்பர் நமக்கு எதிரே வருகிறார். இது வெளியுலக விஷயம். கண்புலன் அவரைப் பார்க்கிறது. மனம் அவரை இனம் அறிந்து, அவர் தந்தை இறந்துவிட்டதை விசாரித்து வருந்துகிறது. இவ்வாறு மனம் எப்போதும் வெளியுலகத்திலுள்ள விஷயங்களுடன் சம்பந்தப்பட்டுக்கொண்டே இருக்கிறது ஒரு விஷயம் மனதுக்கு வருகிறது, போகிறது. மற்றொரு விஷயம் வருகிறது, அதுவும் போகிறது. இவ்வாறு பல விஷயங்கள் மனதுக்கு வருவதும் போவதுமாக இருக்கிறது. வெளியுலகத்திலிருந்து காணும், கேட்கும், முகரும் விஷயங்களைவிட்டு விலகி மனது தனித்து இருப்பதில்லை. அது வெளியுலகத்திலிருக்கும் விஷயங்களை அறியும்போது பிரக்ஞை அல்லது தன்னறிவு என்கிறோம். மனிதன் தூங்கும்போது மட்டும் பிரக்ஞை யற்றிருக்கிறான். மனமும் ஓய்ந்து வேலைபற்று இருக்கிறது. மரத்திலிருந்து விழுந்து சோர்ந்து கிடப்பவனைப் பிரக்ஞை யற்றவன் என்கிறோம். ஏனென்றால், அவனுடைய மனம் தனது சரீரத்துக்கு உற்ற துன்பத்தையும், தன்னைச் சூழ வெளியுலகத்தில் நடக்கும் மற்ற விஷயங்களையும் அறியக் கூடாத நிலையில் அடங்கி இருக்கிறது; வெளியுலகத்திற்கும் மனதுக்கும் சம்பந்தம் இல்லை.

---

6. மனதின் தொழில்கள்.

மனம் சதா வெளியுலகத்துடன் சம்பந்தப்பட்டுத் தொழில் செய்கிறதாகச் சொன்னோம். மனதுக்குத் தன்னறிவு இருக்கும்போது அறிதல், உணர்தல், செய்தல்

என்னும் முத்தொழில்கள் நடைபெறுகின்றன. இம்மூன்று தொழில்களும் தனித்தனியாக நடைபெறமாட்டா. எவ்வளவு சிறிய காரியமாய் இருந்தாலும் அதினும் இம் மூன்று தொழில்களும் நடைபெறுவதைக் காணலாம்.

ஒருவன் ஒரு விஷப்பாம்பைக் காண்கிறான், நடுங்குகிறான், ஓடுகிறான்.

பாம்பைப் பார்த்தான் — இது அறிதல் தொழில்.

பயந்து நடுங்குகிறான் — இது உணர்ச்சித் தொழில்.

ஓட யத்தனித்தான், ஓடினான் — இது செய்தல் தொழில்.

மனதின் மூன்று தொழில்களிலும், இந்தச் சந்தர்ப்பத்தில் பயம் ஆகிய உணர்ச்சித் தொழில்தான் பிரதானமாய் இருக்கிறது. இன்னொரு உதாரணம்:

ஒருவன் கணக்குப்போடுகிறான். இதிலும் மனதின் முத்தொழில்களும் நடைபெறுகின்றன.

கணக்கைச் சரியாகப் போடவேண்டுமென்று விரும்புகிறான் — இது உணர்ச்சித் தொழில்.

அதைப் பிழையறச் செய்யுமாறு விடாது முயல்கிறான் — இது செய்தல் தொழில்.

கூட்டல், வகுத்தல், கழித்தல் முதலியன போடுகிறான் — இது அறிதல் தொழில்.

இதில் அறிவுத் தொழிலே பிரதானம். மற்றவை இரண்டாம்பக்ஷம். இப்படியே மனதின் எத்தொழிலை வகுத்துப்பார்த்தாலும் அதில் இம்மூன்று தொழில்களும் கலந்தே நடக்கக் காணலாம். ஆனால், அவற்றுள் ஒரு சமயம் ஒரு தொழிலும் மற்றொரு சமயம் வேறு ஒரு தொழிலும் பிரதானமாய் இருக்கும். நிற்க.

மனம் என்பது பெரியோருக்கும் சிறியோருக்கும் ஒன்றேயாயினும், பெரியோருடைய மனதுக்கும் மனதின் தொழில்களுக்கும், சிறியோருடைய மனதுக்கும் மனதின் தொழில்களுக்கும் வேற்றுமை உண்டு. பெரியோருடைய மனம் வளர்ந்து அனுபவத்தால் முதிர்ந்தது. சிறியவருடைய மனம் இனி வளர்ந்து அனுபவமடையவேண்டிய கீழ்ப் படியில் இருப்பது. ஒரு சிறு பையன் கார் ஓடுவதைப் பார்க்கிறான்; காரிலுள்ள சக்கரங்கள் சுற்றுவது, மேல் தட்டில் ஆள்கள் உட்கார்ந்திருப்பது, கார் சப்தமிடுவது இவைகளைப் பார்த்துச் சந்தோஷிக்கிறான். ஒரு பெரியவர் அந்தக் காரைப் பார்க்கிறார். "இதில் 20 பேர் உட்காரக்கூடும். இந்தக் கார் திருநெல்வேலியிலிருந்து தென்காசிக்குப் போவதற்குத் தலைக்கு சார்ஜ் எவ்வளவு? இந்த வண்டிக்கு எண்ணெய், டிரைவர் செலவுகள் என்ன ஆகும்? முதலாளிக்கு என்ன லாபம் இருக்கக்கூடும்? தென்காசிக்கு ரயில் பிரயாணம் சௌகரியமா? கார் பிரயாணம் சௌகரியமா?" என்றிவ்வாறான எண்ணங்கள் அந்தக் காரைப் பார்த்த அவருக்கு உண்டாகக்கூடும். இருவரும் ஒரே காரைத்தான் பார்த்தார்கள். பார்த்தபின் இருவர் மனதிலும் நடக்கும் வேலைகளுக்கு வித்தியாசம் இருக்கிறது. ஆகவே, சிறுவருடைய மனோ நிலைக்கும், மனதின் தொழில்கட்கும், பெரியவர்களுடைய மனோ நிலைக்கும் மனதின் தொழில்கட்கும் போந்த வித்தியாசம் இருக்கிறது.

உடலைப்போலவே மனமும் ஒரு வளரும் பொருள். சரீரம் குழந்தைப் பருவம், குமார பருவம், வாலிபப் பருவம் என்று பல நிலைகளையடைந்து, அவற்றைக் கடந்து வளர்ந்து பூரணப்படுவதுபோல, மனமும் படிப்படியாகப் பல நிலைகளை அடைந்து வளர்கின்றது. சரீர வளர்ச்சியை எவ்வாறு பருவத்துக்குப் பருவம் நூல் இட்டு வரையறுக்க முடியாதோ

அவ்வண்ணமே மனோவளர்ச்சிக்கும் வரையறுத்துப் பருவங்களைக் கூறவொண்ணாது. ஆனால், பொதுப்படக் கூறலாம். சரீரத்தின் சக்தி தொடர்ந்தே வளருகிறது; விட்டு விட்டு வளருகிறதல்ல. அப்படியே மனதின் சக்தியும் விட்டு விட்டு வளராமல் தொடர்ந்தே வளரும். கீழ் அத்தியாயத்தில் மனோ வளர்ச்சியின் பல நிலைகளையும் அந்நிலைகளுக்கு ஏற்ப மனதின் முத்தொழில்களும் என்ன ஸ்திதியில் இருக்கின்றனவென்றும் கூறுவோம்.

---

7. மனோவளர்ச்சியின் பல நிலைகள்.

முதல் நிலை. $2\frac{1}{2}$ முதல் 6 வயது வரை. இது பிள்ளைப் பருவம். இப்பருவத்தில் பிள்ளைகளுக்குப் பொருட்களின் சாதாரண வித்தியாசம் தவிர நுட்பங்களை அறிய முடியாது. ஆரஞ்சுக்கும் எலுமிச்சைக்கும் வேற்றுமை தெரியாது. எல்லாக் கிழவர்களும் தாத்தாதான். முருகன் ஐந்து வயதுடைய சிறு பையன். அடிக்கடி 'சோடா, சோடா' என்று கேட்டுத் தொந்தரவு செய்வான். ஒரு வெற்றுச் சோடாப் புட்டியில் குளிர்ந்த நீரை அடைத்து, உடைக்கிற மாதிரியாக 'புஸ்' என்று சொல்லி 'இந்தா சோடா, குடி' என்றால் குடித்துவிடுவான். இந்தப்படி பலதடவை கொடுத்தாலும் குடித்துவிட்டு, சோடா சாப்பிட்டதாக நினைத்துத் திருப்தியடைவான். இந்நிலையில் சிறுவருக்குப் பொருட்களின் ரூபம், சப்தம், மணம், ருசி இவற்றில் வேற்றுமை நன்கு தெரியாது. ஞாபகம் மிகக் குறைவு. சர்க்கரை கேட்டு அழுகிற பிள்ளையை எடுத்துத் தெருவிலே கொண்டுபோய் 'இந்தக் காரைப் பார், குதிரையைப் பார்' என்றால் சர்க்கரையை மறந்துவிடும். வீட்டிலுள்ள சாமான்களை எடுத்து வைத்து விளையாடின இடத்தில் போட்டுவிட்டு வந்துவிடுவார்கள். அவர்களுடைய கற்பனை சக்தி இஷ்டம் போல

இருக்கும். தடியை எடுத்துக் கால்களுக்கு இடையில் வைத்துக்கொண்டு 'உம், உம், குதிரை! நன்ருய் ஓடு, புல் போடுகிறேன்' என்பார்கள். உண்மைக்கும் உண்மையல்லாத வற்றிற்கும் பேதம் தெரியாது. ஏதோ பொருட்களைப் பார்ப் பார்கள், கேட்பார்கள், ருசிப்பார்கள், முகர்வார்கள், உணர் வார்கள்; அவ்வளவு தான். அவர்களுடைய ஐம்புலன்களும் பிரதானமாய் இருக்கும். ஆதலால், மனுேதத்துவ சாஸ்திரி கள் இந்த நிலையைப் புலப்பாட்டு நிலை என்பர். பெரும்பாலும் பிள்ளைகள் இந்த நிலையிலிருந்து அடுத்த நிலைக்குத் தாண்டு கிற காலத்தில் பாடசாலைக்கு வருகிருர்கள்.

பிள்ளைகளுக்கு 6 முதல் 8 வயதுவரை அவர்களுடைய சரீரமும் மூளையும் வளருகிறது இவை வளரவேண்டிய திருக்கும் இக்காலத்தில் அவர்களுக்கு சரீரம், மனது இவற்றைப் பொறுத்து அதிகமான, கஷ்டமான வேலைகள் கொடுக்கக்கூடாது. கொடுத்தால் வளர்ச்சிக்கு ஏதுவான சக்தி வேலைசெய்வதில் செலவழிந்து அவர்கள் வளர்வதற் கிடையூருகிக் குள்ளமாகிவிடுவார்கள். வியாதிக்கும் இட மாகும். ஆதலால், இக்காலத்தில் அவர்கள் நன்ருய் ஆரோக்யமாக வளரும்படி அவர்கட்கு அதிக வேலை கொடுக்காமலிருக்கவேண்டும். இது முன் சொல்லப்பட்ட புலப்பாட்டு நிலைக்கும், இனி சொல்லப்போகிற நிலைக்கும் இடையில் இருப்பதால், இதைக் காலம் மாறுதல் நிலை என்பர். ஆனுலும், இது ஒரு முக்கியமான தனிநிலை அல்ல.

இரண்டாம் நிலை. 8 முதல் 12 வயது வரை. இக்காலத் தில் தான் பிள்ளைகள் சுமாராக 4-ம் வகுப்புமுதல் 7 அல்லது 8-ம் வகுப்புவரை படிக்கிருர்கள். பிள்ளைகளுடைய வாழ்க் கையில் இந்நிலை மிகவும் முக்கியமானது. இந்நிலையில் அவர் கள் பொருட்களின் ரூபம், வடிவம், நிறம், சப்தம், ருசி, மணம் முதலிய தன்மைகளைத் தெளிவாயும் திட்டவட்டமாயும்

அறியக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆகையால், மனோ தத்துவ சாஸ்திரிகள் இந்நிலைக்குப் பொருளறிவு நிலை என்று சொல்கிறார்கள்.

இக்காலத்தில் சரீர வளர்ச்சி அதிகம் இல்லை. மூளை பூரண வளர்ச்சி யடைந்தாகிவிட்டது. எவ்வளவு மனோ வேலை கொடுத்தாலும் சலிப்படையாமல் செய்யக்கூடும். சக்தியை நன்கு செலவிடலாம். களைப்பைத் தாங்கலாம். விஷயங்களில் கவனம் உண்டாகும். ஞாபக சக்தி அபாரம். ஏராளமான செய்யுட்கள், வாய்ப்பாடுகள், சூத்திரங்கள் முதலியவற்றை மனப்பாடம் செய்வது சுலபம். அந்நிய பாஷைகள் படிப்பிப்பதற்கும் இது ஏற்ற காலம். கீழ்ப் படிதல், உண்மையுரைத்தல, சுத்தமாய் இருத்தல் முதலிய நற்குணங்களும் நல்லொழுக்கங்களும் இக்காலத்தில்தான் உண்டாகவேண்டும். இது நற்பழக்கங்கள் உண்டாவதற்கு உரிய சிறந்த காலமாய் இருப்பதால், இந்நிலையை நற்பழக்கம் உண்டாம் நிலை (The Formative Period) என்றும் சொல்வர். இப்பருவத்திலிருக்கும் பிள்ளைகள் அங்குமிங்கும் ஓடிச்சாடுவதும், குதிப்பதும், கூச்சல்போடுவதும், மற்ற வர்களைப் பார்த்து அவர்களைப்போல நடிப்பதும், அதிக சுருசுருப்பாக இருப்பதும் அவர்களுடைய இயற்கை.

மூளை பூரண வளர்ச்சியடைந்து புத்தம் புதியதாக இருக்கும் இக்காலத்தில் பிள்ளைகளுடைய மனதை அநேக மான நல்ல விஷயங்களால் பயிற்சிசெய்யும் ஆசிரியர் சிறந்த தெய்வ கைங்கரியம் செய்கிறவரே யாவர். இதனைப் பின்னர் இன்னும் விளக்குவோம்.

மூன்றும் நிலை. 12 முதல் 18 வயதுவரை. இதில் சரீரம் வளர்ச்சியும் பருமனும் அடையும். அறிவு விசாலம் அடை கிறது. புதிய விஷயங்களை அறியவேண்டுமென்ற அவா அதிகம் உண்டு. கவனமும் ஞாபக சக்தியும் இருக்கும்.

அன்பு, அபிமானம், கோபம், விருப்பம் முதலிய உணர்ச்சி கள் நிரம்பி இருக்கும். கீழ்ப்படியாமை காணப்படும். அடித்தாலும் கோபித்தாலும் இணங்கிச் சரிப்படமாட்டார்கள். "நீ வகுப்பிலே பெரிய பையன். பெரிய குடும்பத்தைச் சேர்ந்தவன். உங்கள் அப்பாவை எனக்குத் தெரியும். நாங் கள் இருவரும் பள்ளிக்கூடத்தில் சகபாடிகள். அவர் சிறு பிள்ளையிலேயே அமர்ந்த சுபாவம். கவனமாய்ப் பாடம் படிப்பார். உன்னைப்பற்றி எனக்கு அதிக அபிமானம். தெரியாத விஷயங்களை என்னிடம் கேள். சொல்லிக் கொடுக்க ஆயத்தமாய் இருக்கிறேன்." இவ்வாறு பேசினால் அவர்கள் மனதை ஈடுபடச் செய்யலாம். இந்நிலையில் பொது அறிவு அல்லது பகுத்தறிவு விருத்தியடைகிறது. மற்றவர் களைப் பார்த்து நடித்த காலம்போய், இப்பொழுது அவர்கள் தாங்களே யோசித்து ஒரு நோக்கத்துடன் வேலைசெய்கிறார் கள். ஏதாவது குற்றம் செய்கிறவனை 'நீ பெரிய பையன். சிறு பையனை அடிப்பது நியாயமா? சிறு பையனை மன் னித்து அவனுக்கு ஆலோசனை சொல்லி அவனை நல்லவ னாக்குவது உனது கடமையில்லையா?' என்று இவ்வாறு சமயோசிதம்போல பேசி, அவனுடைய பகுத்தறிவையும் நியாயவுணர்ச்சியையும் தூண்டிவிடவேண்டும். இக்காலத்தில் பிள்ளைகளுக்கு உற்சாகம் அதிகம். அந்த உற்சாகத்தைத் தக்க வழியில் திருப்பிவிடவேண்டும். தவறினால் தீமையான, வீணான காரியங்களைச் செய்வதில் ஊக்கம் காட்ட ஆரம் பித்து விடுவார்கள். ஆதலால், வகுப்பிலே மானிட்டராக, விளையாட்டு ஸ்தலத்தில் காப்டனாக, பிரசங்க தர்க்க கூட்டங் களுக்குத் தலைவனாக, செக்ரடேரியாக—இப்படி ஏதாயினும் பொறுப்பான வேலை கொடுத்தால் தங்கள் உற்சாகத்தை நல் வழியில் செலவிட்டு நாணயமான வேலை செய்வார்கள்.

———

மனோவளர்ச்சியின் மூன்று நிலைகளும், அந்நிலைகளில் மனதின் முத்தொழில்களும் எவை என்று விளக்கும்

அட்டவணை

மனோவளர்ச்சியின் நிலைகள்	மனோவளர்ச்சியின் நிலைகளில் மனதின் முத்தொழில்கள்		
	அறிதல்	உணர்தல்	செய்தல்.
i. புலப்பாட்டு நிலை. $2\frac{1}{2}$–6 வயது வரை காலமாறுதல் நிலை. 6–8 வயதுவரை	புலனறிதல்–ஸ்பரிசம், ரூபம், சப்தம், ரசம், கந்தம்.	திட்டமில்லாத உணர்ச்சிகள் – கோபம், பயம், அன்பு முதலிய உணர்ச்சிகளில் திட்டம் இல்லை.	முற்றிலும் சுயாதீன மில்லாத செயல்கள். பிரதிக்கிரியைகள் என்றும் சொல்லலாம். தும்முதல், இருமுதல், கொட்டாவி விடுதல், சுவாசித்தல் முதலியன.
ii. பொருளறிவு நிலை. 8 – 12 வயது வரை	பொருளறிதல்–வெளியுலகத்திலுள்ள பொருட்களின் ரூபம், வடிவம், நிறம், மணம், சப்தம், ருசி இவைகளைத் தெளிவாக அறிதல்.	அகவுணர்ச்சிகள்–கோபம், பயம், விருப்பம், அன்பு முதலியன.	தூண்டுதல்களுக் கிணங்கி வேலைசெய்தல். விஷயங்களை அறியவேண்டு மென்ற அவா, மற்றவர்களைப்போல நடித்தல், சுருசுருப்பாக ஓடிச் சாடித் திரிதல், கூச்சல் போடுதல் முதலிய இவை இப்பருவத்தில் இயற்கையான தூண்டுதல். இத் தூண்டுதல்களுக்கு ஈடுபட்டே செயல் செய்வார்கள். இவை பூரண சுயாதீனமான செயல்கள் அல்ல.
iii. பொது அறிவு அல்லது பகுத்தறிவு நிலை. 12முதல் 18 வயதுவரை. பகுத்தறிவு நிலை ஆரம்ப ஸ்திதியிலிருந்து வளர்ந்து, 18 வயதுக்குப் பின் பூரண பகுத்தறிவு நிலையை அடைகிறது.	பகுத்தறிதல்–பொருட்களின் பொதுவான தாரதம்மியம் குணங்களைப் பகுத்து அறிதல். உதாரணங்களிலிருந்து பொது விதி அறிதல்.	ஸ்திரமான உணர்ச்சி–அகவுணர்ச்சிகள் அடங்கி, ஒரு நோக்கத்துடன் வேலை செய்யவேண்டுமென்ற திடமான தீர்மானமான உணர்ச்சி.	தூண்டுதல்களுக் கடங்கி வேலை செய்யாமல், சுயாதீனமாக வேலை செய்தல்.

முன் பக்கத்தில், அட்டவணையில் மூன்றாக வகுத்துக் காட்டியபடி மனோநிலை மூன்று திட்டவட்டமான கட்டுப் பாட்டுக்குள் நின்று அந்தந்த வயது வந்தவுடன் திடீரென்று வளர்வதும், அடுத்த நிலைக்கு மாறுவதும் இல்லை.

புலனறிவு நிலையிலிருப்பவர்களுக்குப் பொருளறிவு நிலை யிலிருப்பவர்களுக்குரிய மனதின் தொழில்கள் சிறுபான்மை இருக்கும். அப்படியே பொருளறிவு நிலையிலிருப்பவர்கட்குப் பொது அறிவு நிலையிலிருப்பவர்களுக்குரிய மனதின் தொழில் களும் சிறுபான்மை இருக்கும். மனதின் வளர்ச்சி இங்கே காட்டியிருக்கிறபடி விட்டு விட்டு வளர்வது இல்லை; தொடர்ந்தே வளரும். அப்படியிருக்க மனதின் வளர்ச்சியை மூன்று தனி நிலைகளுக்குட்படுத்திச் சொல்லியிருப்பதின் காரணம் என்ன? ஒவ்வொரு நிலையிலும் அந்தந்த நிலைக்குரிய முத்தொழில்களும் பிரதானமாயும், மற்ற நிலைக்குரிய தொழில்கள் அருகியும் காணப்படும். முதல் நிலையிலிருக் கிற பிள்ளைக்கு இரண்டாம் நிலைக்குரிய மனத் தொழில்களில் சில காணப்பட்டாலும், மூன்றாம் நிலைக்குரிய மனத்தொழில் கள் காணப்படா என்பது நிச்சயம்.

இன்னுமொரு முக்கியமான குறிப்பு. மனதின் நிலை வளர்வதற்கு இசைய மனதின் தொழில்களும் வளர்வதைக் காண்க. புலப்பாட்டு நிலையில் அறிதல் வேறு; பொருளறிவு நிலையில் அறிதல் வேறு; மூன்றாம் நிலையில் அறிதல் வேறு. அப்படியே உணர்தலும் செய்தலும் நிலைக்கு நிலை உயர்ந்து வளர்ந்து செல்வதைக் காணலாம். மனநிலையின் வளர்ச்சி என்பது அதின் தொழில்களின் வளர்ச்சியைப் பொறுத்தது. அறிதல் தொழில், புலன் அறிதலில் இருந்து பொருளறித லுக்கும், பின் பகுத்தறிதலுக்கும் வளர்கின்றது. அப்படியே உணர்தல் தொழிலும் செய்தல் தொழிலும் மனதின் நிலைக்கு ஏற்ப வளர்ந்து செல்வதைக் கவனிக்கவேண்டும்.

மனேவளர்ச்சி எதைப் பொருத்தது?

பெற்ருேர் ஆரோக்கியமான மூளையும், கல்வி யறிவும் உடையவர்களாய் இருப்பின் பிள்ளைகளின் மனம் சுலப மாயும் நன்ருயும் வளரும். கல்வியுடைய பெற்ருேரின் பிள்ளைகட்கும், கல்லாத பெற்ருேரின் பிள்ளைகட்கும் மன வளர்ச்சியில் வேற்றுமை இருப்பதை வெளிப்படையாகக் காண்கிருேம்.

கல்லாத பெற்ருேரின் பிள்ளைகளும் சில வேளைகளில் இயல்பாகவே சீக்கிரம் மனேவளர்ச்சி யடையக்கூடியவர் களாக இருப்பதைக் காண்கிருேம். ஒரே பெற்ருேரின் இரண்டு பிள்ளைகளில் ஒருவன் திறமைசாலியாகவும் மற்ற வன் குறைவாகவும் இருக்கக்காண்கிருேம். மேலும் கற்ற பெற்ருேருடைய பிள்ளைகள் சிலர் மந்தமாக இருக்கிருர்கள். இதற்குக் காரணம் அவர்களுடைய பிறவிதான். இது கட வுளின் திட்டம் என்றே சொல்லவேண்டும்!

தமிழில் ஒருவருக்கு அதிகப்பிரியம். ஆனல், அவர் ஒரு குக்கிராமத்தில் தமிழ் நன்கு கற்றவர்கள் அல்லது நல்ல தமிழ் நூல் நிலையங்கள் இல்லாத இடத்தில் பாமர ஜனங்கள் நடுவில் வசித்துவருகிருர். மற்ருெருவர், இயல் பாக நன்கு தமிழ்க் கற்கும் திறமை இல்லாதிருந்தும், பல தமிழ்ப் புலவர்களும் தமிழ் வாசகசாலைகளும் நிரம்பிய வித்தியா ஸ்தலத்திலே வாசம் பண்ணுகிருர். இவ்விருவரில் யாவர் அதிக அறிவை அடையக்கூடும் என்பது வெளிப் படையானது. ஆதலின், மனிதனுடைய அறிவு வளர்ச் சிக்குச் சுற்றுப்புற சகவாஸம் சாதகமாய் இருக்கவேண்டும் என்று அறிகிருேம். A ஒரு எளிய சேரியில் வசிக்கும் பாமரப் பெற்ருேரின் பிள்ளை. B நாகரிகமான பட்டணத் தெருவில் வசிக்கும் கற்றுத் தேர்ந்த பெற்ருேரின் பிள்ளை. இருவரும் ஒரே வகுப்புப் படிக்கிருர்கள். B-க்குத்

தெரியக்கூடிய பல விஷயங்கள் A-க்குத் தெரிவதில்லை. பாடசாலைக்கு வெளியே பிள்ளைகளுக்கிருக்கும் சுற்றுப்புறம் இது. இதை யறியாமல் ஒரு ஆசிரியர் A போன்ற நிலைமையி லிருக்கும் ஒருவனைப் பார்த்து 'என்னடா, முட்டாள், இந்தச் சின்ன விஷயங்கூடத் தெரியாதா?' என்று கோபித்து, சலிப்படைவது யாருடைய குற்றம்!

பாடசாலை, வகுப்பறை இவற்றின் சுற்றுப்புறம் பிள்ளைகளுடைய மனோவளர்ச்சிக்கு அனுகூலமாக அமைந்திருக்க வேண்டும். பூமிசாஸ்திரம், சரித்திரம், இயற்கை சம்பந்தமான படங்கள், சித்திரங்கள், உருவங்கள்; பலவித உலோகங்கள்; கற்கள், மண்; தானியங்கள்; பிராணிகள்; அவற்றின் எலும்பு, தோல், இறகு, அலகு, நகங்கள்; இலை, புஷ்பம், காய், பழங்களின் உருவங்கள்; அளவைப்படிகள், உழக்குகள், நிறைகள் முதலிய சாமான்கள் நிரம்பிய மியூசியம்; அந்தந்தக் கிராம ஜில்லாவிலுள்ள பயன்படத் தக்க பலவித மரம், செடிகள், மலர்கள் வளர்ந்திருக்கும் பாடசாலைத் தோட்டம், விளையாட்டு ஸ்தலம் முதலிய இவை பிள்ளைகளுடைய மனோவளர்ச்சிக்கனுகூலமான சுற்றுப்புறம் என்னலாம். சந்தைக்கூட்டம், ரஸ்தா, மதுக்கடை, இயந்திர சாலைகளின் புகை, இரைச்சல் முதலிய இவை சுற்றுப் புறத்தில் இருத்தல் நன்றன்று.

மனோவளர்ச்சிக்கு ஆரோக்யமான நல்ல சரீரம் அவசியம். நோய், பலவீனம், சோம்பல், தூக்கம், களைப்பு இவை இல்லாத நிலையில், நல்ல சுத்தமான உணவு, உடை, ஆகாயம், தேகாப்பியாசம் இவற்றால் உடலைப் பேணி நல்ல நிலையில் வைத்துக்கொள்ளவேண்டும்.

மனோவளர்ச்சியும் கல்வியும்.

மனோவளர்ச்சிக்குக் காரணமும் சாதகமுமான சில விஷயங்களை முன் குறிப்பிட்டிருக்கிறோம். இனி கல்வியால்

மனதின் வளர்ச்சிக்கு எவ்வாறு அனுகூலமுண்டாகிறது என்று கவனிப்போம். மனது இயற்கையாகவே வளரக் கூடியது. வெறும் இயற்கை வளர்ச்சி மட்டும் மனதுக்குப் போதாது. இயற்கை வளர்ச்சியால் மனிதன் சமுதாய வாழ்க்கைக்கு, நாகரிகமான வாழ்க்கைக்கு, காலதேச வர்த்தமானங்களுக்கு இசைய இடம், பொருள், ஏவல் அறிந்து வாழ்க்கை செய்வதற்குப் போதிய அறிவை அடைவது அசாத்தியம். மனித சம்பந்தமில்லாமல் காட்டில் வசிக்கும் மனிதனுடைய மனதின் இயற்கை வளர்ச்சிக்கு மேல் — மனதின் இயற்கை வளர்ச்சி வளரமுடியாது. மனிதனை சமூக வாழ்க்கைக்கு ஏற்றவனாக மாற்றி அமைப்பதுதான் கல்வியின் வேலைகளில் ஒன்று. கல்வியால் உண்டாகும் மனோவளர்ச்சி மனிதனை சமூக வாழ்க்கைக்கு லாயக்குள்ளவனாக்கும் என்பது நிச்சயம்.

ரூஸோ என்னும் கல்வி நிபுணர் 'இயற்கையைப் பின் பற்று' என்றார். 'மனதின் இயற்கை வளர்ச்சியே போதுமானது, கல்வியால் மனம் வளரவேண்டுவதில்லை' என்பது அதின் கருத்து அல்ல. ஆனால், மனதின் இயற்கைத் தன்மை, அது படிப்படியாக வளரும் விதம், அதின் ஒவ்வொரு நிலைக்கும் உரிய முத்தொழில்களின் இயல்பு இவற்றை ஆராய்ந்து, கற்பிக்கும் முறையை அதற்கு ஏற்றவாறு மாற்றி அமைக்கவேண்டும் என்பதுதான் அதின் அர்த்தம். உதாரணமாக, பிள்ளைகள் விளையாடும், பாடும் இயல்புள்ளவை. கணக்குப்பாடம் படிப்பதில் பிரியம் இல்லை. இது அவர்களுடைய இயற்கை. நாம் செய்வதென்ன?

$3+3=6$

$4+4=8$ என்று இப்படிச் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தால் அவர்கள் அதில் பற்றுக்கொள்ளமாட்டார்கள்.

பிள்ளைகளிடம் புஷ்பங்கள், கலர் கோலிகள், கட்டைகள், குச்சுகள், பவளங்கள், முத்துக்கள் முதலிய பொருட்களைக்கொடுத்து, அவற்றிலிருந்து இரண்டு மூன்றுகவும் இரண்டு நாலாகவும் எடுத்துச் சேர்த்து, முறையே $3+3=6$; $4+4=8$ என்ற கூட்டல் கற்பிக்கலாம். கலர் சாக்குகளைக் கொண்டு எழுதுவதில் பிள்ளைகளுக்குப் பிரியம். ஆகையால், மூன்றும் மூன்றும் ஆறு அல்லது நாலும் நாலும் எட்டு என்று காட்டும்படி பழங்கள், பூக்கள் முதலிய பொருட்களை வரைந்து காட்டும்படி அப்பியாசம் கொடுக்கலாம். மேலும்,

மூன்றும் மூன்றும் ஆறு
முன்னல் வந்து பாரு.
நாலும் நாலும் எட்டு
கையால் தாளம் கொட்டு.

என்று இப்படிப்பட்ட எளிய பாடல்களைச் சொல்லி, அவர்கள் நடனம், தாளம், இராகத்துடன் அவற்றைப் படிக்கும்படி சொன்னல், சந்தோஷமாகவும், விளையாட்டாகவும், பற்றுதலுடனும் படிப்பார்கள்.

பிள்ளைகளுக்குக் கணக்குக் கொடுக்கும்போது வெறுமனே இலக்கங்களைமட்டும் சொல்லக் கூடாது. இலக்கங்களைப் பிள்ளைகளுடைய அனுபவத்துக்குட்பட்டதும், அவர்களுக்கு ப்ரீதியை உண்டாக்கக்கூடியதுமான மலர்கள், பழங்கள், பெப்ரமின்டு முதலிய பக்ஷணங்கள், வண்ணத்திப்பூச்சி, அணில், பட்சி, ஆடு முதலிய பொருட்களுடன் சம்பந்தப்படுத்திக் காட்டவேண்டும். உதாரணமாக, ரத்னத்துக்கு அவனுடைய அம்மா 3 மலைப்பழம் கொடுத்தார்கள்; அவனுடைய மாமா 3 மலைப்பழம் கொடுத்தார்கள். அவனுக்குக் கிடைத்த மொத்தம் மலைப்பழம் எத்தனை? மாணிக்கம் 7 பெப்ரமின்டு வாங்கினன். அதில் அவனுடைய தங்கை

மரகதத்துக்கு 3 பெப்ரமின்டு கொடுத்துவிட்டான். இனி அவனிடம் மீதி எத்தனை பெப்ரமின்டு இருக்கும்? இவ்வாறு பொருட்களுடன் இணைத்துக் காட்டாவிட்டால், பிள்ளைகள் 3, 4, 6, 7, முதலிய லக்கங்களில் ப்ரீதியற்றுப் படிப்பதற்கு இஷ்டப்படார்கள்.

ஆகவே, மனோவளர்ச்சிக்குக் கல்வி அவசியம். கல்வியை, மனதின் இயல்பை அறிந்து, அதற்கு ஏற்ற முறைகளைக் கையாண்டு கற்பிக்கவேண்டும்.

---

8. ஐம்புலன்களின் பயிற்சி.

இந்த அத்தியாயத்தைப் படிக்கும்போது மனவளர்ச்சியைக் காட்டும் அட்டவணையில் புலப்பாட்டு நிலையையும் அந்நிலையில் மனதின் தொழிலாகிய அறிதலையும் பிரதானமாக ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும். நிற்க,

ஐம்புலன் என்பது என்ன?

மெய், கண், காது, மூக்கு, நாவு இவ்வைந்தும் ஐம்பொறிகள் என்னப்படும். [சரீரம் முழுவதும் இருக்கும் சர்மம் மெய் எனப்படும். ஆனாலும், கையின் விரல்கள் ஸ்பரிசம் அறிவதில் சிரேஷ்டமானவைகளா யிருப்பதால், மெய் என்னும் இடங்களில் கை, கை விரல் என்றே நினைத்துக்கொள்ளவேண்டும்.] இந்த ஐம்பொறிகள் மூலமாகவும் உணர்தல் (ஸ்பரிசம்), பார்த்தல், கேட்டல், மணத்தல், ருசித்தல் என்னும் ஐம்புலன்களும் உண்டாகின்றன. ஐம்பொறிகள் வேறு; ஐம்புலன்கள் வேறு. ஐம்பொறிகள் உடலின் ஸ்தூல உறுப்புக்கள். ஐம்புலன்கள் அந்த ஸ்தூல உறுப்புக்களின் வாயிலாய் உண்டாகும் சூட்சம உணர்ச்சிகள். இந்த உணர்ச்சிகள் ஐந்தையும் மனதின் உறுப்புக்கள் என்னலாம்.

ஐம்புலன்களின் முக்கியம்.

ஐம்புலன்களிலும் பார்வைதான் பிரதானமானது. ஏனெனில், மனது அதிகம் அறிவைப் பெறுவதற்குப் பார்வையே காரணம். பார்வைக்கு அடுத்தாற்போல, பல பல விஷயங்களையும் கேட்டு அறிவடைவதினாலே கேட்டல் இரண்டாம்தரமான புலன். ஆயினும், குழந்தைப் பருவத்தில் 'இது இன்ன பொருள், இது இன்ன சப்தம்' என்று பார்வையாலும் கேள்வியாலும் அறிவதற்கு இயலாதிருக்கும் நிலைமையில், குழந்தைகள் 'இது குளிர், இது வெப்பம், இது சுரசுரப்பு, இது வழுவழுப்பு, இது மென்மை, இது வன்மை' என்று ஸ்பரிசம் அறியக்கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், இளமையில் ஸ்பரிசப் புலனே முக்கியமானது. (Feeling is the original and sight is the foremost). மேற்கூறிய பார்வை, கேட்டல், ஸ்பரிசம் ஆகிய இம்முப் புலன்களாலும் மனது அதிகமான அறிவை அடையக்கூடியதாக இருப்பதால் ஐம்புலன்களிலும் இவை முக்கியமானவை. மணத்தல், ருசித்தல் இவை அறிவு வளர்ச்சிக்கு இன்றியமையாதவைகளே. ஆயினும், இவற்றால் மனதுக்குண்டாகக்கூடிய அனுபவம் குறைவாக இருப்பதால் இவற்றைக் கடைசியாகக் கூறுகிறோம்.

உடலின் உறுப்புக்கள் யாவும் வன்மையும் சுகமுமாய் இருந்தால்தான் உடல் வேலைசெய்வதற்கு ஏற்றதாய் இருக்கும். மனதுக்கும் உறுப்புக்கள் இருக்கின்றன என்று சொன்னோம். அவ்வுறுப்புக்கள் ஐம்புலன்களே. இப்புலன்கள் பயிற்சியடைந்து வளர்ச்சி பெற்றால்தான் மனமும் வளர்ச்சியடையும். மனது ஒரு கட்டடம் என்று வைத்துக் கொண்டால் ஐம்புலன்களும் அதற்கு அஸ்திபாரம். அஸ்திபாரத்தைப் பொறுத்தே கட்டடத்தின் பலம் இருக்கும். ஆதலால், மன வளர்ச்சி செய்வதைத் தமது தொழிலாகக்

கொண்ட ஆசிரியர், இளமைப் பருவத்திலிருக்கும் மாணவருடைய ஐம்புலன்களையும் நன்கு பயிற்சி செய்யவேண்டும். இதுவே அவருடைய முதற் கடமை. புலப்பாட்டு நிலையிலிருக்கும் பிள்ளைகளுடைய மனதின் முதல் தொழிலாகிய புலனறிதலில் ஸ்திரப்படவேண்டும். இது ஸ்திரப்பட்டால் தான் பிள்ளைகள் இரண்டாம் நிலைக்கு வரும்போது அவர்களுடைய பொருளறிதல் தெளிவாகவும் பிழையின்றியும் இருக்கும். பொருளறிதல் அவ்வாறு இருந்தால்தான் மனதின் மூன்றும் நிலையில் பகுத்தறிவு சரியாக இருக்கும். புலனறிதலில் குறைவு ஏற்பட்டால் பொருளறிதலிலும், பகுத்தறிதலிலும் பிழை ஏற்பட்டு, அதனுல் மனவளர்ச்சி குன்றும். ஆதலால், மனதின் அஸ்திபாரமாகிய புலன்களை நன்கு பயிற்றுவிக்கவேண்டிய தவசியம்.

ஐம்புலன்களின் பயிற்சி என்றுல் என்ன?

ஒருவன் ஒரு பழுதையைப் பார்த்தான். பாம்பு என்று நினைத்துப் பயந்தான். வாஸ்தவத்திலோ அது பழுதைதான். பழுதையைப் பார்த்தது கண்தான். கண் பார்த்ததில் ஒரு பிழையும் செய்யவில்லை. கண்மூலமாக உண்டான பார்வைப் புலன் மனதுக்குப் போனது. மனது அந்தப் பார்வையைக்கொண்டு, பழுதையைப் பாம்பு என்று தப்பிதமாகத் தீர்மானித்துவிட்டது. கண் ஒரு பொருளைப் பார்க்க மட்டும் செய்யும். அது என்ன என்று தீர்மானிக்கும் சக்தியும் அதிகாரமும் அதற்கு இல்லை, மனதுக்கே உண்டு. கண் தனக்குக் கிடைக்கும் பார்வைப்புலனை மனதுக்கு அனுப்பிவிடவேண்டியதுதான் அதன் வேலை. இந்த வேலையில் அது ஒருபிழையும் செய்யவில்லை. மனந்தான் தவருகத் தீர்மானம் செய்து பயந்தது. ஆகவே, உண்மையில் ஒரு பொருளைப் பார்ப்பது கண் அல்ல, மனமே என்று அறிகிறோம்.

ரஸ்தா வண்டையில் பருமனுன எலுமிச்சம்பழமுள்ள கூடையைக் காண்கிறது ஒரு குழந்தை. 'அந்த ஆரஞ்சு வேண்டும்' என்று கேட்டு அழுகிறது. பழத்தைப் பார்த்த பார்வைப் புலனை மனது பெற்றுக்கொண்டு, எலுமிச்சையை ஆரஞ்சு என்று தீர்மானித்த குற்றம் மனதைச் சேருமே யொழிய கண்ணைச் சேராது. எலுமிச்சையையும் ஆரஞ்சை யும் ஒப்பிட்டு வித்தியாசம் காணக்கூடிய அனுபவம் மன துக்கு இன்னும் ஏற்படவில்லை. ஆதலால், பார்வைப் புலன் தன்னிடம் வந்தவுடனே அது எலுமிச்சையை ஆரஞ்சு என்று தவருகக் காண்கிறது.

ஒருவன் மணிச் சப்தத்தைக் கேட்கிருன். கோவில் மணிச் சப்தம் என்று நினைக்கிருன். வாஸ்தவத்தில் அது பள்ளிக்கூடத்து மணிச் சப்தம். காது மணிச் சப்தத்தைக் கேட்டதில் ஒரு தவறும் செய்யவில்லை; அது மணிச் சப்தத் தைக் கேட்டுக் கேள்விப் புலனை மனதுக்கு அனுப்பியது. காதின்வழியாக சப்தம் மனதுக்குப் போனது. மனது அதைத் தவறுதலாகத் தீர்மானித்தது. காதுக்கு சப்தத்தை வாங்கி மனதுக்கு அனுப்பும் ஜோலி ஒன்றுதான். அந்த சப்தத்தைப் பெற்று, அது இன்ன சப்தம்தான் என்று முடிவாகக் கேட்கும் அதிகாரம் மனதுக்கே இருக்கிறது. ஆகவே, உண்மையில் கேட்பது காது அல்ல, மனமே.

ஐம்பொறிகளும் புலன் அறிவதில் தவறு செய்வ தில்லை. அப்பொறிகள் சரியாகப் புலன் அறியும்படி நாம் அவைகளைச் சீர்ப்படுத்தவும் பயிற்றுவிக்கவும் அவசியமில்லை. ஆனல், பொறிகள் மூலமாக உண்டாகும் ஐம்புலன்களையும் அறியும் மனம் அப்புலன்களைக்கொண்டு வெளி யுலகத்தி லுள்ள விஷயங்களைப் பிழையின்றிச் சரியாகத் தீர்மானிக்கும் படி மனதைப் பயிற்சி செய்வதுதான் ஐம்புலப் பயிற்சியாகும். அதாவது, மனது தன்னுடைய ஐந்து உறுப்புக்களாகிய

ஐம்புலன்களாலும் வெளியுலகத்திலிருந்து தனக்குக் கிடைக்கும் பார்வை, கேள்வி, ஸ்பரிசம், ருசி, மணம் ஆகிய இவற்றைச் சரியாகத் தீர்மானிக்கும்படி அந்த மனதைப் பயிற்சி செய்வதுதான் ஐம்புலப் பயிற்சியாகும்.

ஐம்புலன்களைப் பயிற்சிசெய்வது எப்படி?

1. ஒரு முறை ஒரு பொருளைப் பார்ப்பது, அதைப் பற்றி ஆயிரம் தடவை கேட்பதைவிடத் தெளிவாய் இருக்கும். அணைக்கட்டு, நீர்வீழ்ச்சி, மலை, கடல், அலை, கப்பல், மில் இவைகளைப்பற்றி எத்தனை தடவை சொன்னாலும், அவற்றை ஒரு முறையேனும் நேரில் பார்ப்பதற்கு ஈடாகாது. ஆசிரியர் பொருட்களைப்பற்றிப் பேசுவதை அல்ல, பொருட்களைக் காட்டிக் கற்பிப்பதைப் பிரமாணமாகக் கொள்ளவேண்டும். பொருட்களை வகுப்பறைக்குக் கொணர்ந்து காட்டலாம். பொருள் இருக்கும் இடத்துக்குப் பிள்ளைகளைக் கொண்டு போகலாம். பாடசாலைத் தோட்டம், மியூசியம், அந்தந்த இடங்களிலுள்ள சரித்திரம், பூமிசாஸ்திரம், இயற்கைப் பாடங்கள் சம்பந்தமான கட்டடம், கோட்டை, ஸ்தூபி, நதி, கால்வாய், அணை, குளம், பாலம், பட்சி, விலங்குகள், தாவரங்கள் முதலிய இப்பொருட்களைக் காட்டும்படி பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே இட்டுச்செல்லலாம். பொருட்கள் கிடைப்பது அரிதாய் இருக்குமாகில், அவைகளைப் போல உருவங்கள், சித்திரங்கள் செய்து காட்டலாம். அச்சுப் படங்கள் இல்லையாகில் ஆசிரியரே படம் எழுதிக் காட்டவேண்டும். பூமி உருண்டை, டெலூரியன், பூசந்தி, ஜலசந்தி, தீபகற்பம், தீவு, நதி, டெல்டா, ஜில்லா, தேசம் இவை போன்ற உருவங்கள், படங்கள் உண்டாக்கலாம். ஆசிரியர் பிள்ளைகளின் ஒத்துழைப்பினால் அவர்களையும் கொண்டு இவைகளைச் செய்தால், இப்பொருட்களால் அவர்களுக்கு அதிகப் பலனுண்டாகும். பாடம் நடக்கும்போதே

அவசியமானவற்றைக் கரும்பலகையில் சித்திரம் எழுதிக் காட்டிக் கற்பிக்கலாம். சித்திரம் வரைவது ஆசிரியருக்கு இன்றியமையாத கலையாகும். பாடத்துக்கு அவசியமான சித்திரங்கள், மாதிரி உருவங்கள் — களிமண், தாள் வேலை கள் — இவைகளைப் பிள்ளைகளும் செய்யவேண்டும்.

பாடசாலைத் தோட்டத்தைப்பற்றி இவ்விடத்தில் சில வார்த்தைகள் சொல்கிறோம். ஒவ்வொரு பாடசாலையிலும் ஒவ்வொரு நல்ல தோட்டம் இருக்கவேண்டும். பாடசாலை அதிகாரிகள் பாடசாலைத் தோட்டத்தை வற்புறுத்து வதற்குத் தக்க காரணம் உண்டு. ஆசிரியருடைய மேற் பார்வையில், அவருடைய ஆலோசனையின்படி பிள்ளைகள் தாமாகவே தோட்டத்தைக் கொத்தி, செடிகளுக்கு ஏற்ற எருக்களையிட்டு விதைபோட்டு நீர் பாய்ச்சவேண்டும். விதை முளைத்தல், இலை விடுதல், பூத்தல், காய்த்தல், விதை பரவு தல், செடிகளுக்குண்டாகும் பகை, அப்பகையை ஒழிக்கும் விதம் இவைகளைப் பிள்ளைகள் கண்டு படிக்கவேண்டும். ஆகவே, தோட்டம் தாவரங்கள், இலைகள், பூக்கள், காய்கள் பூச்சிகள், பட்சிகளைப்பற்றிப் படிப்பதற்கு உதவுகிறது. இரண்டாவது, அழகான மலர்ச்செடிகளை வளர்த்து இயற்கை மேம்பாட்டை மனுஷன் அனுபவத்தில் அறிந்து இன்பமடை வதற்கு ஏதுவாகிறது. மூன்றாவது, நமது நாடு விவசாய தேசம். இந்தியப் பாடசாலைத் தோட்டங்களில், அந்தந்தப் பிரதேசத்தில் கிராமவாசிகள் பயிரிடுகிற பயிர் வருக்கங்களைப் பயிரிட்டு அதன் வளர்ச்சி, பலன் இவற்றைப் பிள்ளைகள் திட்டமாய்க் கணித்து அறியவேண்டும். இதனால் பிள்ளை களும் தங்கள் பிற்கால வாழ்க்கையில் கிரமமான, லாபகர மான விவசாயம் செய்து தமக்கும் நாட்டுக்கும் க்ஷேமம் உண்டாக ஏதுவாகும். வெறுமனே மொச்சை, கடலை, கம்பு முதலியவற்றைப் பற்றி பாடசாலை வகுப்பறைக்குள் வைத்து

ஆசிரியர் சொல்லிக்கொடுத்து நோட்டு எழுதிப்போடுவதில் பயனில்லை. எலிமெண்டரிப் பாடசாலையின் நோக்கம், நல்ல கிராம வாழ்க்கைக்கு ஏதுவாகப் பிள்ளைகளைப் பயிற்று விப்பதே. ஆதலால், கிராமவாசிகளின் பொருளாதார நிலைமை சீர்ப்படும்படி விபசாயம் விருத்தியாய் நடைபெறுவதற்கு உதவியாகக் கிராமப் பாடசாலைத் தோட்டம் முக்கியமான கவனம் பெறவேண்டும். பாடசாலைத் தோட்டத்தின் அபி விருத்திக்கு ஆசிரியருடைய முயற்சியும், பிள்ளைகளுடைய உழைப்பும், சர்க்காருடைய உதவியும், கிராமவாசிகளுடைய ஒத்துழைப்பும் இருக்கவேண்டும்.

பாடசாலை மியூசியம்: இதைப்பற்றியும் இவ்விடத்தில் இரண்டொரு வார்த்தைகள் சொல்வோம். பாடசாலை மியூசியத்தை அற்புதமான சாமான்கள் நிரப்பி வைக்கப்பட வேண்டிய கண்காட்சிசாலை என்று சிலர் கருதுவர். இது பெரும் பிழை. பிள்ளைகள் பார்த்துப் படிப்பதற்கு ஏதுவான பலவகைப்பட்ட பொருட்களும் மியூசியத்தில் இருக்கவேண்டும். உலோகங்கள், மண், கல் வகைகள், பிராணிகள், அவற்றின் அலகு, விரல், தோல், இறகு முதலியன; படிகள், நிறைகள்; படங்கள், உருவங்கள்; கடல்தரும் பொருட்கள்; மலைதரும் பொருட்கள்; தானிய வகைகள் முதலியன மியூசியத்துக்கு ஏற்றவை. மியூசியம் என்பதற்குத் தமிழில் கல்விப்பொருள் நிதி என்னலாம். கல்வி கற்பிப்பதற்கு உதவியாகப் பிள்ளைகளுக்கு ஒரு ஆசிரியர் காட்ட விரும்பும் பொருட்கள் யாவும் நிரம்பி இருப்பது குறை வற்ற மியூசியமாகும். மியூசியத்தில் வைத்தால் கெட்டுப் போகக்கூடிய பழம், காய் முதலியவற்றை வேண்டும்போது வாங்கிக்கொள்ளவேண்டியது. புறு, கோழி, தேன் ஈ, முயல், மீன் இவைகளைப் பாடசாலையில் வைத்து வளர்க்கலாம்.

2. பொருட்கள் மூலமாய்ப் பாடம் கற்பிக்கவேண்டு மென்று சொன்னோம். ஆசிரியர் ஒரு பொருளைப் பிள்ளை கட்குக் காண்பிப்பதும் அவர்கள் அதனைக் கண்ணால் பார்ப்பதும் மட்டும் போதா. பொருளின் நிறம், வடிவம், ரூபம் ஆகிய இவற்றைப் பார்ப்பதால் கண்ணின் புலனுக்கு மட்டும் பயிற்சி உண்டாகும்; மற்ற புலன்களுக்குப் பொருட்களால் பயிற்சியில்லை. ஆதலால், ஆசிரியர் ஒரு பொருளைப் பிள்ளைகள்முன் வைத்தால் பிள்ளைகளின் எல்லாப் புலன்களுக்கும் வேலை கொடுக்கவேண்டும். கண்ணால் பார்ப்பதுடன் விரலால் தொட்டு ஸ்பரிசிக்கவும், மூக்கால் மூகரவும், கூடுமானால் நாவால் ருசிக்கவும் செய்யவேண்டும். ஆரஞ்சு: இதனைப் பிள்ளைகளுக்குக் காட்டி, அதைப்பற்றி அவர்களுக்குச் சொல்வது மட்டும் போதாது. ஆரஞ்சைப் பார்ப்பதால் அதன் நிறம், வடிவம் இவைகளைப்பற்றிய அறிவு மட்டும் உண்டாகும். அதைத் தொட்டு ஸ்பரிசித்தால் பழத்தின் தன்மை—மெதுவாய், பளபளப்பாய், சிறிய சிறிய மேடுபள்ளமான தோல் உடையதாய் இருக்கிறது என்ற அறிவும் உண்டாகும். அதை முகர்ந்து பார்க்கச் செய்வதால் அதன் நன்மணத்தைப்பற்றிய திட்டமான அறிவு மனதுக் குண்டாகும். இதனால் எலுமிச்சை, நாரத்துப் பழங்களுக்கும் ஆரஞ்சுக்கும் மணத்தில் வேற்றுமை அறியலாம். பின்னர் ஆரஞ்சை உடைத்து ருசிக்கச் செய்வதால் அதன் இனிய ருசியைப்பற்றிய அறிவு நாவின் புலன் மூலமாய் ஏற்படு கிறது. இவ்வாறு பல புலன்களின் வாயிலாகவும் அறி வுண்டாக்கும்படி எல்லாப் புலன்களுக்கும் வேலை கொடுக்க வேண்டும். இனி ஆரஞ்சு விளையும் இடம், பயிரிடும் முறை, அதன் விலை, வியாபார முறை, அதன் பயன் இவற்றை ஆசிரியர் சொல்ல பிள்ளை விருப்புடன் கேட்பதால் ஆரஞ்சைப்பற்றிய பூரணமான அறிவை உண்டாக்கலாம். ஒருக்கால், ஆரஞ்சு விளைகிற தோட்டம் ஒன்றுக்குப்

பிள்ளைகளை இட்டுக்கொண்டுபோய் ஆரஞ்சு மரம், பழம் இவற்றைப் பிள்ளைகட்குக் காண்பித்தால் அறிவு அதிகத் தெளிவடையும். அல்லது ஆரஞ்சு மரத்தின் படத்தை யேனும் காட்டலாம். இப்படிச் செய்வதற்குப் பதிலாக ஆரஞ்சு, உருண்டை வடிவம், நல்ல மணம், ருசி உடையது என்று மட்டும் சொல்வதில் பயன் இல்லை.

எல்லாப் பாடங்களிலும் பிள்ளைகளின் ஐம்புலன் களையும் உபயோகிக்க இடம் அளிக்கவேண்டும். நிறங்களைப் பற்றி ஒரு பாடம் என்று வைத்துக்கொள்வோம். பல நிற முள்ள கோலிகளைப் பிள்ளைகளிடம் கொடுத்துப் பாடம் கற்பிக்கவேண்டும். அவைகளைக் கலந்து வைத்து, தனித் தனியே நிறவாரியாகப் பிரித்து அடுக்கும்படி சொல்லலாம். பல நிறக் குச்சுகளைக் கலந்து வைத்து நிறவாரியாகப் பிரிக்கும்படி சொல்லலாம். பல நிறச் சாக்குகளைக் கொடுத்து பச்சை நிறமுள்ள ஒரு பொருளின் படம், சிவப்பு நிறமான ஒரு பொருளின் படம் என்று இப்படி வரையும்படி சொல்லலாம். இதனால் நிறங்களைப்பற்றிப் படிப்பிப்பதில் கண் புலனுக்கு மட்டும் பயிற்சி உண்டாகக் கூடும். மற்றப் புலன் களுக்குப் பயிற்சி கொடுக்க இப்பாடத்தில் இடம் இல்லை. வாஸ்தவம்தான். இதுபோன்ற சில பாடங்களில் எல்லாப் புலன்கட்கும் பயிற்சிக்கு இடம் இராது. ஆனாலும், கூடிய வரை எல்லாப் புலன்கட்கும் பயிற்சி கொடுக்கும்படி பிரயாசப்படவேண்டும்.

3. எந்தப் பொருளையும் பிள்ளைகள் பார்த்து, கையினால் தொட்டு ஸ்பரிசித்து, கூடுமானால் ருசித்தும் முகர்ந்தும் பார்த்து அப்பொருளின் எல்லா அம்சங்களையும் கவனிக்கச் செய்தல் வேண்டும். பிள்ளைகள் தாமாக உற்றுநோக்கிக் கண்டு அறிய வேண்டிய விஷயத்தை ஆசிரியர் தாமே சொல்லிவிடக்கூடாது.

அவர்கள் தம் ஐம்புலன்களாலும் அறியும் விஷயத்தைத் திருத்தவும், ஸ்திரப்படுத்தவும், ஒழுங்குப்படுத்தவும் ஆசிரியர் சில தக்க வினக்கள் கேட்கவேண்டும். அந்த வினக்கள் பிள்ளைகள் தமது புலன்களை இன்னும் நன்ருய் உபயோகிப் பதற்கு ஏதுவாகத் தூண்டிவிடக்கூடியவைகளாய் இருக்க வேண்டும். அப்படியின்றி ஆசிரியரே சொல்லிவிட்டால், பிள்ளைகள் பிரயாசத்துடன் தமது புலன்களை உபயோகியாமல் விட்டு விடுவர். இதனுல் ஒரு பொருளை அவர்கள் முன்பு வைத்தும் புலன்களின் பயிற்சிக்கு அதிகச் சந்தர்ப்பம் இல்லா மற்போகின்றதல்லவா ?

4. எலிமெண்டரிப் பாடசாலைப் பாட ஜாபிதா முழுவதும் பிள்ளைகளின் புலப் பயிற்சிக்கு உதவியானவைகளே. கின்டர்கார்ட்டனில் தாள், கயிறு, குச்சு, கட்டை, களிமண், மணல் வேலைகள், இலைகள், பூக்கள் சேகரித்தல், கலர் கொண்டு படம் எழுதுதல், இயற்கைப் பொருட்பாடங்கள், கதை சொல்லுதல், பாட்டுப் படித்தல், காப்பி எழுதுதல், கைத்தொழில் முதலிய இப்பாடங்களின் வாயிலாக—பல வகைப்பட்ட நிறம், வடிவம், கனம் தன்மையுடைய பலவித பொருட்களின் மூலமாய் — ஐம்புலன்களுக்கும் பயிற்சி கொடுக்கலாம். ஐம்புலன்களின் பயிற்சிக்குப் பொது விதி என்னவென்ருல்: பொருள் முதல்; பேச்சு இரண்டாவது. ரூபமானதைக் கொண்டு அரூபமானதைக் கற்பிக்க. எல்லாப் புலன்களையும் உபயோகிக்க. பிள்ளைகள் தாமாகக் கவனித் துக் கண்டறிய வேண்டிய விஷயத்தை ஆசிரியரே சொல்லி விடக்கூடாது.

ஐம்பொறிகளின் பாதுகாப்பு. ஐம்பொறிகளிலும் முக்கிய மாகக் கண்ணுக்குக் கெடுதி வரக்கூடும். வகுப்பறையில் அளவுக்கதிகமான வெளிச்சம் இருந்தாலும், குறைந்த வெளிச்சம் இருந்தாலும் கண்ணுக்கு ஊனம் ஏற்படும்.

ஆதலால், அளவான வெளிச்சம் பிள்ளையின் இடது புறத்தி லிருந்து வரவேண்டும். வலது புறத்திலிருந்து வந்தால் புத்தகம், நோட்டுகளில் நிழல் விழும். இரவில் மேல் இருந்து வெளிச்சம் வரலாம். புத்தகத்தைக் கண்ணுக்கு சுமார் 12 அங்குல தூரத்தில் பிடிக்கவேண்டும். கண்ணிலிருந்து நீர் வடிதல், வலி முதலிய முதற் சின்னங்கள் தெரிந்தவுடனே கண்ணில் பிழை ஏற்படுவதை அறிந்து ஏற்கனவே வைத்திய ரிடம் சிகிச்சை பெற்றுக்கொள்ளும்படி கவனிக்கவேண்டும். பார்வை, கேள்வி இவற்றில் குறைவுள்ள பிள்ளைகளைக் கரும் பலகைக்கும், ஆசிரியருக்கும் பக்கத்திலிருக்கும் ஆஸனங்களில் அமர்த்தவேண்டும். பொதுவாக பாடசாலைச் சுற்றுப்புறமும் வகுப்பறையும் பிள்ளைகளின் பஞ்ச இந்திரியங்களும் சுகஸ்திதி யிலிருந்து வேலை செய்வதற்கு ஒத்தாசையாக இருக்க வேண்டும்.

---

9. பொருளறிதல் அல்லது விஷயத்தெளிவு.

PERCEPTION.

ஆரஞ்சு வெளியுலகத்திலுள்ள ஒரு பொருள். இது ஆரஞ்சு என்று தெளிவாக அறிவதில் பெரியோராகிய நமக்குச் சிரமம் இல்லை. ஆனால், சிறுவர் அதனை ஆரஞ்சு என்று தெளிவாக அறியமாட்டார்கள். எலுமிச்சையை ஆரஞ்சு என்றும், ஆரஞ்சை எலுமிச்சை என்றும் தவறாக எண்ணு வார்கள். சோடாவுக்கும் சீனிக்கும் வேற்றுமை தெரியாது. கோவில் மணிச் சப்தத்துக்கும் பள்ளிக்கூடத்து மணிச் சப்தத்துக்கும் வேற்றுமை தெரியாது. இவ்வாறு வெளி யுலகத்திலுள்ள விஷயத்தை—பொருளைத் தெளிவாக அறிவது ஆரம்பத்திலேயே சரியாக அமையாது.

சோடா உப்பைச் சீனி என்று நினைத்துக் கேட்டு அழும் குழந்தைக்குக் கொஞ்சம் உப்பைக் கொடுத்தால் அது அதை வாயில் இட்டு உதப்பித் துப்பிவிடுகிறது. சீனி அல்ல என்ற விஷயத் தெளிவு; இது உப்புத்தான் என்ற பொருளறிவு அப்போது அனுபவத்தால் ஏற்படுகிறது. சீனியின் ருசி பிள்ளைக்கு ஏற்கனவே தெரியும். உப்பின் ருசி புதிதாக ஏற்படுவது. புதிதாக ஏற்படுகிற உப்பின் ருசியோடு, முன்னரே அறிந்திருக்கிற சீனியின் ருசியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது அது உப்புத்தான், சீனி அல்ல என்ற தெளிவு ஏற்படுகிறது. உப்பின் ருசி புதிதாக ஏற்பட்ட புலன் அறிவு. சீனியின் ருசி பிள்ளையின் மனதில் தங்கியிருக்கும் பழைய அனுபவம். புதிய புலனறிவும் பழைய அனுபவமும் கலந்து பொருளறிவு அல்லது விஷயத் தெளிவு ஏற்படுகிறது.

மணிச் சப்தத்தைக் குழந்தை கேட்கிறது. பிரசாதம் கிடைக்குமென்று கோவிலுக்கு ஓடுகிறது. கோவில் மணிச் சப்தம் என்று நினைத்தது குழந்தை. ஆனால், பாவம்! கோவில் அடைத்துக்கிடக்கிறது. மறுநாள் அதே மணிச் சப்தம் கேட்கிறது. குழந்தைக்கு அது கோவில் மணிச் சப்தம் அல்ல, பள்ளிக்கூடத்து மணிச்சத்தம் என்ற விஷயத் தெளிவு அல்லது பொருளறிவு ஏற்படுகிறது. இப்பொழுது கேட்ட மணிச் சப்தம் புதிதாக ஏற்பட்ட புலனறிவு. அந்த மணிச்சப்தத்தைப் பற்றிய பழைய அறிவும் பிள்ளையின் மனதில் அடங்கி இருக்கிறது. மணிச் சப்தமாகிய புலனறிவு ஏற்பட்டவுடனே, மனது பழைய அனுபவத்துடன் (பழைய அறிவு = பழைய அனுபவம்) புதிய புலனை ஒப்பிட்டுப் பார்த்து, இது பள்ளிக்கூடத்து மணிச் சப்தம் என்ற விஷயத் தெளிவை அடைகிறது.

ஐம்புலன்கள் மூலமாய் பார்வை, கேள்வி, ருசி, மணம், ஸ்பரிசம் முதலிய புலப்பாடுகள் மட்டும் உண்டாகின்றன.

இந்தப் புலப்பாடு மனதுக்கு வந்தெட்டியவுடனே அம்மனது, வெளி யுலகத்திலே புலப்பாடு உண்டாவதற்குக் காரணமாய் இருந்த பொருள் சீனியா, உப்பா ; கோவில் மணிச் சப்தமா, பள்ளிக்கூடத்து மணிச் சப்தமா ; ஆரஞ்சா, எலுமிச்சையா என்று தெளிவாகக் கண்டறிந்து முடிவு கட்டுவதே பொருளறிவு அல்லது விஷயத்தெளிவு. மனது ஐம்பொறிகள் மூலமாகவும் புதிதாகத் தன்னிடம் வந்த புலப்பாட்டை வைத்து, தன்னிடம் இருக்கும் பழைய அனுபவத்துடன் அதனை ஒப்பிட்டுப் பார்த்து வெளி விஷயத்தைப் பிழையறத் தீர்மானிப்பது பொருளறிவாம்.

புலப்பாடு + பழைய அறிவு = பொருளறிவு.

புலப்பாடு இல்லாவிட்டால் பழைய அறிவு அப்படியே சும்மா இருக்கும் ; பொருளறிவு ஏற்படாது. புலப்பாடு ஏற்பட்டு, பழைய அறிவு இல்லாவிட்டாலும் பொருளறிவு ஏற்படாது. முற்றிலும் புதிய புலனறிவு புதிர் உண்டாக்கும்; தெளிவை உண்டாக்காது.

ஆகாய விமானத்தைப்பற்றிக் கேள்விப்படாத ஒருவன், மோட்டாரை மட்டும் பார்த்திருக்கிறான். ஒருநாள் 'உர் உர்' என்று ஆகாயத்திலிருந்து வரும் சப்தத்தைக் கேட்கிறான். இந்த சப்தம் கிட்டத்தட்ட மோட்டாரின் சப்தத்துக்கு ஒத்து இருப்பதால், உடனே ஏதோ மோட்டார் வருகிற சப்தம் என்று தவறாக விஷயத்தெளிவடைந்து கொள்கிறான். ஆனாலும், விமானம் அவன் தலைக்கு நேர்மேலாக சமீபித்து வரும்போது அது மோட்டார் சப்தத்திலிருந்து வேறுபடுவதை அறிகிறான். என்ன சப்தம் இது! இந்தமாதிரி சப்தத்தைக்கேட்ட பழைய அறிவு அவன் மனதில் இல்லை. திகைக்கிறான், ஒன்றும் புரியவில்லை. விஷயத்தெளிவு இல்லை. புதிய புலனறிவாகிய சப்தத்தைக் கேட்கிறான் ; ஆனால், அந்தப் புதிய சப்தம் போல்வதாகிய பழைய அறிவு இல்லாத குறைவால் புதிர் ஏற்படுகிறது.

சைக்கிள் மணிச் சப்தத்தைக் கேட்டறியாத ஒரு குக்கிராமவாசி வழியே போகிறான். அவன் பின்னால் சைக்கிளில் வரும் ஒருவன் அவனை விலகும்படி 'கணகண' என்று மணி அடிக்கிறான். மணிச் சப்தம் புதிய புலனறிவு கிராமவாசி சப்தத்தைக் கேட்டான். மாட்டுக் கழுத்தில் கட்டியிருக்கும் மணிச் சப்தம் அவனுடைய பழைய அறிவு. இந்தப் புதுச் சப்தம் அந்தப் பழைய சப்தம்போல் இல்லை. முற்றிலும் புதிய மணிச் சப்தம்—புதிய புலனறிவு தெளிவையல்ல, புதிரை உண்டாக்குகிறது. திகைத்து அங்குமிங்கும் கலைந்து பயந்து விலகுகிறான். சைக்கிளைக் கண்டுகொண்ட பின் அவன் கலக்கம் தீர்ந்து தெளிவு ஏற்படுகிறது.

மனதுக்கு வரும் புதிய புலன்களைக்கொண்டு விஷயத் தெளிவு ஏற்படுவதற்குப் பழைய அறிவு இன்றியமையாது வேண்டும். பாடக்குறிப்பு நோட்டில் 'முன்னறிவு' என்று ஒரு குறிப்புக் காணப்படும். அது என்? முற்றிலும் புதிய விஷயங்கள் பிள்ளைகளுக்குப் புதிராக இருக்கும். தெளிவாக இரா. ஆதலால், அந்தப் புதிய பாடத்துக்கு இனமாகப் பிள்ளைகள் மனதில் ஏற்கனவே தங்கி இருக்கும் பழைய அறிவு என்ன என்று கண்டு, அந்தப் பழைய அறிவுடன் புதிய விஷயத்தைத் தொடுத்துக் கற்பித்தால்தான் விஷயத்தெளிவு ஏற்படும். பிள்ளைகளின் பழைய அறிவைக் கண்டுபிடிப்பதற்கு வினாக்கள் பயன்படும். பனிமலையைப்பற்றிய புதுப்பாடம். பனிக்கட்டியைப்பற்றிய அறிவை இப்புதுப் பாடத்துக்குப் பழைய அறிவாக வைத்துக்கொள்ளலாம். பனிக்கட்டியைப் பாராத, அதைப்பற்றி ஏற்கனவே ஒன்றும் தெரியாத பிள்ளைகளுக்கு இப்புதிய பாடத்தைப் படிப்பிக்கவேண்டுமானால், பனிக்கட்டியைப்பற்றிய பழைய அறிவை முதலாவது உண்டாக்கிக்கொண்டு பின்பு பனி மலையைப்பற்றிப் புதுப்பாடம் ஆரம்பிக்கலாம். பனிக்கட்டியைப்பற்றிப் பழைய அறிவு

ஏற்படுத்துவதற்குப் பனிக்கட்டியைப் பிள்ளைகளுக்குக் காட்டி அவர்கள் அதைக் கையால் தொட்டு, வாயில் இட்டு ருசித்துப் பார்க்கும்படி செய்யலாம். வெயிலில் வைத்தால் அது விரைவில் இளகுவதைக் கவனிக்கும்படி செய்யலாம். தண்ணீர் அதிகமான குளிர்ச்சியடையும்போது உறைந்து கட்டியாகிறது என்ற பழைய அறிவை இவ்வாறு உண்டாக்கிக் கொண்டால், பின்னர் பனிமலையைப்பற்றிய பாடம் தெளிவாக விளங்கும்.

---

10. மனது புதிய விஷயங்களைத் தன்வயப்படுத்துதல்.

APPERCEPTION.

இதற்கு ஆங்கிலத்தில் அப்பர்செப்ஷன் என்று பெயர். முன் அத்தியாயத்தில் ஒரு புதிய புலன் மனதுக்குச் சென்றவுடனே மனம் அந்தப் புதிய புலனுக்கு இனமான பழைய அறிவுடன் அப்புதிய அறிவைச் சம்பந்தப்படுத்தி விஷயத் தெளிவு செய்கிறது என்று சொன்னோம். அவ்வாறு புதிய அறிவு பழைய அறிவுடன் சம்பந்தப்பட்டுக் கலக்கும்படி மனது செய்கிற வேலைக்குத்தான் அப்பர்செப்ஷன் என்பது. நாம் உணவு கொள்கிறோம். அது ரஸமாகிறது. உணவு ரஸமாக மாறும்முன் வயிற்றிலே ஜீரண வேலை நடக்கிறது. ஜீரண வேலையின் பயன்தான் ரஸம். மனதுக்கு ஒரு புதிய புலன் வருகிறது. மனது அப்புலனுக்கு இனமான பழைய அறிவுடன் அதை இணைத்து அது இன்ன பொருள்தான் என்று முடிவு செய்யும்படி மனதில் நடக்கும் ஜீரண வேலைக்குத்தான் அப்பர்செப்ஷன் என்பது. அப்பர்செப்ஷனாகிய மனத்தொழில் நடப்பதால்—புதிய அறிவும் பழைய அறிவும் கலப்பதாகிய மனதின் தொழிலால் — கிடைக்கும் பயன்தான் பொருளறிவு அல்லது விஷயத்தெளிவு ; இதனை ஆங்கிலத்தில் பர்செப்ஷன் (Perception) என்பர். ஒரு புதிய புலன்

மனதுக்குச் செல்கிறது, அப்புதிய புலனுக்கு இனமான பழைய அறிவு மனதில் இல்லாவிட்டால் அப்பர்செப்ஷன் நடைபெறாது. அது நடைபெறாததால்தான் புதிர் உண்டாகின்றது. விஷயத்தெளிவு உண்டாவதில்லை. பிள்ளைகள் பாடம் 'விளங்கவில்லை' என்பாராகில் நாம் கற்பித்த விஷயம் முற்றிலும் புதியது என்றும், அப்புதிய பாடத்துக்கு இனமான பழைய அறிவுடன் அதனை இணைத்துக் கற்பிக்கவில்லையென்றும், அதனால் மனதின் தொழிலாகிய அப்பர்செப்ஷன் நடைபெறவில்லை என்றும் அர்த்தமாகும். ஆதலால், பாடம் தெளிவாகாத சமயத்தில், ஆசிரியர் அப்பாடத்துக்கு இனமான பழைய அறிவைக் கண்டுபிடித்து அதனுடன் தமது புதிய பாடத்தை இணைத்துக் கற்பித்தால் புதிய அறிவும் பழைய அறிவும் கலத்தலாகிய அப்பர்செப்ஷன் நடக்கும்; விஷயத் தெளிவும் உண்டாகும்.

பர்செப்ஷன், அப்பர்செப்ஷனை விளக்கும் அட்டவணை

மூக்கு வழியாய் மனதுக்கு ஒரு வகை நல்ல மணம் வருகிறது	இது புலப்பாடு அல்லது புதிய அறிவு.
இரண்டாவது, மனதில் ரோஜா, முல்லை, மல்லிகை, முதலிய மலர்களின் மணத்தைப்பற்றிய பழைய அறிவு அடங்கியிருக்கிறது. இப்பொழுது புதிதாக மனதுக்கு வந்த மணம் பழைய மணங்களில் எதற்கு ஒப்பாக இருக்கிறது என்று கண்டறியும்படி மனது வேலைசெய்கிறது.	இது புதிய அறிவும் பழைய அறிவும் கலத்தலாகிய அப்பர்செப்ஷன் என்னும் தொழில்.
மூன்றாவது, அப்பர்செப்ஷன் வேலையின் பயனாக, புதியதாக வந்த மணம் முல்லை மலரின் மணம் என்று மனம் தெளிவடைகிறது.	இது புதிய அறிவும் பழைய அறிவும் கலந்து ஏற்பட்ட முடிவு அல்லது பயன். இதுதான் பர்செப்ஷன் அல்லது பொருளறிவு.

மனதில் அப்பர்செப்ஷன் என்னும் தொழில் நடைபெறுவதால் கிடைக்கும் முதற் பயன் விஷயத்தெளிவு ஏற்படுவது. இரண்டாவது, விஷயத்தெளிவு ஏற்பட்டால் பற்று அல்லது உள்ளக்கவர்ச்சி உண்டாகிறது. விளங்காத விஷயங்களில் மனம் செல்வதில்லை. பிள்ளைகட்குப் புதிய விஷயங்கள் விளங்கவும், அவர்கள் பற்றுதலுடன் படிக்கவும் அப்பர்செப்ஷன் நடைபெறும்படி ஆசிரியர் புதிய விஷயத்தைப் பழைய அறிவுடன் இணைத்துக் கற்பிக்கவேண்டும். அப்பர்செப்ஷன் ஏற்படுவதற்கு சாதகம்.

பலவிதமான ஏராளமான முன்னறிவு அல்லது பழைய அனுபவங்கள் பிள்ளைகள் மனதில் ஏற்பட்டிருக்கவேண்டும். முன்னறிவு இல்லாத இடத்தில் அப்பர்செப்ஷன் நடைபெறுது. அப்பர்செப்ஷன் மனதின் தொழில். ஆதலால், மனம் வேலை செய்யக்கூடிய ஆரோக்யமான நிலைபில் இருக்கவேண்டும். கவனம் வேண்டும். உடல் நிலை சரியாய் இருக்கும்படி பாடசாலை சுகாதாரம், சுற்றுப்புறம் சீராக இருத்தல்வேண்டும். வகுப்பறையில் போதுமான அளவு சுத்த ஆகாயம் உலவ வேண்டும். வெளிச்சம் அவசியம். பிள்ளைகள் அமர்ந்திருக்கும் ஆஸனங்களும் இடுக்கமாய், நெருக்கமாய் இல்லாமல் சௌகரியமாக விசாலமாக இருக்கவேண்டும்.

பாட காலத்தில் பிள்ளைகளை அடிப்பது, கோபித்து மனதைக் கவலைப்படுத்துவது, அவர்கள் விரும்பாத விஷயங்களை விரும்பாத முறையில் கட்டாயமாய் ஊட்டுவது முதலிய இவற்றாலும் மனது வேலை செய்யக்கூடிய நல்ல நிலையில் இராது. சொல்லப்படும் புதிய விஷயத்தைப் பழைய அறிவோடு சம்பந்தப்படுத்தி விஷயத்தெளிவு செய்வதற்குப் பிள்ளைகட்குப் போதிய காலம் கொடுக்கவேண்டும். அதிக விரைவாகப் பாடம் நடத்தக்கூடாது.

———

11. உற்றுநோக்குதல்.

OBSERVATION.

ஒரு பொருளை—அதின் எல்லா அம்சங்களையும் பரிசோதித்து ஆராய்ந்து பார்ப்பது உற்றுநோக்குதலாம். அல்லது கிரமமாக ஒழுங்குப்படுத்தப்பட்ட பொருளறிவு உற்றுநோக்குதல் என்றும் சொல்லலாம். ஒரு பொருளைப் பரிசோதித்து ஆராய்ந்து பார்ப்பது என்றால் கண்ணால்மட்டும் பார்ப்பது அல்ல; அதின் நிறம், வடிவம் என்னவென்று கண்ணாலும், அதின் தன்மை மென்மையா கடினமா, சுரசுரப்பா வழுவழுப்பா, இலகுவா கனமா என்று கையாலும், அதின் ருசி இனிப்பா உப்பா, உறைப்பா புளிப்பா என்று நாவாலும், அதின் மணம் நல்லதா தீயதா என்று மூக்காலும், அதின் சப்தம் எப்படிப்பட்டது என்று காதாலும் ஆராய்ந்து பார்க்க வேண்டும். எல்லாப் பொருட்களையும் ஐந்து புலன்களாலும் பரிசோதித்து அறிய முடியாது என்பது உண்மைதான். ஆயினும், கூடியவரை பல புலன்களைக் கொண்டும் ஒரு பொருளை ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

மாணவர் தாமாகவே ஒரு பொருளை உற்றுநோக்கி, விஷயங்களைக் கண்டறிந்து படிப்பதுதான் சொந்தப் படிப்பாகும். பொருட்களை உற்றுநோக்கித் தாமே கண்டறியாமல் பிறர் கண்டறிந்து சொல்கிறவைகளைக் கேட்டு மனதில் அடைத்துக்கொள்வது இரவல் படிப்பு; பயன்படாதது. உற்றுநோக்குவதில் ஐம்புலன்கள் வழியாயும் மனதுக்கு வேலை இருக்கிறது. மனமும் புலன்களும் பயிற்சி அடைகின்றன. மனதின் அனுபவம் அதிகரிக்கின்றது. விஷயங்களை உற்றுநோக்கி அறியும் பயிற்சியால், மாணவர் தமது பிற்கால வாழ்க்கையிலும் வெளி விஷயங்களைத் தாமாகவே உற்றுநோக்கி யூகித்து விஷயங்களின் உண்மைத் தன்மையைக் கண்டறியக்கூடிய தத்துவத்தைப் பெறுகிறார்கள்.

உற்றுநோக்குதல் சரிவர நிறைவேறுவதற்குச் சாதகமாக :

நாம் போகிற வழியிலே ஒரு பசுவைப் பார்க்கிறோம். அப்போது பசுவைப் பார்ப்பதில் நமக்கு ஒரு விசேஷித்த நோக்கம் இல்லையாதலால் 'அது ஒரு பசு' என்று இந்த அளவில், நமது முடிவை நிறுத்திக்கொள்கிறோம். ஆனால், பசுவைப்பற்றி இயற்கைப் பாடம் படிக்க வேண்டுமென்ற ஒரு நோக்கத்தோடு நாம் அம்மிருகத்தைப் பார்க்கும்போது அதின் முழு ஸ்தூலத்தையும் பார்ப்பதோடு நாம் திருப்தி அடைவதில்லை. இயல்பாகவே, அதின் ஒவ்வொரு உறுப்பையும் கூர்ந்து கவனிக்கிறோம். கூடுமானால் சில உறுப்புக்களைத் தொட்டுத் தடவிப் பார்க்கிறோம். அது புல் கறிப்பதையும் அசையிடுவதையும் பார்க்கிறோம். என் இந்த உறுப்பு இப்படி இருக்கிறது, இந்த உறுப்பு இப்படி அமைக்கப்பட்டிருப்பதின் பயன் என்ன என்று வினவுகிறோம். இதனால் பசுவைப்பற்றிய பல விஷயங்களை அறிந்துகொள்ள ஏதுவாகிறது. உற்றுநோக்குதல் நடைபெற ஒரு திட்டமான நோக்கம் வேண்டும். இன்று மீன் பாடம் என்று வைத்துக்கொள்வோம். மீனைக் கொணர்ந்து பிள்ளைகட்குக் காட்டிவிடுவதால் மட்டும் அவர்கள் உற்றுநோக்க ஆரம்பிக்க மாட்டார்கள். மீன் தண்ணீரில் நீந்துவதற்கு ஏதுவாக அதன் உடல் அமைப்பு எவ்வாறிருக்கிறது என்று கவனியுங்கள் என்று ஒரு நோக்கத்தை முன் வைத்தால் பிள்ளைகள் அதனை உற்றுநோக்குவர்.

முன்னறிவு வேண்டும். உற்றுநோக்குதல் என்பது ஒழுங்குப்படுத்தப்பட்ட பொருளறிவு என்று சொன்னோம். பொருளறிவு ஏற்படுவதற்கு முன்னறிவு வேண்டும் அல்லவா? கால்பந்து விளையாட்டு நடக்கிறது. இருவர் அதின் பக்கமாய் வருகிறார்கள். ஒருவருக்கு அவ்விளையாட்டைப்பற்றி ஏற்கனவே தெரியும். மற்றொருவர்க்கு அது முற்றிலும்

புதிய விளையாட்டு. இவ்விருவரில் யார் அவ்விளையாட்டு ஸ்தலத்தில் நின்று அதைக் கவனிப்பர் என்பது வெளிப் படையானது. விளையாட்டைப்பற்றி முன்னறிவு இல்லா தவர் அதனை உற்றுநோக்க மனம் இசையார். முற்றிலும் புதிய விஷயங்களை உற்று நோக்குவது கஷ்டம்.

ஆசிரியர், உற்றுநோக்குவதில் பிள்ளைகளை வழிநடத்தி, உற்றுநோக்குதல் நடைபெற அவகாசம் கொடுக்கவேண்டும். அவர்கள் கண்டறிந்த விஷயங்களை வினவவேண்டும். பிள்ளை கள் தாமாகக் கண்டறியவேண்டியவற்றை அவர்களிடமிருந்து வருவிக்கவேண்டும். ஆசிரியரே சொல்லிவிடக்கூடாது. எப் பொழுது, எதைப் பிள்ளைகளிடமிருந்து வருவிப்பது, எப் பொழுது, எதைத் தாமாகவே பிள்ளைகட்குச் சொல்லிவிடுவது என்ற விஷயத்தை அறிந்தவர் நல்லாசிரியராவர்.

---

12. கவனம் அல்லது உளநோக்கம்.
ATTENTION.

பல விஷயங்கள் நமக்கு முன் இருக்க, அவற்றில் ஒன் றின்மீது மட்டும் நமது மனம் நோக்கமாக இருப்பது அல்லது ஈடுபட்டிருப்பது கவனம் எனப்படும். எழுதுகிற ஒருவன்முன் மேஜை, புத்தகங்கள், படங்கள் முதலிய பல பொருட்கள் இருப்பினும் அவனுடைய மனம் எழுதப்படும் விஷயத்தில் மட்டும் ஈடுபட்டிருக்கிறது. இதுதான் கவனம்.

உபாத்தியாயர் கற்பிக்கிறார். பையன் மனம் பாடத்தில் ஈடுபட்டிராமல் ஜன்னல் வழியாகத் தெரியும் கட்டடத்தில் ஈடுபட்டிருந்தால் பாடத்தில் கவனம் இல்லை. இதை நாம் சாதாரணமாக 'பாடத்தில் மனம் செல்லவில்லை' என்கிறோம். ஒரு பையனுடைய மனம் வரப்போகிற ரஜாவையும், ரஜாப் பிரயாணத்தையும் பற்றி நினைக்கிறது. அவனுடைய மனம்

அலைகிறது. மனம் வேண்டாத விஷயத்தில் சென்று அலைவதால் கவனமின்மை (Inattention) ஏற்படுகிறது.

கவனத்தின் வகை இரண்டு. அவைகளை உதாரணங்களால் விளக்கிக் கூறுவோம். முதலாவது: ஒரு கிளார்க்கு இருக்கிறார். பக்கம் பக்கமாக ரூபா அணு பைசா கூட்டல், கழித்தல் போட்டுக் கணக்கு முடித்து எழுதவேண்டியது அவருடைய வேலை. தினமும் ஐந்து ஆறு மணிக்காலமாய் வெறும் ரூபா அணு பைசாக்களைப்பற்றிய கூட்டல், கழித்தல் செய்வதில் அவருக்கு இயல்பான பிரியம் இல்லை. ஆனால், மாதக்கடைசியில் சம்பளம் வாங்கவேண்டும், பிழைப்பு நடக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு ரூபா அணு பைசாக் கணக்கில் மனதைச் செலுத்துகிறார். அவருக்குப் பிரியமான வேறு பல விஷயங்கள் இருந்தாலும் அவருடைய மனம் அவற்றில் செல்வதில்லை. கணக்கிலேயே கவனம் செல்கிறது. அவருடைய மனம் அவருடைய சுய ஆளுகையில், ஆதீனத்தில் அடங்கி நின்று கவனம் செலுத்துவதால் இப்படிப்பட்ட கவனத்துக்கு சுயாதீன கவனம் என்று பெயர்.

சிறுவர்கள் கண்ணுக்கு இச்சையான பொருட்களில் ஈடுபடுவர். 'படிக்கவேண்டும். பரீக்ஷையில் தேரவேண்டும். உலகத்தில் பிற்காலத்தில் நன்மையடைவதற்கு இக்காலத்திலேயே உழைக்கவேண்டும். கடமைகளைச் சரியாகச் செய்ய வேண்டும்' என்று நினைத்து மனதைக் கட்டுப்படுத்தி நல்விஷயங்களில் கவனம் செலுத்தக்கூடியவர்கள் அல்ல. கண்ணுக்கு இனிமையான, அழகான, பிரகாசமான காட்சிகளிலும் காதுக்கினிமையான விஷயங்களிலும் சுலபமாக ஈடுபட்டுவிடுவர். ஆலயத்தில் பெருநாள் விசேஷம்; பிள்ளைகள் பலர் கூடி நின்று மேள கோஷங்களைக் கேட்டு ஆனந்தித்துக்கொண்டு இருக்கிறார்கள். திடீரென்று அதிர்வேட்டுச் சப்தம் கேட்கிறது. மேளதாளங்களைக் கேட்கிற அவர்களுடைய கவனம்

உடனே அதிர்வேட்டுச் சப்தம் கேட்ட இடத்துக்குச் செல்கிறது. யாவரும் அங்கே ஓடுகிருர்கள். சிறிது நேரம் அங்கு நின்று அதைக் கவனிக்கிருர்கள். பிள்ளைகள் தாமாக மனதைக் சட்டுப்படுத்தி ஒரு விஷயத்தில் கவனம் செலுத்து கிறவர்கள் அல்ல. வெளியுலகத்தில் அவர்களுடைய ஐம்புல னுக்கும் இச்சையை உண்டுபண்ணக்கூடிய பொருட்களுக்கு அவர்களுடைய மனம் அடிமைப்பட்டு கவனம் செலுத்து கிறது. பாடம் படிப்பதில் அவர்கள் கவனம் செல்லாது. வகுப்பறைக்கு வெளியே ரோட்டிலே போகும் சப்பரத்தின் மீது கவனம் செல்லும். ஒரு பொருளில் கவனம் செலுத்தும் தத்துவம் பிள்ளைகளின் சுயாதீனத்தில் இல்லை. ஆகவே, மனம் தன்னையுடையவனுடைய சுய ஆளுகையில், ஆதீனத்தில் நில்லாமல் வெளியுலகத்திலுள்ள பரபொருட்களின் கவர்ச்சித் தன்மைக்கு அடிமையாகி அதில் ஈடுபட்டு நிற்பது பராதீன கவனம்.

சுயாதீன கவனம் வயதுவந்த பெரியோருக்குக் கூடும். பராதீன கவனம் சிறுவர்க்கு உரியது. இதை மனேதத்துவ ரீதியில் சொன்னல், பராதீன கவனம் பொருளறிவு நிலையில் இருக்கும் பிள்ளைகளுக்குரியது. சுயாதீன கவனம் பகுத்தறிவு நிலையடைந்த பெரியோருக்கு உரியது.

நாம் சிறுவர்களுடன் சம்பந்தப்பட்டவர்கள். மனதும், மனதின் தொழில்கள், தத்துவங்களும் கீழான ஒரு நிலையி லிருந்து படிப்படியாக மேல் நிலைக்கு வளரக்கூடியவை என்று முன் வாசித்தோம். ஆம், பராதீன கவனம் கீழ்த்தரமானது. அது நாளடைவில் சுயாதீன கவனமாக வளரவேண்டும். அப்படி வளர்வதற்கு ஏதுவாக அதனைப்பயிற்றுவிக்க வேண்டியது ஆசிரியர் கடன். வெளியுலகத்திலிருக்கும் ஒரு பொருளுக்கு அடிமையாகிக் கவனம் செலுத்தும் மனத்தை, நாம் விரும்பும் ஒரு பொருளில் மட்டும் கவனம் செலுத்தும்படி பயிற்றுவிக்கவேண்டும்.

கவனத்தை வளர்க்க சில வழிகள்:

பிள்ளைகளின் கவனத்தை வேண்டாத விஷயத்தில் இழுத்துக்கொள்ளக்கூடிய பொருட்கள், சப்தங்கள் முதலியவற்றை நீக்கவேண்டும். அவர்களுடைய கவனத்தை அலையச் செய்வதற்கேதுவாக இருக்கும் பாட சம்பந்தமற்ற பொருட்கள், படங்கள் வகுப்பறையில் இருக்கக்கூடாது. உபகரணமாகக் கொண்டுவரும் பொருட்களையுங்கூட அவசியமான கட்டத்தில்தான் பிள்ளைகள்முன் வைக்கவேண்டும். முதலிலேயே அவர்கள்முன் வைப்பின் அவர்களுடைய கவனம் அப்பொருளிலே செல்லும்; பாடத்தில் செல்லாது; கவனமின்மை ஏற்படும்.

சோம்பல், நோய், தூக்கம் இவை உடையவர்களுக்கும், காற்றோட்டமின்மை, நெருக்கமாக உட்கார்ந்திருத்தல் முதலிய சௌகரியக் கேடுகளுக் குட்பட்டிருப்பவர்க்கும் பாடத்தில் கவனம் செல்லாது. தூங்குகிறவனை வெளியே சென்று சுத்தமான காற்றில் உலவி, குளிர்ந்த ஜலத்தில் முகம் கை கால்களைக் கழுவி வரச்சொல்லலாம். சோம்பேறிக்குத் திடும்பிரவேசமாகக் கேள்வி போடலாம். அப்பியாசம் கொடுக்கலாம். புழுக்கம் இருப்பின் பரிகாரமாகக் கதவு, ஜன்னல்களை விசாலமாகத் திறந்து வைக்கவேண்டும். அவசியமானால் வகுப்பறைக்கு வெளியே இட்டுச்செல்லலாம். ஆசிரியர் சமயோசிதம் போல சுற்றுப்புற சுகாதாரங்களைச் சீர்ப்படுத்த வேண்டும்.

வகுப்பில் பேசி விளையாடிக் குறும்பு செய்கிற ஒன்றிரண்டு சுட்டிப் பையன்களால் பிற பிள்ளைகளுடைய கவனம் சிதறக்கூடும். குறும்பு செய்கிறவனை முதலாவது தனியாகவும், பின் வகுப்பிலும் வைத்து ஆலோசனை சொல்லவேண்டும்; இரண்டாம் தடவையானால் எச்சரிக்க வேண்டும். அவசியமானால் முதல் தடவையிலேயே தண்டிக்கலாம். இதிலெல்லாம் ஆசிரியரின் புத்தியுள்ள யுக்தம்தான்!

ஆசிரியர் அடிக்கடி தமது மூக்குக் கண்ணாடியைப் பிடித்தல், ஜேபியில் கை போடுதல், சட்டைப் பொத்தானைச் சுற்றுதல், மீசையில் கை வைத்தல் முதலிய சேட்டைப் பழக்கங்கள் செய்வாராயின்; அடிக்கடி விளங்குகிறதா, தெரிகிறதா, அல்லவா முதலிய சொற்களை உபயோகிப்பாராயின் பிள்ளைகள் அதிலேயே கவனமாய் இருப்பர். ஆதலின், இத்தகைய வேண்டாப் பழக்கங்களை விட்டொழித்தல் வேண்டும்.

மன வேலையாயினும் சரீர வேலையாயினும் அதிகமாய்ச் செய்து களைப்புற்றிருக்கும் போது கவனம் உண்டாகாது. சுமாராக 2 பாடங்கள் நடப்பதற்கிடையில் ஓய்வுகாலம் கொடுக்க. தொடர்ந்து வேலை செய்தபின் வாரக்கடைசி, மாதக்கடைசி, டெர்மின் கடைசியில் ரஜா இருப்பது நலம். அன்றியும் பாட அட்டவணை தயாரிக்கும் பொழுது ஒரு கஷ்டமான பாடத்துக்குப் பின் மனதுக்கு அதிக வேலை கொடுக்கக்கூடாத இலகுவான பாடம் இருக்கும்படி கவனிக்க வேண்டும். கண்ணுக்கு அதிக வேலை கொடுக்கக்கூடிய வேலைக்குப்பின் கைக்கு அதிக வேலை கொடுக்கும் பாடம் வைக்கலாம். இதைப்பற்றிக் களைப்பு என்னும் அத்தியாயத்தில் விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அங்கு வாசிக்க.

'பாடத்தைக் கவனி. கவனியாவிட்டால் உதைப்பேன்' என்று பிள்ளைகளை அதட்டுவதாலும், 'இது மிகவும் முக்கியமான பாடம்' என்று சொல்லிப் பாடத்தின் உயர்வைப் பற்றிப் பன்னிப் பன்னிப் பிரசங்கிப்பதாலும் பிள்ளைகட்கு ஒரு பாடத்தில் கவனம் ஏற்படமாட்டாது. ஆனால், பாடத்தில் இயல்பாகவே அவர்கட்குக் கவனம் உண்டாகும்படி ஆசிரியர் தக்க முறைக்கோட்பாடுகளை அனுசரித்து விளங்குமாறு நன்கு கற்பிக்கவேண்டும்.

பிள்ளைகள் பொருளறிவு நிலையில் இருக்கிறார்கள். ஆதலால், ஆசிரியர் அழகான, பலவர்ணமான, ஏராளமான

பொருட்களை உபகரணமாகக்கொண்டு, பிள்ளைகள் உற்று நோக்கித் தாமாகவே விஷயங்களைக் கண்டறியும்படி அவர்களைத் தூண்டி, அவர்களுடைய புலன்கட்கும் மனதுக்கும் வேலை கொடுக்கவேண்டும். பாடத்தில் கருகலானவற்றை விளக்கும்படி படங்கள், உவமைகள், உதாரணக் கதைகள் உபயோகிக்கலாம்.

பிள்ளைகள் பொருளறிவு நிலையில் தூண்டுதல்களுக்குட்பட்டிருக்கிறார்கள். பார்த்து நடித்தல், சதா சுருசுருப்பாக வேலைசெய்தல் இவற்றில் அவர்கட்குப் பிரியம். இயக்கம் அவர்கள் இயல்பு. ஆதலால், அவர்கள் கைகட்டி வாய் பொத்தி அசையாமல் அமர்ந்திருந்து பாடம் கேட்கவேண்டும் என்ற பழைய விதியைத் தள்ளிவிட்டு அவர்களுக்குப் பேச, நடக்க, செய்ய ஏதாவது வேலை கொடுக்கவேண்டும். சம்பாஷணை, நடிப்புப் பாடங்கள் நல்லவை. கின்டர்க்கார்ட்டன் பாடத்திலுள்ள ஆட்டம், பாட்டு, குச்சு, மண், தாள் வேலைகளின் நோக்கம் இதுதான். பாட சம்பந்தமான படங்கள், பாடச் சுருக்கம் எழுதும்படி சொல்லலாம்.

முற்றிலும் புதிய விஷயங்களில் பிள்ளைகட்குப் பற்றுண்டாகாது. புதிய விஷயத்தை அவர்களுக்கு ஏற்கனவே தெரிந்த பழைய விஷயங்களுடன் சம்பந்தப்படுத்திக் கற்பிக்க வேண்டும்.

ஒரு சமயத்தில் ஒரே விஷயத்தைத்தான் சொல்லவேண்டும், பலவற்றைப்போட்டுக் குழப்பக்கூடாது. சிறுவர்க்கு ஒரு விஷயத்தில்கூட கவனம் உண்டாக்குவது பெரிய காரியமாய் இருக்கும்போது ஒரே சமயத்தில் பல விஷயங்களில் கவனம் உண்டாக்குவது அரிது.

உபாத்தியாயர் உற்சாகமாயும் நயமாகவும் சந்தர்ப்பத்துக்கு ஏற்கத் தமது சத்தத்தை உயர்த்தியும் தாழ்த்தியும்

கற்பித்தால் அவருடைய உற்சாகம் பிள்ளைகளையும் பீடிக்கும். சுருசுருப்பாக இருந்து பாடத்தைக் கவனிப்பார்கள். ஆனால், அவர் உறக்கத்தோடு ஈன ஸ்வரத்தில் பேசிக்கொண்டிருந்தால் வகுப்பும் உறங்குவதில் — கவனமற்றிருப்பதில் ஆச்சரியம் இல்லை!

மேற்கண்ட முக்கியமான விதிகளைக் கவனித்து ஆசிரியர் பிள்ளைகள் மனதுக்குக் கவனப் பழக்கம் ஏற்படும்படி பயிற்சி கொடுத்தால், அவர்கள் சுயாதீனமான கவனத்தை அடையக் கூடிய உயர் நிலைக்கு எளிதில் வரக்கூடும்.

---

13. பற்று அல்லது உள்ளக்கவர்ச்சி.

மனது எப்போதும் வெளியுலகத்திலுள்ள பல பொருட்களோடும் சம்பந்தப்பட்டுக்கொண்டே இருக்கிறது என்று சொன்னோம். அப்பொருட்களில் சிலவற்றை மனம் விரும்புகிறது. சிலவற்றை விரும்புகிறதில்லை. ஒரு பொருள் மனம் தன்னை விரும்புவதற்கு ஏதுவாய் அழகாகவும் இனிமையாகவும் இருக்கிறது. ஆகவே, அப்பொருள் மனதைக் கவர்ந்து கொள்கிறது. மனமும் அதின் தன்மைகளில் ஈடுபட்டுநின்று அப்பொருளை விரும்புகிறது. இவ்வாறு ஒரு பொருளின் தன்மையால் மனம் இழுக்கப்பட்டு அதை விரும்புவது பற்று.

பற்றுக்குச் சில உதாரணங்கள்: நகரத்தின் நடுவிலிருக்கும் நெருக்கடியான ரஸ்தாவில் ஒருவர் காய்கறிச் சாமான்கள் வாங்கிக்கொண்டு வந்தார். எதிரே ஒரு பெரிய கூட்டமும் சந்தடியும் ஓட்டம் சாட்டமும் இருப்பதைக் கண்டார். அந்தக் காக்ஷி அவருடைய மனதை இழுத்துக்கொள்கிறது. அங்கே போகிறார். கூட்டத்தில் நுழைந்து, என்ன விஷயம் என்று பார்க்கிறார். சிறு பெண் ஒருத்தி காரில் அகப்பட்டுப் படுகாயப்பட்டிருப்பதைக் கண்டு வருந்துகிறார்.

ஜனக் கூட்டமும் பிள்ளைக்குற்ற கஷ்டமும் அவருடைய மனதை இழுத்துக்கொண்டன. அவருக்குப் பற்று உண்டானது. இப்பற்றுத் துன்ப உணர்ச்சியைக் கொடுக்கும் பற்று.

பையன் ஒருவன் பாடத்தைக் கவனியாமல் கிறுக்கிக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான். ஆசிரியர் ஏற்கனவே கொண்டுவந்து மறைத்து வைத்திருந்த கிளியை எடுத்துக் காட்டி 'இதின் நிறம், அலகு, விரல்களைக் கவனியுங்கள்' என்று சொல்கிறார். பையன் நிமிர்ந்து பார்க்கிறான். அவன் முகத்தில் உற்சாகம், சந்தோஷம் தவழ்கிறது. கிளி அவன் மனதை இழுத்துக்கொண்டது. அவனுக்குக் கிளியில் பற்று உண்டாகிவிட்டது. இது சந்தோஷகரமான அல்லது இன்ப உணர்ச்சியைக் கொடுக்கக்கூடிய பற்று.

கவனத்துக்கும் பற்றுக்குமுள்ள சம்பந்தம்: கவனத்துக்கும் பற்றுக்கும் வித்தியாசம் உண்டு. கவனம் என்பது மனம் தானாகவே ஒரு பொருளின்மேற் சென்று ஈடுபடுவது. பற்று என்பது ஒரு பொருள் நமது மனதை இழுத்துக்கொள்வது. கவனம் மனதின் வேலை. பற்று பொருளின் வேலை. ஆனாலும், கவனத்துக்கும் பற்றுக்கும் சில சம்பந்தங்கள் உண்டு. ஒரு விஷயத்தில் பற்று உண்டான பின்பு அதில் கவனம் செலுத்துகிறோம். ஆகவே, பற்று கவனம் உண்டாவதற்குக் காரணமாய் இருக்கிறது. உதாரணமாக, அதிர்வேட்டுச் சப்தத்தைக் கேட்கிறோம். அது நம்மில் பற்றை உண்டு பண்ணிவிட்டது. நமது மனம் அதில் செல்லும்படி கட்டாயம் ஏற்படுகிறது. ஆகவே, குழலில் மருந்து செலுத்துவதையும் நெருப்பு வைக்கிறதையும் கவனிக்கிறோம். இப்படி அதனை நாம் கவனிப்பதற்குக் காரணம், முதலாவது அதின் பெருஞ் சப்தம் நமது மனதை இழுத்துப் பற்றுண்டாக்கினதுதான் அல்லவா? நிற்க, சிலசமயங்களில் கவனம்

பற்றுண்டாவதற்குக் காரணமாகின்றது. உதாரணமாக, பரீக்ஷையில் தேர வேண்டுமென்ற நோக்கத்தோடு சுயாதீன கவனம் செலுத்தி, ஒருவர் தமிழ் அல்லது கணக்குப் படிக்கிறார். சில பக்கங்கள், சில சில புஸ்தகங்கள் படித்த பின்பு அவர் படித்த பாடங்களின் சுவை மேலும் மேலும் அவர் அப்பாடத்தைப் படிப்பதற்குப் பற்றுண்டாக்குகிறது. பரீக்ஷை எழுதிப் பட்டம்பெற்ற பின்பும், அவர் தமிழ் அல்லது கணக்கு நூல்களை வாங்கி விருப்பத்துடன் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுகிறார். ஆகவே, கவனம் பற்றுண்டாவதற்கும் காரணமாகின்றது.

ஒரு பொருளின் கவர்ச்சித் தன்மையால் மனம் இழுக்கப்பட்டு அதில் பற்றுண்டாகும்போது அதனை இயற்கைப் பற்று என்கிறோம். டப்பாசி பிரகாசத்துடன் எரிந்து பட பட என்று வெடிக்கிறது. டப்பாசியின் ஒளியும் ஒலியும் ஒரு பிள்ளையின் மனதை இழுத்துக்கொள்கின்றன. பிள்ளைக்கு இயல்பாகவே டப்பாசியில் பற்றுண்டாகிறது. இதுதான் இயற்கைப் பற்று. ஆனால், வேறு நோக்கத்தோடு ஒரு பொருளில் கவனம் செலுத்தி, பின்பு அக்கவனம் அதில் பற்றுண்டாக்கும்போது அது செயற்கைப் பற்று அல்லது சம்பாதிக்கப்பட்ட பற்று என்னப்படும். முதலில் தமிழில் பற்றில்லாதவர்களுக்குப், பரீக்ஷை தேரும்நோக்கமாக அதில் கவனம் செலுத்திப் படித்ததினால் பற்றுண்டாகும் போது அது செயற்கைப் பற்று. வேறு விதமாகக் கூறுவோமானால், கவனத்தின் மூலமாக உண்டாகும் பற்று செயற்கைப் பற்றாகும். இவ்வாறு பற்றின் வகை இரண்டு.

பற்று உண்டாக்குவது எப்படி ?

பற்று கவனத்தை உண்டுபண்ணும் என்று சொன்னோம். ஆதலால், விஷயங்களைக் கவனித்து அறிவடைவதற்குப் பற்றும் அவசியமாகிறது. பூர்வகாலத்தில் பிள்ளைகளுக்குப்

பிரியமானவற்றையும் அப்பிரியமானவற்றையும் கட்டாய முறையில் கற்பித்துவந்தனர். பிள்ளைகளின் மனப்பான்மையைப் பிரதானமாகக் கருதாமல், கற்பிக்கப்படவேண்டிய விஷயங்களைப் பிரதானமாகக் கருதினார்கள். தற்காலம் பிள்ளைகள் விரும்பும் விஷயங்களை, அவர்கள் விரும்பக்கூடிய முறைகளைக் கையாடிக் கற்பிக்கவேண்டுமென்று சொல்கிறார்கள். வாய்பாடுகள், இலக்கண விதிகள், செய்யுட்கள், பூமிசாஸ்திர, சரித்திர, சாஸ்திர சம்பந்தமான இடங்களின் பெயர், வருஷங்கள் முதலிய சில அறிவு வளர்ச்சிக்கும் பிள்ளைகளின் பிற்கால வாழ்க்கைக்கும் மிக அவசியமானவைகள். இவைகளைப் பிள்ளைகள் விரும்பிப் படிக்கமாட்டார்கள். ஆகையால், அவைகளைக் கற்பிக்காமல் ஒதுக்கவேண்டுமென்பதில்லை. கசப்பான மாத்திரைகளைச் சர்க்கரை பொதிந்து கொடுத்துக் குழந்தைகளின் உடல் நோயைத் தீர்ப்பதுபோல, இந்த விருப்பமற்ற விஷயங்களைப் பிள்ளைகள் விரும்பக்கூடிய இனிய முறையில் கற்பிக்கவேண்டும். இதைக் கருதியே அநேக நவீன முறைகள் தோன்றியிருக்கின்றன.

பாடத்தில் பிள்ளைகட்குப் பற்றுண்டாகும்படி பின்வரும் சில விதிகளை அனுசரிக்கலாம். பற்றுண்டாவதற்கு மூல காரணம் பொருளின் கவர்ச்சித் தன்மை என்று சொன்னோமல்லவா? ஆதலால், மனதை இழுத்துக்கொள்ளக்கூடிய அழகிய, இனிய, பிரகாசமான பொருட்கள் மூலம் கற்பிக்க வேண்டும்.

பாட முறை, அடக்கு முறையாகவும் கஷ்டமாகவும் இருக்கக்கூடாது. சந்தோஷமாகவும் விளையாட்டு முறையாகவும் இருக்கவேண்டும். அவசியமான வேளைகளில் எல்லாம் பிள்ளைகளை வகுப்பறைக்கு வெளியே கொண்டுபோய், பிள்ளைகளுடன் தாராளமாய் சம்பாஷித்துக் கற்பிக்கவேண்டும். பேசும் பிள்ளைகளை ஊமைகளாக அடக்கிவைக்கக்கூடாது.

பாட சம்பந்தமாகப் பரிசோதனைகள் செய்வதில் பிள்ளைகளும் ஆசிரியருடன் பங்கெடுக்கும்படி இடம் கொடுக்க வேண்டும். பாடசாலைத் தோட்டம், மியூசியத்துக்குப் பொருள் சேகரித்தல்; பூமிசாஸ்திர சரித்திரப் படங்கள், மாடல்கள் செய்தல் இவற்றில் பிள்ளைகளே அதிகம் வேலை செய்யவேண்டும். பிள்ளைகட்குச் செய்கையில் பற்று அதிகம். ஏதாவது பேச, எழுத, வரையச்செய்யச் சொன்னால் உற்சாக மாய்ச் செய்வார்கள்.

எந்நாளும் கேட்ட, பார்த்த பழைய விஷயங்களில் பற்றுண்டாகாது. புதியவற்றில் யாருக்கும் பற்றுண்டாவது இயல்பு. ஆதலின், ஆசிரியர் தமது பாடங்களில் புதிய புதிய உபகரணப் பொருட்கள், பாட்டுகள், கதைகள் இவற்றை உபயோகப்படுத்தவேண்டும். ஆசிரியர் கையாளுகிற முறை யில், பாடத்தில், போக்கில் மாறுதல் இருக்கவேண்டும். இவை மாறாமல் ஒரே ஏக தாளமாய் இருந்தால் உறக்கம்தான் முடிவு. ஆதலால், புதுமை, மாறுதல் இருக்கும்படி கவனிக்க.

ஒரு பொருளைப் பிள்ளைகள்முன் வைத்தால் அவர்களே அதின் சர்வ அம்சங்களையும் உற்றுநோக்கி, அறிவுக்கு அவசியமானவற்றைக் கண்டறியும்படி ஆசிரியர் அவர்களை வழி நடத்தி உற்சாகப்படுத்தவேண்டும்; பிள்ளைகள் செய்ய வேண்டியதைத் தாமே செய்துவிடுவாரானால் பிள்ளைகட்கு வேலையில்லாமற் போகும்.

நோக்கமில்லாமல் பாடம் நடத்தினாலும் பிள்ளைகளுக்குப் பாடத்தில் பற்றுண்டாகாது. ஆதலால், பாடத்தின் நோக்கம் இன்னதென்று பிள்ளைகட்குத் தெரியும்படி செய்யவேண்டும்.

ஆசிரியருடைய பாஷை நடை, பாடத்தின் தன்மை, அதின் அளவு, போதனாமுறை முதலிய இவை பிள்ளைகளின்

மனோநிலைக்கு ஏற்றதாக இருக்கவேண்டும். அதிக இலகுவான அல்லது அதிகக் கடினமான விஷயங்கள் மனதைக் கவரமாட்டா.

ஆசிரியர் பிள்ளைகளிடம் அனுதாபம் (Intellectual sympathy) காட்டி அவர்களைத் தேற்றவேண்டும். மாதிரி வாசிப்பு, மனப்பாடம் ஒப்பிப்பதில் தட்டிக்கொண்டால் தூண்டிக்கொடுப்பது, யோசிக்கப் போதுமான நேரம் கொடுப்பது, பிள்ளைகளுடைய பிழைகளைத் திருத்துவது — ஆகிய இவை ஓர் ஆசிரியரின் அனுதாபத்துக்குச் சில உதாரணங்கள். சில ஆசிரியர் பிள்ளைகளை வெடுக்கென்று கோபிப்பர். 'சுத்த மண்டு, மாடு மேய்க்கத்தான் லாயக்கு' என்று சொல்லிச் சிறுவரை இகழ்வர். இதனுல் பிள்ளைகட்குத் தம்மைப் பற்றிய சுய நம்பிக்கை குறையும். அவர்கள் மனம் தளர்வடைந்து உற்சாகம் குன்றும். பிள்ளைகள் உஷாராய் இருக்கும்படி கவனிக்கவேண்டும்.

உபாத்தியாயர் தாமே தமது பாடத்திலும், உத்தியோகத்திலும், பிள்ளைகளிடத்திலும் பற்றில்லாமல், கேவலம் கூலியை மட்டும் எதிர்பார்க்கிறவராய், நாற்காலியில் அமர்ந்து கொட்டாவி விட்டுக்கொண்டு 'அடே! படியுங்கள். இதை எழுதுங்கள்' என்று சொல்வதும், பிரசங்க முறையில் பாடம் சொல்லிக்கொடுப்பதுமாய் இருப்பாராகில் நாளடைவில் பிள்ளைகட்குப் பாடத்திலும், ஆசிரியரிடத்திலும், பள்ளிக்கூடத்திலும் வெறுப்புண்டாவதற்கு ஏதுவாகும். ஆதலால், ஆசிரியர் தமது தொழிலிலும் பிள்ளைகளிடத்திலும் பற்றுள்ளவராய், உற்சாகமாகப் புதிய புதிய முறைகளைக் கையாடிக் கற்பிக்கிறவராக இருக்கவேண்டும்.

14. ஞாபகம்.

மனதில் ஒரு விஷயத்தைப் பதித்து, அதைத் தங்க வைத்து, வேண்டும்போது வெளியிடுதலாகிய மனதின் தொழில் ஞாபகம் எனப்படும்.

ஞாபகம் யாவருக்கும் ஒன்றுபோல் இராது. சிலருக்கு விஷயங்கள் மெழுகில் பதிவதுபோல எளிதில் மனதிற் பதிந்து, கல்வெட்டுப்போல நிலையாகத் தங்கி இருக்கும். சிலருக்கு எளிதாகப் பதியும், சீக்கிரமாக மறந்துவிடும். சிலருக்கு அரிதாகப் பதியும், நன்றாகத் தங்கி இருக்கும். சிலருக்கு அரிதாகப் பதிந்து சீக்கிரமாக மறந்துவிடுவதும் உண்டு. இவ்வாறு ஞாபகம் ஒவ்வொருவருக்கும் வெவ்வேறு விதமாக இருக்கிறது; எல்லார்க்கும் ஒன்றுபோல இருக்கும் படி எதிர்பார்க்கக்கூடாது. ஞாபகம் இப்படி வேற்றுமைப் படுவதற்குக் காரணம் அவரவருடைய பிறவி, பெற்றோர், சுற்றுப்புறம், தேகநிலை இவற்றைப் பொறுத்தது. ஆயினும், ஒரு விஷயத்தை ஞாபகம் செய்வதற்குச் சில பொது விதிகள் உண்டு. அவற்றை இங்குக் கூறுவோம்.

ஞாபகத்துக்குச் சில விதிகள்.

இன்று காலை ஆற்றோரத்தில் கண்ட ஒரு காட்சி, காலையில் நாம் நமது நண்பருடன் செய்த சம்பாஷணை நமக்கு ஞாபகத்தில் இருக்கிறது. நேற்றுப் படித்த பாடம் இன்று ஞாபகத்திலிருக்கிறதல்லவா? ஆகவே, சமீப காலத்தில் நிகழ்ந்த விஷயம் ஞாபகத்தில் இருக்கும் என்று அறிகிறோம். 'நூறு நாள் ஓதி ஆறு நாள் விடத்தீரும்' என்பது ஒரு பழமொழி. எத்தனைநாள் ஒரு விஷயத்தைப் படித்தாலும் சமீப காலத்தில் அதைத் திரும்பப் பார்க்கவில்லையென்றால் மறந்துபோகும். ஆதலால், அடிக்கடி விஷயத்தை ஞாபகப் படுத்தவேண்டும்.

ஒருவன் சென்னையில் பத்து வருஷம் குடியிருந்தவன். இந்தப் பத்து வருஷங்களிலும் தினந்தோறும் நடந்த எத்தனையோ முக்கியமான விஷயங்களை அவன் மறந்திருக்கக் கூடும். ஆனால், அவன் சென்னையில் கால்வைத்த முதல் நாள் நடந்த ஒவ்வொரு சிறு விஷயமுங்கூட அவனுக்கு ஞாபகம் இருக்கும். ஆகவே, முதல்முதல் நடக்கும் விஷயம், அல்லது புதிதாக நிகழும் விஷயம் ஞாபகத்தில் இருக்கக் கூடுமென்று அறிகிறோம். முதல் பதிவு முதல்தரமான பதிவு என்பது ஒரு பொது விதி.

திரும்பத் திரும்பச் சம்பவிக்கும் விஷயங்கள் ஞாபகத்தில் இருக்கும். ஆதலால், பாடத்தில் திரும்பத் திரும்பக் கேள்வி கொடுக்கவேண்டும். பாடச்சுருக்கம் எழுதச்சொல்வதும் ஞாபகத்துக்குச் சாதகம். பாடங்களை மறவாமற் பாதுகாப்பதைப் பற்றித் தமிழ் நூற்புலவர் ஒருவர் பின்வருமாறு கூறுகிறார்.

> '* * கேட்டவை நினைத்தல்;
> வினுதல்; வினுபவை விடுத்தல் என்று இவை
> கடனுக் கொள்.'

மாணவன் ஆசிரியரிடத்துக் கேட்ட பாடத்தை மனதில் திரும்பத் திரும்ப நினைக்க வேண்டும். ஆசிரியர் தாம் முன் கற்பித்த பாடத்தில் வினுவுதல் வேண்டும். மாணவன் அவ் வினுக்கட்கு விடையிறுக்கவேண்டும்.

> 'ஒரு குறி கேட்போன் இருகாற் கேட்பின்
> பெருக நூலிற் பிழைபாடு இலனே'
> 'முக்கால் கேட்பின் முறையறிந்து உரைக்கும்.'

ஒருமுறை கேட்கும் பாடத்தை இருமுறை மும்முறையாகக் கேட்கும் மாணவன் அதை நன்கு ஞாபகம் செய்து கொள்ளக் கூடுமென்பது இச்சூத்திரங்களின் கருத்து.

ஒருநாள் ஒருவர் 'வியக்தம்' என்னும் வார்த்தைக்குப் பொருள் என்ன என்று கேட்டார். வியக்தம் என்னும் அச் சொல் என்ன சந்தர்ப்பத்தில் வருகிறது என்று நான் கேட்டேன். வியக்தம் என்ற அருஞ்சொல் வந்த அந்தச் சந்தர்ப்பம் எனக்கு விளங்காதபடியால் ஞாபகத்தில் இல்லை என்றார். நியாயம் தான் அவர் சொல்லியது. தெளிவாக விளங்காத விஷயங்கள் ஞாபகத்தில் இரா. ஞாபகத்தில் இருப்பதற்குத் தெளிவு அவசியம். ஆதலால், ஆசிரியர் பாடத்தைத் தெளிவாகக் கற்பிக்கும்படி உபகரணங்கள், தக்கமுறைகளைக் கையாளவேண்டும். ஒரு விஷயத்தைப் பார்ப்பதால் மட்டும் பூரணமான தெளிவுண்டாகாது. அதைக் கேட்பதாலும் எழுதிக்கொள்வதாலும் தெளிவு அதிகப்படும். கரும்பலகைச் சுருக்கமும் பிள்ளைகளுடைய குறிப்புப் புத்தகமும் இதற்கு உதவி செய்கின்றன. கரும்பலகைச் சுருக்கம் தெளிவுக்கும் ஞாபகத்துக்கும் சாதகம். புதிதாகக் கற்கும் விஷயங்களை அவற்றுக்கு இனமான பழைய விஷயங்களுடன் இணைத்துக் காட்டுவதால் தெளிவு ஏற்படும். இந்த இணைத்துக் காட்டிக் கற்பித்தல் அல்லது சம்பந்தப்படுத்துதலைப் பற்றியும் அதன் வகைகளைப் பற்றியும் உதாரணங்களுடன் 24-ம் அதிகாரம் மூன்றாவது குறிப்பில் கூறப்பட்டிருப்பதை இங்கு வாசித்தறிக.

மனப்பாடம்.

பொருள் விளங்காத விஷயங்களை நெட்டுருச்செய்வதில் பயன் இல்லை. அது கிளிப்பிள்ளை பாடம். அதனால் அறிவுவளர்ச்சி, மன அபிவிருத்தி உண்டாவதில்லை. அப்படி நெட்டுருச்செய்யும் விஷயம் நிலையாக மனதில் தங்கியிராது. மனதுக்கும் பாரமாயிருக்கும். ஆனால், அறிவு வளர்ச்சிக்கும் பிற்கால வாழ்க்கைக்கும் அவசியமானவற்றைத் தெளிவாக அர்த்தப்படுத்திக் கொண்டபின் மனப்பாடம் செய்யவேண்டும்.

அவையாவன: புது வார்த்தைகட்கு எழுத்துக் கூட்டல்; கணித வாய்பாடுகள், பூமிசாஸ்திரத்தில் முக்கியமான நதி, கடல், நீரோட்டம், ஏரி, நகரங்களின் பெயர்கள்; சரித்திரத்தில் முக்கியமான அரசர், சீர்திருத்தவாதிகள், வீரர், நகரங்கள், ராஜ்யங்களின் பெயர்கள், தெய்திகள் முதலியன; இலக்கணச் சூத்திரங்கள்; நயமான வாசக இலக்கியப் பகுதிகள் முதலியன.

பூர்வத்தில் படிப்பென்ருல் எல்லாம் மனப்பாடம்தான். நாம் தற்காலத்தில் மனவளர்ச்சிக்கும் அறிவுக்கும் பிற்கால உபயோகத்துக்கும் அவசியமான கற்பனு சக்தி, நல்ல ஆழ்ந்த யோசனே, நியாய சிந்தனே, உண்மை தெளிதல் முதலிய மனே தத்துவங்களே விருத்தி செய்யக்கூடிய முக்கியமான விஷயங்களே மட்டும் மனப்பாடம் செய்யச் சொல்லுதல் போதுமானது. அறவே மனப்பாடம் இல்லாத கல்வி கல்வி அல்ல.

மனப்பாடம் செய்யும் முறை.

கொடுக்கப்பட்ட விஷயம் முழுவதையும் ஒரே மொத்தமாய் மனப்பாடம் செய்வது கஷ்டம். இதனுல் வீண் காலக் கழிவும் ஏற்படும். வரிவரியாக மனப்பாடம் செய்வது இலகு. ஆனுல், முழுவதையும் மொத்தமாகச் சேர்த்து வெளியிடும் போது கிரமம் விட்டுப்போக ஏதுவாகும்; கிரமம் தவருமல் ஒப்பிப்பது கஷ்டம் தான். ஆகையால், ஒரு விஷயத்தை அதிலுள்ள பொருள் அடக்கத்துக்கு ஏதுவாய்—உதாரணமாக, 15 வரியுள்ள ஒரு விஷயத்தைப் பாகத்துக்கு 4 அல்லது 5 வரி வீதம் 3, 4 பகுதியாக வகுத்து, முதலில் ஒவ்வொரு பகுதியாக மனப்பாடம் செய்துகொண்டு, பின்பு முழுவதையும் சேர்த்து வெளியிடுவதற்குச் சிரமம் இராது. இவ்வாறு பாகம்பாகமாக மனனம் செய்வதே சிறந்த முறை.

படித்தவற்றில் அநாவசியமானவைகளை மறந்துவிட வேண்டும். விஷயங்களை மறப்பதும் கல்வியின் ஒரு அம்சம் தான். மறந்துவிடுவதால், மனதுக்குண்டாகும் வீண் பாரம் நீங்கி, உபயோகமான புதிய விஷயங்களைக் கிரகிக்க அதற்குச் சாவகாசம் ஏற்படும்.

ஞாபகத்துக்கு அனுகூலமான சில உபாயங்கள்.

இங்கிலிஷில் இதை Mnemonics என்பர். ஒரு மலை உயரம் 12365 அடி. இதை 12—365 என்று வகுத்து, ஒரு வருஷத்துக்குரிய மாதங்களும் நாட்களும் என்று பதித்துக் கொண்டால் ஞாபகம் இருக்கும்.

அற்ற தலைபோக அறுததலை நான்கினையும்
பற்றித் திருகிப் பறியேனோ—வற்றல்
மரமனை யானுக்கிம் மானை வகுத்த
பிரமனை யான் காணப் பெறின்.

தமிழ்ச் செய்யுளைப் படிப்பதற்கு, மேல் செய்யுளில் தடித்த எழுத்துக்களில் காட்டியிருக்கிறபடி எதுகை, மோனை களைக் கவனித்துப் படித்தால் ஞாபகத்துக்கு அனுகூலமாய் இருக்கும்.

அற்ற	அறுத	
பற்றி	பறியே	வற்றல்
மரமனை	மானை	
பிரமனை	பெறின்	

அடிகள் தோறும் இவற்றை ஞாபகத்தில் பதித்துக் கொண்டால் மற்றச் சீர்களும் சுலபமாய் ஞாபகத்துக்கு வந்து விடும் அல்லவா?

Violet, Indigo, Blue, Green, Yellow, Orange, Red—இந்த ஏழு வர்ணங்களின் பெயரையும், விடாமலும்

வரிசையாகவும், சொல்வதற்கு உதவியாக இவற்றின் முதல் எழுத்துக்களைமட்டும் எடுத்து 'Vibgyor' என்ற ஒரு சொல் தொகுத்துக்கொண்டால், எழுத்துக்களைக் கொண்டு எல்லா வர்ணங்களின் பெயர்களையும் சொல்லிவிட லாம்.

ஆசிரியரும் மாணவரும் சமயோசிதம்போல வேறு (Mnemonics) ஞாபக உபாயம் கண்டு உபயோகப்படுத்திக் கொள்ளவேண்டியது.

---

15. கற்பனுசக்தி.

நாம் இராக்ஷஸனைப் பார்த்திருப்பதில்லை. ஆனாலும், அவனுடைய உருவம் எப்படி இருக்கக்கூடும் என்று பாவனை பண்ணும்போது நமது மனக் கண்களின் முன் ஒரு படம் உண்டாகிறது. வளர்ந்து கருத்துப் பருத்தவன். கைகள் நாலு. நகங்கள் ஒவ்வொரு அடி நீளம். பற்கள் கொம்பு போல் நீண்டுகொண்டிருக்கின்றன. மூக்குச் சப்பையாக இருக்கிறது. தலைமயிர் கம்பிபோல விறைப்பாய் நீண்டு ஒழுங்கற்றுக்கிடக்கிறது—இந்த மாதிரி ஒரு கோர ரூபத் தைச் சிருஷ்டிக்கிறோம். மனம் ஒரு ரூபத்தைச் சிருஷ்டிப் பதுதான் கற்பனுசக்தி. கற்பனை — சிருஷ்டித்தல் என்று அர்த்தம்.

சென்னையிலுள்ள ஹைகோர்ட்டுக் கட்டடங்களைப் பார்த்த ஒருவர் அதை வருணித்துக் கொண்டு போகிறார். கேட்கிறவன் அவர் வருணிக்க வருணிக்கத் தன் மனதிலே ஒரு ரூபத்தை உண்டுபண்ணுகிறான். அப்படி மனதில் ஒரு ரூபம் உண்டுபண்ணுவதுதான் கற்பனுசக்தி.

இராக்ஷஸனுக்கு ஒரு ரூபம் கற்பனை செய்கிறோம். அந்த ரூபத்தைக் கற்பனை செய்யக் காரணம் என்ன?

இராமாயணம் முதலிய நூல்களில் அரக்கரை வருணித்துப் புலவர்கள் எழுதியிருப்பதை வாசித்த அல்லது கேட்ட பழைய அறிவு நமக்கு இருக்கிறது. அரக்கரைப்போன்ற படங்கள், சிலைகளைக் கண்டிருப்பதாலும் முன்னறிவு மனதில் ஏற்கனவே பதிந்துகிடக்கிறது. ஆகவே, இந்த முன்னறிவின் உதவியைக்கொண்டு கற்பனை செய்கிறோம். கற்பனாசக்திக்கு முன்னறிவு அவசியம். முன்னறிவு குறையக் குறைய கற்பனைசெய்யும் திறமையும் குறையும். அறவே முன்னறிவில்லாத ஒரு விஷயத்தைப்பற்றிக் கற்பனைசெய்வது முடியாது. கற்பனைசெய்வதற்கு இயல்பான திறமையும் வேண்டும். இது பிறப்பிலேயே ஒருவனுக்கு அமையலாம், அல்லது பெற்றோரிடமிருந்து சுதந்தரித்துக்கொண்ட சம்பத்தாக இருக்கலாம். உயர்ந்த கருத்துக்கள் அடங்கிய கவிகளை எழுதும் புலவர்கள், மனதை உருக்கக்கூடிய அழகிய சித்திரங்களை வரையும் ஓவியர்கள், நவ நவமான இயந்திரங்களைக் கண்டுபிடிக்கும் சாஸ்திரிகள், அரசியல் சமுதாய தீர்க்கத்தரிசிகள் முதலியோருடைய அபாரமான கற்பனாசக்திக்கு இயற்கையாக அமைந்த சுய சக்தி காரணமாக இருக்கிறது. அவர்களுடைய கற்பனாசக்திக்கும் முன்னறிவு இன்றியமையாததுதான்.

பிள்ளைகளும் கற்பனாசக்தியும்.

சிறுவர்களுடைய முன்னறிவு குறைவு. அவர்களுக்கு இருக்கும் குறைவான முன்னறிவுங்கூட திட்டவட்டமானதல்ல. ஆதலால், அவர்களுடைய கற்பனாசக்தியும் தெளிவாய் சரியாய் இருப்பதில்லை. கண் மூக்கில்லாமல் கற்பனை செய்வார்கள். கல்லைக் குழந்தையாகவும், கம்பைக் குதிரையாகவும் பாவனை பண்ணிக்கொள்வார்கள். இயல்புக்கு விரோதமாகக் கற்பனை செய்வர். மிருகங்கள் பேசுவதுபோலுள்ள கதைகளையும், மாயக் கதைகளையும் நம்புவார்கள்.

ஆசிரியர் பிள்ளைகளுடைய கற்பனுசக்தியை அடக்கக் கூடாது. தெளிவான, சரியான, இயல்பான கற்பனை செய்யும்படி அவர்களை நடத்தவேண்டும். வாய்மொழிக் கட்டுரை, எழுத்துக் கட்டுரை, தொடர்களை வைத்துக் கதை உண்டாக்குவது, பத்திரிகைகளுக்கு வியாசம், படம் எழுதுவது, சித்திரங்கள், மாதிரிகள் செய்வது முதலிய அப்பியாசங்களால் கற்பனுசக்தியை நல்ல வழியில் திருப்பிவிடலாம். நாடகம், சினிமா, மந்திரதீபப் படக்காக்ஷிகள், கதைகள், உப்மான உபமேயங்கள், உல்லாசப் பிரயாணங்கள் இவைகளால் அவர்களுடைய மனம் அநேக அனுபவங்களை அடைந்து நியாய ரீதியான கற்பனை செய்வதற்குப் பயிற்றுவிக்கப்படலாம். பாடங்களைக் கூடியவரை ஐம்புலன்களின் வழியாகவும் மனதில் ரூபம் உண்டாகும்படி தெளிவாகவும் கற்பிக்கவேண்டும். அன்பு, வீரம், மானம், சோகம், துக்கம் முதலிய இன்ப துன்ப உணர்ச்சிகள் உண்டாகும்படி கற்பிக்க வேண்டும். மனதில் தெளிவான ரூபம் ஏற்பட்டால்தானே உணர்ச்சி உண்டாக முடியும்?

கற்பனுசக்தி வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒரு மனுேதத்துவம். வீரர்கள் பகைவர்களை வென்று போரில் வெற்றியடைவதும், அரசாங்கத்தார் சட்ட திட்டங்களை வகுத்து மனிதரை ஆளுவதும், வியாபாரிகள் நஷ்டமடையாமல் வியாபாரம் செய்து லாபமடைவதும் முதலிய எல்லாம் நியாய ரீதியான கற்பனுசக்தியினுலேதான். புராணக் கதைகளைப் போன்ற அபத்தமான கற்பனை செய்யாமல் உண்மையான, பிரயோஜனமான கற்பனை செய்து, மனிதன் தனக்கும் உலகத்துக்கும் பயன்பட வாழும்படி அவனுடைய கற்பனுசக்தியைத் தக்கவாறு பயிற்றுவித்துச் சீர்ப்படுத்தி வளர்க்கவேண்டியது ஆசிரியருடைய பொறுப்பு. கல்வியின் நோக்கம் மனதையும் அதின் தத்துவங்களையும் சரிப்பட வளர்த்துப் பிற்கால வாழ்க்கைக்கு ஏதுவாகப் பயிற்றுவிப்பதல்லவா?

16. பொது அறிவு அல்லது பகுத்தறிவு.

மனேவளர்ச்சியின் படிகளில், பொது அறிவு அல்லது பகுத்தறிவு மூன்ரும் நிலைக்குரியது. மனம் புலப்பாட்டு நிலையிலிருந்து பொருளறிவு நிலைக்கு வளர்ந்து பின்பு மூன்ருவது நிலையாகிய பொதுஅறிவு நிலையை அடைகிறது. முன்னுள்ள அட்டவணையைப் பார்க்க. மனவளர்ச்சியின் இக் கடைசி நிலை பொருளறிவு நிலைக்குப் பின் உண்டாகும் நிலை என்பதை நினைவில் வைத்துக்கொண்டு, இந்த அத்தியாயத்தை வாசிக்கவேண்டும்.

நாற்காலி என்ருல் என்ன?
நட்பு என்ருல் என்ன?
பெயர்ச்சொல் என்ருல் என்ன?

இவைபோன்ற கேள்விகளுக்கு விடை கூறுவதும், பிறர் கூறும் விடையை அர்த்தப்படுத்திக்கொள்ளுவதும் நமக்கு எளிது. ஏனென்ருல், நாம் பொதுஅறிவு நிலை யடைந்து விட்டோம். பிள்ளைகளோ தமது மனவளர்ச்சியின் இரண்டாம் நிலையில் இருக்கிருர்கள். இரண்டாம் நிலையில் இருக்கும் அவர்கட்கு மூன்ரும் நிலைக்குரிய விஷயங்கள் எட்டா. இது இயல்பு. ஏனெனில், பொது அறிவு நிலை பொருளறிவு நிலைக்குப்பின் உண்டாவது. பொருளறிவு உண்டானுல்தான் பொது அறிவு உண்டாகும். பொருளறிவில் குறைவிருந்தால் பொது அறிவிலும் குறைவுண்டாகும். இளமையில் தக்க உணவின்றி மெலிந்திருப்பவன் பெரியவனுன பின்னும் பூரண தேக வளர்ச்சியுடையவனுயிருப்பது அசாத்தியம் அல்லவா? அது போலவே மனதின் இரண்டாம் நிலைக்குரிய பொருளறிவு நிரம்பாத நிலைமையிலிருக்கிற சிறுவரிடம் மேற்கண்டவை போன்ற வினுக்கட்கு விடையாக வரக்கூடிய பொது அறிவுக் கடுத்த விஷயங்களை எதிர்பார்க்கக்கூடாது.

குழந்தைக்கு அதன் வயதுக்குரிய ஆகாரத்தையே கொடுக்கவேண்டும். அப்படியே பொருளறிவு நிலையில் இருக்கும் பிள்ளைகட்குப் பொருட்களைப் பற்றியும் பொருட்கள் மூலமாகவும்தான் கற்பிக்கவேண்டும். ரூபமான வற்றைப் படிக்கவேண்டிய நிலையில் இருக்கும் அவர்கட்கு அரூபமானவற்றைக் கற்பிப்பது இயல்புக்கு விரோதம். ஆதலால், பொருளிலிருந்து பொருளின் பொதுக் குணத்தையும்; கதையிலிருந்து அதின் படிப்பினையையும்; உபமானத்தின் மூலமாய்க் கருகலான உபமேயத்தையும், உதாரணங்களி லிருந்து விதியையும் கற்பிக்கவேண்டும். உபகரணமாக உபயோகிக்கும் பொருட்கள், கதைகள், உபமானங்கள், உதாரணங்கள் ஆகிய இவை ரூபமானவை. பொருளின் பொதுக் குணம், படிப்பினையாக வரும் நீதி, உபமேயமாக வரும் உண்மைகள், விதிகள் ஆகிய இவை அரூபமானவை. ரூபமானதிலிருந்து அரூபமானதைக் கற்பிக்க (From concrete to abstract); முதலாவது உதாரணம் பின்பு விதி (From examples to precept or definition); இவை பொருளறிவு நிலையிலிருக்கும் மாணவர்க்குக் கற்பிக்கும் ஆசிரியருக்குப் போதனைச் சட்டங்கள்.

ஆரம்பத்திலேயே, நாலு கால்கள், சாய்வு பலகை உடையது நாற்காலி என்று பொருளின் பொதுக் குணத்தைச் சொல்லிவிடக் கூடாது. பொருளுக்குப்பின் பொது அறிவைக் கற்பிப்பதுதான் முறை; அதுதான் வளர்ச்சிக் கிரமம். ஆதலால், முதலாவது மரம், இரும்பு, பளிங்கு முதலியவற்றால் செய்யப்பட்ட பலவித நாற்காலிகளைக் காட்டி, பிள்ளைகள் அவற்றை உற்றுநோக்கிக் கவனித்துப் பொருளறிவை அடைந்தபின்பு, நாற்காலி என்றால் என்ன என்னும் கேள்விக்கு விடையாகவரும் பொது அறிவைக் கற்பிக்கலாம். பலவித நாற்காலிகளைப் பார்த்துப் பொருள்

அறிவையடைந்தபின் நாற்காலியின் பொதுக் குணத்தை வருவிப்பது எளிது; பொருளறிவு உண்டானபின் பொது அறிவு உண்டாவது இயற்கையன்றோ!

A, B என்ற இருவருடைய நட்பை விளக்கும் உதாரணக் கதை ஒன்றைக் கூறினபின்பு, இந்த் A, B என்ற இருவரைப் போல யாராயினும் இருவருக்குள் இருக்கும் அன்புச் சம்பந்தத்துக்குத்தான் நட்பு என்று சொல்வது எனப் பொதுவிதி கூறினுல் எளிதாக விளங்கும். கதையின் மூலமாய் நட்பைப்பற்றிய பொருளறிவு உண்டாகிறது. அந்தப் பொருளறிவின் மூலமாய் நட்பு என்ருல் என்ன என்ற பொது அறிவு ஜனிக்கிறது.

பெயர்ச்சொல் என்ருல் என்ன? இதற்குப் பொதுவிதி கற்பிக்கும் விதமாவது: சில பொருட்களின் பெயர்களைச் சொல்லும்படி பிள்ளைகளைக் கேட்க. உயிருள்ள, உயிரில்லாத பொருட்களின் பெயரைச் சொல்லும்படி அவர்களைத் தூண்ட வேண்டும். கதவு, சன்னல், புத்தகம், புரு, வாத்து, குதிரை, பசு என்று பலவாறு உற்சாகமாய்ச் சொல்வார்கள். மனிதர், இடங்களின் பெயர்களும் உதாரணமாகச் சொல்லப்படும் படியாகப் பாடப் புத்தகத்திலிருந்து பொருட்களின் பெயர்களைமட்டும் வாசிக்கும்படியாகக் கேட்கலாம். பிள்ளைகள் சொல்லிய பெயர்களைக் கரும்பலகையில் எழுதியானபின், நாய் என்னும் பொருள் வேறு, நாய் என்னும் சொல் வேறு; புத்தகம் என்னும் பொருள் வேறு, புத்தகம் என்னும் சொல் வேறு என்ற வித்தியாசத்தை விளக்கவேண்டும். பின்,

கரும்பலகையில் எழுதியிருப்பது என்ன?

சில சொற்கள்.

இந்தச் சொற்கள் எதைக் குறிக்கின்றன?

பொருட்களின் பெயரைக் குறிக்கின்றன.

பொருட்களின் பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச் சொல் என்ற பொதுவிதியைக் கடைசியாகக் கற்பிக்க வேண்டும்.

நாம் உணவு கொள்கிறோம். உணவுக்காக உணவைக் கொள்வதில்லை. உணவாகிய பொருள் ஜீரணமாகி ரஸமாகும் நிலைமையை உத்தேசித்தே உண்கிறோம். உணவு முக்கிய மல்ல. ரஸமே முக்கியம். ஆனாலும், உணவுப் பொருள் இல்லாமல் ரஸம் இல்லை. அப்படியேதான், பொருள்களைப் பற்றிப் படிப்பதின் நோக்கம். உதாரணங்கள், உபமானங்கள், படிப்பதின் நோக்கம் பொது அறிவை அடைவதற்காகவே. பொருளறிவு நமது நோக்கம் அல்ல, பொது அறிவே நோக்கம்; ஆனால், பொருளறிவு பொது அறிவுக்குக் காரணமாய் இருப்பதாலும், பொருளறிவு முதலில் ஏற்பட்டாலல்லாமல் பொது அறிவு ஏற்படாது ஆதலாலும், முதலில் பொருளறிவை அடையவேண்டியதிருக்கிறது. பொருளறிவாகிய அஸ்தி பாரத்தை யிட்டு, அதன்மேல் பொது அறிவாகிய கட்டடத்தை எழுப்பவேண்டும். அதற்கு மாறாகப் பாட ஆரம்பத்திலேயே பொது விதியைக் கூறிவிட்டு, பின்பு அதற்கு உதாரணங்கள் கூறுவது தலைகீழான, இயற்கைப் பேதமான, நாசகரமான முறையாகும். இம்முறையை ஒழிக்கவேண்டும். நிற்க,

மன நிலை படிப்படியாக வளர்ந்தாலும் தொடர்ந்தே வளரும் என்று சொன்னோம். ஆம்! பொருளறிவு நிலையி லிருக்கிற பிள்ளைகட்கும் ஓரளவு பொது அறிவு இருக்கத்தான் செய்யும். அவர்கட்கு அறவே பொது அறிவு இல்லை என்பதில்லை. ஆதலால், அவர்களுக்குப் பொது அறிவு இருக்கக்கூடிய சாமானிய விஷயங்களைப்பற்றிப் படித்துக் கொடுக்கப் புகும்போது, முதலாவது பொதுவிதி கூறிப் பின் உதாரணங்கள் கூறலாம்; பொருளைக் காட்டாமலே

பொருளின் குணத்தைக் கற்பிக்கலாம். அது குற்றமன்று. எந்தெந்த விஷயங்களில்தான் இந்த முறையைக் கையாளலா மென்பது தமது பிள்ளைகளின் மனோநிலையை யறிந்த ஆசிரியருடைய தீர்ப்பைப் பொறுத்தது.

மாணவர் பொருளறிவு நிலையிலிருந்து பொது அறிவு நிலையடைந்த பின்னர் பொருட்கள், உதாரணங்கள், உபமானங் கள் மூலமாய்க் கற்பிக்க வேண்டியதில்லை. ஆரம்பத்திலேயே பொது விதிகளை, அருபமானவற்றைக் கற்பித்துக் கொண்டு, பின் அவற்றுக்கு உதாரணங்களைக் கொடுக்கலாம். அக்பர் சிறந்த அரசர் என்று சொல்லிவிட்டு, அதற்குக் காரணமாக அவருடைய குணம், திறமை, அரசியல் ரீதி, மதக்கொள்கை களைப்பற்றிப் பின்னர் கூறலாம். ஆயினும், அவர்கட்குப் போதிய அளவு பொருளறிவு இல்லாத புதிய கருகலான விஷயங்களைக் கற்பிக்கும்போது உபகரணம் உதாரணங்கள் மூலமாகக் கற்பிக்கவேண்டியது.

பொருளறிவு, பொது அறிவு நிலையில் இருப்பவர் கட்குக் கற்பிப்பதற்குக் கையாளவேண்டிய திட்டமான முறைகளைப் பற்றி முறைக்கோட்பாடுகள் என்னும் அத்தியா யத்தில் விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காண்க.

---

17. செய்தல் - WILLING

மனதின் முத்தொழில்களில் செய்தல் ஒன்று. தெரு வழியே போகிறோம். ஓடி விளையாடிக்கொண்டிருந்த குழந்தையொன்று கீழே விழுவதைக் காண்கிறோம்.

பிள்ளை விழுவதைக் காண்பது மனதின் அறிதல் தொழில்

விழுந்துவிட்டதைக் கண்டு வருந்துவது — மனதின் உணர்ச்சித் தொழில்

அக் குழந்தையைத் தூக்கி எடுக்கிறோம் — மனதின் செய்தல் தொழில்

விஷயத்தை அறிவதால் உணர்ச்சியும், உணர்ச்சியால் செய்தலும் உண்டாகின்றன.

இந்த அத்தியாயத்தில் புலப்பாட்டு நிலை, பொருளறிவு நிலை, பொது அறிவு நிலை ஆகிய மூன்று நிலையிலும் இருப்பவர்களுடைய மனதின் மூனரும் தொழிலாகிய செய்தல் தொழிலை (Willing)ப் பற்றிக் கவனிப்போம்.

புலப்பாட்டு நிலையில் இருப்பவர்களுடைய செய்தல்.

இந்நிலையில் இருப்பவர்களுடைய செயல்கள் தும்முதல், இருமுதல், துரத்துதல், இமை கொட்டுதல், சுவாசித்தல் முதலியன. இவை பிரதிக் கிரியைகள். பிரதிக்கிரியைகள் பிள்ளைகளுடைய ஆதீனத்துக்கு உட்பட்டவை அல்ல. முற்றிலும் அவர்களுடைய ஆதீனத்துக்கு உட்படாதவைகள். இந்த நிலையில் இருக்கும் குழந்தைகள் கல்விச்சாலைக்குச் சம்பந்தப்படாதிருப்பதால், இவர்களுடைய செய்தல் தொழிலைப்பற்றி நாம் இதற்கு அதிகமாய் அறியவேண்டுவதில்லை.

பொருளறிவு நிலையில் இருப்பவர்களுடைய செய்தல்.

பொருளறிவு நிலை பொது அறிவு நிலைக்கு அஸ்திபாரமானது பொது அறிவு நிலையில் செய்தல் தொழில் வளர்ச்சி பெற்றிருக்க வேண்டுமாயின் பொருளறிவு நிலையின் செயலை அதிகமாகப் பயிற்றுவிக்கவேண்டும். இந்நிலையில் இருப்பவர்கள் எலிமெண்டரிப் பாடசாலைப் பிள்ளைகளாய் இருப்பதால், இவர்களுடைய செய்தல் தொழிலைப்பற்றி நாம் விபரமாய் அறியவேண்டும்.

இந்நிலையில் இருப்பவர்களுடைய செயல்கள் இயற்கைத் தூண்டுதல்கள் எனப்படும். அவையாவன :

மற்றவர்களைப்போல நடித்தல் நடிப்புத் தூண்டுதல் (Imitation)

விஷயங்களை அறியவேண்டுமென்ற ஆசை	அறிவுத்தூண்டுதல் (Curiosity)
சுறுசுறுப்பாக ஓடியாடி விளையாடுதல்	விளையாட்டுத் தூண்டுதல் (Play)
பொருட்களைச் சேகரித்துச் சொந்தப்படுத்துதல்	சேகரிப்புத் தூண்டுதல் (Acquisition)
தான் என்பது	தான் என்ற தூண்டுதல் (Self Assertion)
தனது குடும்பம், வகுப்பு முதலியவை மேலாக இருக்க வேண்டும் என்பது	சமூகத் தூண்டுதல் (Social Instincts of Rivalry and Co-operation)

இவர்களுக்கு இருக்கும் வேறு சில தூண்டுதல்கள் கல்வித் துறைக்கு அதிகமான சம்பந்தமில்லாதவைகளானதால் அவற்றை இங்குக் குறிப்பிடவில்லை.

பொருளறிவு நிலையிலிருக்கும் பிள்ளைகள் மேற்சொல்லிய இயற்கைத் தூண்டுதல்களுக்கு ஈடுபட்டுத் தொழில் செய்கிறார்கள். அவர்களுடைய செயல் பெரும்பாலும் அவர்களுடைய சுயாதீனத்துக்கு உட்படாமலும், சிறுபான்மை உட்பட்டும் இருக்கும். உதாரணமாக, காலை 8-மணிக்கு A-யும் B-யும் பள்ளிக்கூடத்துக்கு வருகிறார்கள். ஏற்கனவே வந்து ஆசிரியர் குறித்துவிட்ட 10-வரிகளை மனப்பாடம் செய்யலாமென்று யோசித்தார்கள். தெருவிலே ஒரு மாயவித்தைக்காரன் வேடிக்கை காட்டிக்கொண்டிருப்பதைக் கண்டு அதில் ஈடுபட்டு, வித்தை பார்த்து மகிழ்வதில் காலத்தைக் கழித்துவிட்டார்கள். 'இன்னும் என்ன மந்திரம் செய்கிறான், பார்ப்போம்' என்று நினைத்து, ஒவ்வொன்றாய்ப் பார்த்தும் திருப்தியடையாமல் நின்று காலம் கடத்திவிட்டார்கள். பாடசாலையில் மணி அடித்த சத்தம் கேட்டு

ஓடோடியும் சென்றார்கள். மனப்பாடம் படிக்கவில்லை. அன்று முழுவதும் அவ்விருவரும் பாடசாலையிலும் வீட்டிலும் காலையில் மந்திரவாதி பேசியதுபோலவும் செய்தது போலவும் நடித்து விளையாடினார்கள். காலத்தில் பாடசாலைக்கு வரவேண்டும். குறித்த பாடத்தைப் படிக்கவேண்டும். இதுதான் அவர்கள் செய்யவேண்டியது. இதைச் செய்யும்படி தங்களுடைய மனதை ஆண்டுகொள்ள அவர்களால் கூடாமற்போனது; மேலும் மேலும் மந்திரவாதி என்ன தான் செய்கிறான் என்று பார்க்கவேண்டும் என்ற தூண்டுதலுக்கு மனம் ஈடுபட்டு வேலை செய்தது. மனம் இவ்வாறு தூண்டுதல்களுக்கு அடிமைப்பட்டு வேலை செய்யும் நிலைமையிலிருந்து விடுதலையடைந்து, சுயாதீனமாகவும் திடமான நிர்ணயத்துடனும் வேலை செய்யக்கூடிய உயர் நிலைக்கு அதைப் பயிற்றுவிப்பது ஆசிரியர் செய்யவேண்டிய வேலையாகும். ஆனால், பிள்ளைகளின் இயற்கைத் தூண்டுதல்களை அடக்கக் கூடாது; அவற்றை அடக்கும்படி பிரயாசப்படுவது இயற்கைக்கு விரோதமானதால் கேடான முடிவையே தரும். ஆகையால், அத்தூண்டுதல்கள் அறிவு வளர்ச்சிக்கும், மனம் திடமான நிர்ணயத்துடனும் சுயாதீனமாகவும் வேலை செய்வதற்கும் ஏதுவாக வளரும்படி அவற்றை உபயோகிக்க வேண்டும்.

இயற்கைத் தூண்டுதல்களை அறிவு வளர்ச்சிக்கும், மனோ வளர்ச்சிக்கும் ஏதுவாக உபயோகப்படுத்தும் விதம்:

நடிப்புத் தூண்டுதல். மோட்டார் சப்தமிடுவதைப் போலவும், அண்டை அயலில் உள்ளவர்கள் பேசுவது, பாடுவது, நடப்பது போலவும் பிள்ளைகள் செய்வதைப் பார்த்திருக்கிறோம். பிள்ளைகள் தமது உடல், உடை இவற்றைச் சுத்தமாக வைப்பது, பாஷையை உச்சரிப்பு வழுவின்றிப்

பேசுவது, அக்ஷரம்போல் எழுதுவது, காலத்தில் பள்ளிக் கூடத்துக்கு வருவது, கடமைகளைச் சரிவரச்செய்வது, நல்லொழுக்கம் ஆகிய இவற்றைப் பார்த்து நடித்துப் பயனடையும்படி ஆசிரியர் அவர்கட்கு முன்மாதிரியாக இருக்கவேண்டும். சரித்திரம், பூகோளம், இயற்கை, க்ஷேத்திரக்கணிதம் இவற்றில் ஆசிரியர் எழுதிய மாதிரிப்படத்தைப் பார்த்துப் பிள்ளைகள் எழுதும்படி செய்யலாம். சம்பாஷணை, நடித்தல் பாடங்கள் நடத்தலாம். எல்லாக் கைத்தொழில் பாடங்களிலும் நடிப்புத் தூண்டுதலுக்கு இடம் உண்டு.

பார்த்துச் செய்து படிப்பது பிள்ளைகட்கு எளிதாயும், பிரியமாயும் இருக்கும். மற்றவர் நடப்பதுபோல் நடந்து, பேசுவதுபோல் பேசிக் கூச்சலிட்டுத் தீயவழியில் இந்தத் தூண்டுதல் செல்வதைத் தடுத்து, மேற் கூறியவாறு நல்ல வழியில் செல்லும்படி பழக்கவேண்டும்.

விளையாட்டுத் தூண்டுதல். இயக்கத்தில், வேலைசெய்வதில், சுருசுருப்பாக இருப்பதில் பிள்ளைகளுக்கு விருப்பம். கைகட்டி வாய்பொத்தி அசையாமலிருந்து பாடம் கேட்கும்படி அவர்களை வற்புறுத்துவது இயற்கையல்ல. இந்தக் கொடுமைக்கு அஞ்சியே பிள்ளைகள் பாடத்தையும், பள்ளிக்கூடத்தையும், ஆசிரியரையுங்கூட வெறுக்கிறார்கள். பாடசாலைக்கு வராமல் ஓடி ஒளிக்கிறார்கள். ஆதலால், பாடமுறையில் இயக்கம், சுருசுருப்பு, விளையாட்டு இவற்றுக்கு இடமிருக்கவேண்டும். பாடங்களை நடித்து, சம்பாஷித்துக் காண்பித்தல்; தீவு, மலை, நதி, உபநதி, கடல், துறைமுகம், தேசம், அதின் விளை பொருட்கள் இவற்றைக் காட்டும் படங்கள் உண்டாக்குதல்; ஆடல் பாடல்; தர்க்க பிரசங்க சபைகள் வைத்தல் முதலிய வேலைகள் செய்யச் சொன்னால் பிள்ளைகள் எவ்வளவு சுருசுருப்பாகவும் உற்சாகமாகவும் சந்தோஷமாகவும் படிக்கக்கூடும் என்பது அனுபவத்தில் கண்டவர்களுக்கு நன்கு தெரியும்.

பாட சம்பந்தமாக உபயோகப்படும் வண்ணம் ஆட்டம், பாட்டு, விளையாட்டு, வேலைகளுக்கு இடங்கொடுக்கவில்லை யென்றால், பிள்ளைகளுடைய இயற்கையான விளையாடும் தூண்டுதல் தவறான வழியில் அவர்களை நடத்திச்சென்று, வாழ்க்கைக்கு உதவாதவர்களாக்கிவிடும்.

சேகரிப்புத் தூண்டுதல். பிள்ளைகளுக்கிருக்கும் இத் தூண்டுதல் பாடசாலைக்குப் பெரிய ஆஸ்தி என்னலாம். ஜப்பானைப்பற்றிப் படிக்கிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். ஜப்பான் தேசத்தின் மலை, நதி, கடல் முதலிய இயற்கை அமைப்பு, விளைபொருள், கைத்தொழில், ரயில்வே, அரசியல் இவைகளைக் காட்டக்கூடிய தனித்தனிப் படங்கள், அங்கே செய்யப்படும் பென்சில், பட்டன், விளையாட்டுச் சாமான்கள், துணிமணி முதலிய பொருட்களைச் சேகரித்துக் கொடுக்கும் படி பிள்ளைகளிடம் சொன்னால் பாடசாலைக்கும் பிள்ளைகட்கும் பெரும் பயன். இப்பொருட்களினுதவியால் அவர்கள் தமது ஐம்புலன்களின் வாயிலாகவும், உபகரணங்கள் மூலமாகவும் தெளிவாக ஜப்பானைப்பற்றிய விஷயங்களை அறிந்துகொள்ள ஏதுவாகும். இயற்கை, சரித்திரம் முதலிய சகல பாடங்கள் சம்பந்தப்பட்ட பொருட்களையும் பிள்ளைகளின் உதவியைக் கொண்டே சேகரித்துப் பாடசாலைக்கு நல்ல மியூசியம் உண்டாக்கிக்கொள்ளலாம். அதிகமான சாமான் கொண்டுவந்திருக்கும் பிள்ளைகட்கு வருஷக் கடைசியில் பரிசு கொடுப்பதாலும், கொண்டுவரப்படும் சாமான்களைப் பிள்ளைகளின் பேராலேயே மியூசியத்தில வைப்பதாலும் அவர்களை உற்சாகப்படுத்தலாம். பிள்ளைகள் தமக்குச் சொந்தமாகப் பிரயோஜனமான படங்கள், இலைகள், புஷ்பங்களைச் சேகரித்து வைத்துக்கொள்ளும்படி ஏவலாம். இவ்வாறு அவர்களுடைய தூண்டுதலை அறிவு, மனோவளர்ச்சிகட்கு ஏதுவாக நாம் பயிற்றுவிக்கத் தவறினால், அவர்கள் உடைந்த கண்ணாடிகள்,

உபயோகமற்ற சாவிகள், செல்லாத காசுகள், சாக்குத் துண்டுகள், பழைய நூல்கள் முதலியவற்றைச் சேகரித்துத் தங்கள் ஜேபியிலாயினும், தாள் தகரப் பெட்டிகளிலாயினும் இட்டுவைத்து, பயனற்ற கீழ்த்தரமான முறையில் தமது தூண்டுதலைப் பிரயோகம் செய்வர். பொருட்களைச் சேகரிப்பது வாழ்க்கைக்கு இன்றியமையாத தூண்டுதல். இது பயிற்சியடையவேண்டிய நற்பருவத்தில் வறிதே கெட்டுப் போகா வண்ணம் தடுத்து ஆளவேண்டும்.

அறிவுத் தூண்டுதல். பிள்ளைகள் ஆசிரியரிடம் 'அது என்ன?, இதென்ன?, அது ஏன் இப்படி இருக்கிறது?, ஏன் அப்படி இருக்கக்கூடாது?' என்று இடை இடையே பல கேள்விகளைக் கேட்பார்கள். இதற்குக் காரணம் விஷயங்களை அறியவேண்டுமென்று அவர்களுக்கு இருக்கும் அவாதான். ஆசிரியர் அங்ஙனம் வினவுகிற பிள்ளைகளைக் கண்டித்து, வினவாதபடி அவர்களைத் தடுப்பது இயற்கைக்கு மாறானது. வினவுகிற பிள்ளைகள்தான் நமக்கு வேண்டிய நல்ல பிள்ளைகள். 'மாணவன் விரும்பாத விஷயத்தைச் சொல்லாதே' என்பது போதனை விதி. ஆசிரியர் தமது மாணாக்கன் கேள்வி கேட்கும் சந்தர்ப்பத்தை உபயோகித்து நல்ல விஷயங்களைப் புகட்டலாம். அவர் தாமாகவே எல்லா விஷயங்களையும் சொல்லிக்கொடுத்து, அவர்களுடைய அறிவுத் தூண்டுதலைத் திருப்தி செய்யக்கூடாது. அவர் தமது வினாக்களாலும், உபகரணங்களாலும் பிள்ளைகள் தாமாகவே விஷயத்தை யூகிக்கவும், சந்தேகமானவற்றைக் கேட்டுத் தெளிந்துகொள்ளவும் இடமளிக்கவேண்டும். உயர்ந்த, பயனுள்ள விஷயங்களை அறியும்படி நாம் அவர்களைப் பயிற்றுவிக்கத் தவறினால், உற்றுக் கேட்டல், தகாத விஷயங்களை அறிய ஆத்திரப்படுதல் முதலிய பிழைகளைச் செய்து, நல்லறிவை அடையாமற் போவர்.

தான் என்ற தூண்டுதலும் சமூகத் தூண்டுதலும்.

நாலு பேர் சிறுவர்கள் சேர்ந்து ஒரு காரியத்தைச் செய்தால், அவர்களில் ஒவ்வொருவனும் தான் தான் அதிகப் பிரயாசப் பட்டு அதைச் செய்ததாகப் பாராட்டிக்கொள்வான். எல்லாப் பெருமையும் தனக்கு வேண்டும், எல்லாப் பொருளும் தன்னுடையதாகவேண்டும் என்று விரும்புவது பிள்ளைகளுடைய இயல்பு. மனிதன் சமூக வாழ்க்கை செய்ய வேண்டிய பிராணியாக இருப்பதால், ஒவ்வொருவனும் தனது சிறு பிராயத்திலேயே தனக்கு மரியாதை கிடைக்கவேண்டுமென்றும், மற்றவர்களைப்போல கல்வி செல்வம் உத்யோகம் அடையவேண்டுமென்றும் ஆசைப்படுவது அவசியம். இந்த ஆசையை ஆசிரியர் நல்ல வழியிற் செலுத்தலாம். வாரப் பரீக்ஷையில் நன்ருய்ச் செய்கிறவனுக்கு வகுப்பில் முதல் இடம்; நன்ருய் வரையப்படுகிற படம், எழுதப்படுகிற எழுத்து பாடசாலையில் யாவரும் பார்க்கக்கூடியவாறு தொங்கவிடப்படும்; சிரேஷ்டமான வியாசங்கள் வகுப்பில் மாதிரியாக வாசிக்கப்படும் அல்லது பாடசாலைப் பத்திரிகையில் பெயருடன் வெளியிடப்படும்; தினமும் தவருமல் காலத்தில் பள்ளிக்கூடத்துக்கு வருகிறவனுக்கு வருஷக் கடைசியில் மெடல் கொடுக்கப்படும் என்று இவ்வாறு பல திட்டங்கள் ஏற்படுத்திஞல், பிள்ளைகள் தாம் தாம் பெருமையடையவேண்டும் என்ற விருப்பத்தோடு, வாழ்க்கைக்கு அனுகூலமான அறிவு மனேவளர்ச்சிகட்கு ஏதுவாய் நற்காரியங்களைச் செய்யப் பழகுவர். இதைப்பற்றிய விபரமான குறிப்புக்களைப் 'பரிசு' என்னும் அத்தியாயத்தில் இன்னும் அதிகமாய் வாசித்தறியலாம்.

இந்தத் திட்டங்களால் பொருமை, அகம்பாவம் முதலிய தீய குணங்கள் உண்டாகாவண்ணம் ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொள்ளவேண்டும்.

சமூகத் தூண்டுதலைப்பற்றி அடுத்த பக்கத்தில் காண்க.

மேற் கூறப்பட்ட சில உபாயங்களால் பிள்ளைகளின் இயற்கைத் தூண்டுதல்களை அவர்களுடைய அறிவு வளர்ச்சிக்கு ஏதுவாக உபயோகப்படுத்துகிறோம். அன்றியும், தூண்டுதல்களைத் தக்கவழியிற் செலுத்திப் பழக்குவதால், நாளடைவில் அவர்கள் மனதைத் தமது சுயாதீனத்தில் வைத்து, திடமான நிர்ணயத்துடன் வேலை செய்யத்தக்க உயர்ந்த நிலைக்கு வரக்கூடும். மனதைப் படிப்படியாக வளர்ப்பது கல்வியின் நோக்கம் அல்லவா?

தூண்டுதலுக்கு அடிமைப்பட்டுச் சுயாதீனமில்லாமல் தொழில் செய்கிற மனம், தூண்டுதல்களின் அடிமை விலங்கை உதறிவிட்டுப் பூரண சுயாதீனமுடன் வேலை செய்யும் போது அறிவு நிலைக்கு வரும்படி நாம் செய்யக்கூடிய வேறு சில உபாயங்களை இங்குக் கூறுவோம். அவையாவன:

1. இவ் விஷயத்தில் பெற்றோர் செய்யவேண்டிய வேலையும் இருக்கிறது. 'அண்ணன் இப்படித்தான் விளையாடி விளையாடிப் பரீக்ஷையில் தேர்ச்சியடையவில்லை; அக்காள் ஒழுங்காய்ப் படித்து வருஷந்தோறும் கௌரவமாகத் தேர்ச்சியடைகிறாள்' என்று சில முன் அனுபவங்களை யெடுத்து உதாரணம் காட்டி ஆலோசனை சொல்லவேண்டும். வீட்டிலே காலையிலும் இரவு முன் நேரத்திலும் பாடம் படிக்கவேண்டும், அமிதமாக விளையாடக்கூடாது என்று பெற்றோர் விதிக்க வேண்டும். இதனால் அவர்கள் தங்கள் தூண்டுதல்களுக்குட் பட்டுத் தீய மார்க்கங்களிற் புகுந்து கெட்டுப்போகாவண்ணம் அவர்களைத் தடுத்துக் காப்பாற்றலாம்.

2. பள்ளிக்கூடத்தில் ஒரு பையன் தூண்டுதலுக்கு இணங்கிக் களவு செய்துவிட்டான்; அல்லது வேறு ஒரு குற்றம் செய்துவிட்டானென்றால், அவனுக்குத் தண்டனை

கொடுக்கவேண்டும். இதைப் பார்க்கும் மற்றப் பிள்ளைகள் தங்கள் தூண்டுதலை அடக்கிக் கிரமமாக நடப்பார்கள். அன்றியும், இலக்கியம், சரித்திரம் முதலிய பாடங்களின் மூலமாய்ப் பிள்ளைகள் யோக்யப் பொறுப்போடு உத்தமர்களாய் நடக்கும்படி போதிக்கவேண்டும். 'நன்மை செய்வோர் நலமும், தீமை செய்வோர் தீமையும் அடைவர்' என்பதைக் கதை, நாடகம், ஸினிமா முதலிய உதாரணங்கள் உபகரணங்கள் மூலமாய் எடுத்துக் காட்டவேண்டும்.

3. சிறுவர்களுக்கு வருங்கால க்ஷேமத்தைப் பற்றிக் கருதும் இயல்பு கிடையாது. வருங்காலத்தைப்பற்றி எட்டி யோசிக்கக்கூடிய மனோசக்தி அவர்களுக்கு இல்லை. ஆதலால், மாதத்திற்கு ஒரு முறை, மூன்று மாதத்துக்கு ஒரு முறை பரீக்ஷை வைக்கவேண்டும். இடையிடையே வகுப்பில் திடும் பிரவேசமாகப் பரீக்ஷை வைத்து மார்க்குகள் அளிக்கலாம். இதனால், அவர்கள் பரீக்ஷையையும் மார்க்குகளையும் உத்தேசித்து, விளையாட்டு முதலிய தூண்டுதல்களுக்கு இணங்கி வீண்காலம் போக்காமல், தூண்டுதலை அடக்கித் திடமான தீர்மானத்துடன் வேலைசெய்யப் பழகுவார்கள். சன்மார்க்கத்திலும் வளர்வார்கள். பழைய பாடத்தில் தினமும் கேள்வி கேட்கத் தவறக்கூடாது என்பதற்கு ஒரு நியாயம் இப்பொழுது தெளிவாகிறதல்லவா?

4. எந்த மனிதனுக்கும் என் குடும்பம், என் கிராமம், என் தேசம் என்ற அபிமானம் இருப்பது இயற்கை. சமூகத் தூண்டுதல் என்று முன் குறிப்பிட்டது இதுதான். இந்த அபிமானம் இருப்பதால்தான் மனிதர்க்கு மனிதர் போட்டியிட்டுக் காரியங்களைச் செய்கின்றனர்; சிலர் தமது குடும்பம் அல்லது கிராமம் அல்லது தேச க்ஷேமத்தைக் கருதி ஒருவரோடொருவர் ஒத்துழைக்கின்றனர். சிறுவர்க்கு எனது வகுப்பு, எனது பாடசாலை மற்ற வகுப்புக்களைவிட,

மற்றப் பாடசாலைகளைவிட முதன்மையாக இருக்கவேண்டும் என்று கருதக்கூடிய அபிமானத்தைத் தூண்டலாம். இதனால் பிள்ளைகளுக்குள் மனோகரமான போட்டிச் சிந்தையும், பொது நலத்துக்காக ஒருவரோடொருவர் ஒத்துழைக்கும் சிந்தையும் உண்டாகும். அநேகர் ஏக சிந்தையுடன் தமது சமூகம் கௌரதை அடைய வேண்டு மென்ற ஒரு பொது நோக்கத்தை வைத்து வேலை செய்யும் இயல்புக்கு *Esprit de Corps* என்பர். ஒவ்வொரு பிள்ளையும் தன் தன் வகுப்பு—உடல் சுத்தம், உடை சுத்தம், தினசரி ஆஜர், நல்லொழுக்கம், படிப்பு, விளையாட்டு யாவற்றிலும் முதன்மையாய் இருக்கவேண்டும் என்று எண்ணி உழைக்கும்படி பல வித பரிசு, ஷீல்ட் திட்டங்கள் ஏற்படுத்தவேண்டும். இதனால் வகுப்பின் ஒவ்வொரு பையனும் தனது தூண்டுதலை அடக்கித் தன் வகுப்புப் பரிசு பெறவேண்டும், ஷீல்ட் பெற வேண்டும் என்ற நோக்கத்துடன் வேலைசெய்வான்.

5. மற்றவர்களுடைய தண்டனை அல்லது கண்டிப்புக்குப் பயந்தாயினும், பரிசு அல்லது புகழை விரும்பியாயினும் தூண்டுதல்களை அடக்கி வேலை செய்வது கீழ்த்தரமானது; ஆனால், மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் இருக்கும்படிக்காகத் தூண்டுதலை அடக்கி வேலை செய்வதுதான் உயர்தரமானது என்று பிள்ளைகள் அறியும்படி செய்யவேண்டும். இவ்விதமாக நாளடைவில் மனச்சாக்ஷியின் நிமித்தம் தூண்டுதலை அடக்கி, நிர்ணயத்துடன் வேலைசெய்யும் மூன்றும் நிலைக்குப் பிள்ளைகளை நடத்திச்செல்லவேண்டும்.

18. பழக்கம்.

இரவில் படுக்குமுன், முன்வாசல் கதவைத் தாழிடுகிறோம். தினமும் ஒரு தடவை இவ்வேலையைச் செய்கிறோம்.

சில சமயங்களில் படுத்துக்கொண்டபின் கதவைத் தாழிட்டோமா இல்லையா என்கிற ஐயம் நமக்கு ஏற்படுகிறது; பார்க்கிறோம். கதவு தாழிடப்பட்டிருக்கிறது.

நாம் ஏதாயினும் ஒரு வேலையைச் செய்யும்போது நமது நரம்பு மண்டலத்தில் ஒரு பதிவு உண்டாகிறது. மறுபடியும் அதே வேலையைச் செய்யும்போது அப்பதிவு ஸ்திரமாகின்றது. இப்படியே மறுபடியும் மறுபடியும் அவ்வேலையைச் செய்யச் செய்ய அப்பதிவு ஆழமாகிக்கொண்டே வருகிறது. நாளடைவில் ஏற்படும் இப்பதிவின் உதவியால் நாம் அவ்வேலையை அதிகச் சிரமம் இல்லாமல் சுலபமாகச் செய்துவிடுகிறோம். பேசுதல், நடத்தல், எழுதுதல் இவைகளைச் செய்யும்போது நாம் அதிகச் சிரமம் எடுப்பதில்லை. என்ன செய்கிறோம் என்று அறியாமலே சக்திச் செலவில்லாமல் யந்திரம்போல ஒரு செயலைச் செய்வது பழக்கம். நரம்பு மண்டலத்தில் ஏற்பட்ட பதிவு காரணமாய் நாம் செய்வதை அறியக்கூடாதவண்ணம் அவ்வளவு சுலபமாய் அவ்வேலை நடக்கிறது. ஆகவே, பழக்கம் அதிகமான சக்திச் செலவின்றி லகுவாக வேலை செய்யச் சாதகமாகின்றது. மேலும், பழக்கத்தினுல் ஞாபகமும், அனுபவமும் உண்டாகும்.

பழக்கம் நற்பழக்கங்களாக இருந்தால் குணமும் நற்குணந்தான். பழக்கம் கெட்டதாயின் குணமும் கெட்டதே. பழக்கங்களின் தொகுதியே குணம், (Character is a bundle of habits.) ஆதலால், பிள்ளைகட்கு இளமைமுதல் நற்பழக்கங்களை உண்டுபண்ணவேண்டும். பிள்ளை 8 வயதாக இருக்கும்போது நரம்பு மண்டலம் பூரணமாக வளர்ந்து புதியதாக இருக்கும். ஆதலால், 8 முதல் 12 வயதுதான் பழக்கங்களை உண்டுபண்ணுவதற்குரிய சிறந்த காலம். அக்காலத்தில் நரம்பு மண்டலத்தில் ஏற்படும் பதிவுகள் நல்ல பேச்சு, நல்ல செயல் இவற்றுல் ஏற்பட்டதாக இருக்கவேண்டும். பதிவு

ஏற்படவேண்டிய இக்காலத்தில், கெட்ட செயல்களுக்கு அடுத்த பதிவு ஏற்பட்டால் தீய பழக்கங்களுண்டாகிவிடும். ஆசிரியரும் பெற்ருேரும் தமது பிள்ளைகள் சன்மார்க்கத்துக் கடுத்த நற்செயல் உடையவர்களாக இருக்கவேண்டுமென்று விரும்புவது உண்மையானுல் அவர்களுடைய பொருளறிவு நிலையாகிய 8 முதல் 12 வயதைப்பற்றிக் கவனமாக இருக்க வேண்டும். தவறினுல், பிற்காலத்தில் அவர்களைச் சீர்ப்படுத்த விரும்பும்போது, பழைய பழக்கங்களை அழிப்பதும் புதிய பழக்கங்களை ஏற்படுத்துவதுமாகிய இரட்டிப்பான வேலைக் கிடமாகின்றது. பிஞ்சில் வளையாததைப் பெரிதானபின் வளைத்துவிடலாமென்பது சந்தேகம்தான்!

நற்பழக்கங்களை உண்டாக்கச் சில முறைகள்: பிள்ளைகள் தவருன செயல்களைச் செய்யாதபடி அவர்களைத் தடுக்கவும், அவர்கள் செய்யும்படி எப்பொழுதும் நற்காரியங்களையே அவர்கள்முன் வைக்கவும்வேண்டும். சன்மார்க்கப் போதனைகள் கூறலாம். பெற்ருேர் ஆசிரியர் ஆகிய இவர்களுடைய முன் மாதிரியைப் பார்த்துப் பிள்ளைகள் ஒழுகும்படி ஏவலாம்.

---

19. நற்குணம் அல்லது நல்லொழுக்கம்.

ஒருவன் மற்றவர்களுடைய நன்மதிப்புக்குப் பாத்திரமாகக் கண்ணியமாய் வாழ்க்கை செய்வதற்கு உயர்குடிப் பிறப்பும், அழகிய தோற்றமும், நூலறிவும் வேண்டும் என்பர் சிலர். ஆனுல், இத்தகைய அம்சமுடையவர்களிற் பலர் மனித சமூகத்தால் வெறுத்துத் தள்ளப்படுதற்குரியவர்களாக இருப்பதைக் காண்கிருேம். வேறு சிலரோ எளிய குலமும், குறைந்த அளவான நூலறிவும், சிற்றுடலும் உடையவர்களாக இருந்தும் யாவருடைய அன்புக்கும், நம்பிக்கைக்கும், நன்மதிப்புக்கும் பாத்திரமாக விளங்குகின்றுர்கள். இவ்விருதிறத்தினருடைய குண வேறுபாடுதான்

இதற்குக் காரணமாகும். நற்குண நல்லொழுக்கமுடைய வர்கள் பெருமையும், அவை இல்லாதார் சிறுமையும் அடைவர் என்பது நித்தியமான சத்தியம்.

சிலர் ஏராளமான நூல்களை வாசித்து, சிறந்த வித்யா பட்டங்களைப்பெற்று, மலையளவு திரண்ட அறிவுடையவ ராய் இருப்பினும், குணத்தில் அணுவைப்போல சிறுத்துக் காணப்படுகிறார்கள். இது எவ்வளவு பரிதாபம்! இதற்குக் காரணம் ஓரளவு கல்வி முறையிலிருக்கும் குறைபாடுதான். உண்மைக் கல்வியினால் உடல் வளர்ச்சி, மன வளர்ச்சி, குண வளர்ச்சி ஆகிய இம்மூன்றும் உண்டாதல் வேண்டுமன்றோ? பழக்கங்களின் தொகுதியே குணம் என்று முன் அத்தியா யத்தில் வாசித்தோம். பழக்கங்களை உண்டாக்குவதற்குரிய காலம் இளமைதான். பிள்ளையே பிற்காலத்தின் மனிதன். அவன் ஒரு குடும்பம் அல்லது கிராமத்தின் தலைவ னாக வேண்டியவன். ஒருவேளை அவன் ஒரு நாட்டை அல்லது நாட்டின் பகுதியை ஆண்டு நடத்த வேண்டிய பொறுப்பான உத்தியோகத்தை வகிப்பவனாகலாம். அரசியல், சமுதாயம், பொருளாதாரம், கல்வி முதலிய பல வாழ்க்கைத்துறைகளின் முன்னணியில் நின்று பலரை நடத்திச் செல்லும் தலைவனாக லாம். தற்காலம் குடும்பங்கள், கிராமங்கள், ஜில்லாக்கள், தேசங்களின் தலைவராய் இருப்பவர்கள் யாவரும் முற்காலத் தில் பிள்ளைகளாய் இருந்தவர்கள்தான். நல்லொழுக்கமுள்ள தலைவர்களையுடைய குடும்பங்கள், கிராமங்கள், தேசங்கள் க்ஷேமமாக வாழ்வதும் மற்றவர்களாற் போற்றப்படுவதும் பிரத்தியக்ஷமாக இருக்கிறது. நல்லொழுக்கமற்ற தலைவர் களையுடைய குடும்பங்கள், கிராமங்கள், தேசங்கள் பாழ டைந்து, பிறருடைய அவமதிப்புக்குப் பாத்திரமாவதையும் காண்கிறோம். தற்காலம் நமது கிராமங்கள், தேசம் இவற் றின் ஸ்திதி என்னவென்று அறிவோம். நமது தாய்நாடு

பிற நாட்டாருடைய நன்மதிப்புக்கேதுவாக எல்லாத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டியதிருக்கிறது என்பது உண்மை. இதற்கு ஆசிரியர்களாகிய நாம் செய்யக் கூடிய உண்மையான தேசத்தொண்டு நமது பிள்ளைகள் நற் குணமுள்ளவர்களாக வளரும்படி, நாம் அவர்களை நற்பழக்கத் தில் பயிற்றுவிப்பதுதான். அவர்களிடத்தில் தமது நாட் டின் போக்கையும், உலகத்தின் போக்கையும்கூட மாற்றி விடக்கூடிய பேராற்றல் அடங்கியிருக்கிறது. இந்த உண் மையை ஆசிரியர் நன்குணர்ந்து, பிள்ளையினிடத்தில் அன்பும் அபிமானமும் உடையவராக, அவனுடைய க்ஷேமத்தையும் அவனைச் சூழவிருக்கும் மனித சமூகத்தின் க்ஷேமத்தையும் கருதி, அவன் நற்குணத்தில் வளரும்படி அவனைப் பயிற்று வித்தல்வேண்டும். உலக க்ஷேமம் மனிதருடைய கையில் இருக்கிறது. இவ்வளவு பொறுப்பான நிர்வாகத்தைத் தமது கையில் வைத்திருக்கும் மனித வர்க்கத்தைச் சிருஷ் டிக்கும் பாடசாலை தேவாலயமேயாகும்; அதைச் சிருஷ்டிக் கும் ஆசிரியர் இறைவனுடைய அம்சமே யாவர். எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆகும்.

நற்குணத்தின் முக்கியம் அவசியங்களையும், நற்குணம் உண்டாவதற்குப் பிள்ளைகள் கல்வி கற்கும் இளமைப் பரு வமே ஏற்றது என்பதையும் வற்புறுத்தும்படி இவைகளைச் சொன்னோம். இனி அவர்களைச் சன்மார்க்கத்துக்கு ஏது வாகப் பயிற்றுவிப்பதற்கு ஆசிரியர்க்கு உதவியாகச் சில குறிப்புக்கள் கூறுவோம்.

குணம் எதைப் பொறுத்தது?

தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை. புலி பசுவாகாது, பசு புலியாகாது. ஆகவே ஒருவனுடைய பிறவி அல்லது வம்ச பரம்பரைதான் அவனுடைய குண இயல்புகட்கு அஸ்திபாரமாய் இருக்கிறது. ஆனாலும் எந்த

மனுஷனும் பிறக்கும்போதே பூரணகுணம் உடையவனுகப் பிறந்துவிடுவதில்லே. அவன் பிறந்து வளருங்கால் அவனுக்கிருக்கும் சுற்றுப்புறத்துக்கு இசைய அவனுடைய குணத்தில் மாறுதல் ஏற்படக்கூடும். படிக்கவேண்டுமென்ற விருப்பமும், முயற்சியும் இல்லாத ஒருவன், தன் வகுப்பிலுள்ள மற்றப் பிள்ளேகள் யாவரும் சிரத்தையுடன் படிக்கிறதைப் பார்த்துத் தானும் படிக்க ஆரம்பிப்பான் அல்லவா? கவிமன்னர் தாகூருடைய ஆச்சிரமத்தில் வசிக்கும் ஒருவன் சாந்தம், தயாளம், பெருந்தன்மை, புனிதம் உடையவனுக இருப்பான். பூவோடு சேர்ந்த நாரும் மணம்பெறும் அன்ருே? நிற்க, உடல் வளர்வதுபோலவும், மனம் வளர்வதுபோலவும் குணமும் வளர்வதுதான். ஆரோக்கியமான உணவு, உடை, அப்பியாசங்களால் ஆரோக்கியமான உடலும், அந்த உடலில் ஆரோக்கியமான மனமும் இருக்கும். ஆரோக்கியமான மனதுக்கு நல்ல பயிற்சி கொடுத்தால், அது திடப்பட்டு, இயற்கைத் தூண்டுதல்களுக்கும், சுற்றுப்புறத்துக்கும் கீழ்ப்பட்டுத் தொழில் செய்யாது; ஆனுல், சுய மனேதிடத்தைக்கொண்டு அமர்ந்து யோசித்து நற்காரியங்களேச் செய்யும். ஆகவே, குணம் மனேதிடத்தைப் பொறுத்தும் அமையும் என்று அறிகிருேம்.

நற்குணங்களே உண்டுபண்ணுவதில் ஆசிரியர் செய்யக்கூடியது: பிறவிச் சுபாவத்தை மாற்றுவது ஆசிரியரால் கூடாது. ஆனுல், அவர் பிள்ளேகள் நற்கருமங்களேயே செய்வதற்கு ஏதுவாக சுற்றுப்புறத்தைச் சாதகமாக அமைக்கலாம். பிள்ளேகளுடைய மனத்தைக் கவர்ந்து, அவர்களேத் தமது தூண்டுதல்களுக்கு அடிமைப் படுத்தித் தீய செயல்களேச் செய்யும்படி ஏவக்கூடிய பயனற்ற காரியங்களேப் பார்ப்பதற்கும் கேட்பதற்கும் சந்தர்ப்பமளிக்கக் கூடாது; தீய சுபாவமுடையவர்களுடன் பழகி அவர்களுடைய

ஆலோசனைகளைக் கேட்காதபடி தடுக்கவேண்டும். நல்லவர்களுடன் பழகி அவர்களுடைய நல்ல ஆலோசனைகளைக் கேட்டு நடக்கும்படி தூண்டவேண்டும். பிள்ளைகள் எப்பொழுதும் நற்காரியங்களை மட்டுமே யோசிக்கவும், பேசவும், செய்யவும் தக்கதாக அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். சன்மார்க்க ஜீவியம் செய்த மகாநுபாவர்களுடைய வரலாறுகளைப்பற்றிப் படிக்கவும், பேசவும், தர்க்கிக்கவும், எழுதவும் செய்யலாம். ஆசிரியர் தாமே பிள்ளைகட்கு முன்மாதிரியாக நல்ல சிந்தை, நல்ல பேச்சு, நல்ல செய்கைகள் உடையவராக இருக்கவேண்டும். செய்கை உணர்ச்சியைப் பொறுத்தது; உணர்ச்சி அறிவைப் பொறுத்தது. ஆதலால், ஆசிரியர் பிள்ளைகளுக்கு நல்ல விஷயங்களைத் தெளிவான அறிவுண்டாகும்படியும், ஸ்திரமான நல்ல உயர்ந்த உணர்ச்சிகள் உண்டாகும்படியும் கற்பிக்க வேண்டும். அறிவும் உணர்ச்சியும் நலமானல், செயலும் குணமும் நலமானவைதான் என்பதற்கு ஐயமில்லை. அவர்கள் தமது பிறவிச் சுபாவத்தை யடக்கி, சுற்றுப்புறக் கவர்ச்சிகளுக்கு ஈடுபடாமல் தாமாகவே அமர்ந்து யோசித்துத் திடமான தீர்மானத்துடன் ஒரு காரியத்தைச் செய்யும்படி அவர்களுடைய மனதைத் திடப்படுத்தவேண்டும். இதைப்பற்றிப் பதினேழு, பதினெட்டாம் அத்தியாயங்களின் பிற்பகுதியில் கூறப்பட்டிருப்பதைக் கவனிக்க.

நற்குணத்தின் படிகள்.

மனிதன் தனது சுய க்ஷேம லாபங்களை மட்டும் கருதிக் காரியங்களைச் செய்வது கீழ்த்தரமானது. பிறருக்குத் தீமை செய்யாமலும், நன்மை செய்யாமலும் இருக்கும் நிலைமையில் இது படுமோசமான குணமாகாவிட்டாலும், உயர்தரமான குணம் அன்று. சட்டத்தின் நிமித்தமாகவும், மற்றவர்களுடைய நிந்தைக்குப் பயந்தும், பிறருடைய புகழ்ச்சியையும் அவர்களாற் கிடைக்கக் கூடிய பரிசையும் எதிர்பார்த்தாயினும் நற்காரியங்களைச் செய்வதும் உத்தமமான நற்குணம்

அன்று; மத்திபமானதுதான். ஆனால், ஒருவன் அன்பினால் மற்றவர்களுக்கும் உபகாரமான செயல்களைச் செய்கிறான்; அவன் தன் மனச்சாக்ஷியின் நிமித்தம் அப்படிச் செய்கிறான் என்றால் அதுவே உத்தமமான நற்குணமாம். மனித சமூகத்தின் க்ஷேமத்தைக் கருதி உலகமனைத்தையும் எதிர்த்து நின்று, தமது உடல், பொருள், ஆவி மூன்றையும் தியாகம் செய்யும மகான்களுடைய குணம் கடவுள் தன்மை வாய்ந்தது அன்றோ! நற்குணம் ஒரு பசும் பொன் மலரானால், தியாகம் அதன் சுகந்தம். தியாக உணர்வுள்ள நற்குணம் உண்டாவதற்கு விசாலமான நோக்கமும், பெருந்தன்மையும், திட சித்தமும வேண்டும்.

---

20. களைப்பு.

பிராணவாயு நமது இரத்தத்திலுள்ள சிவப்பு ஜீவ அணுக்கள் மூலமாய்ச் சென்று, சரீரத்திலுள்ள ஜீவ அணுக்களோடு சம்பந்தப்படுவதால் வேலை செய்யக்கூடிய சக்தி உண்டாகிறது. நாம் வேலை செய்யும்போது மேற் சொன்ன ஜீவ அணுக்கள் நசிக்கின்றன; பிராணவாயு செலவழிந்து கரியமிலவாயு உற்பத்தியாகிறது. அளவுக்கதிகமான அணுக்கள் நசித்து, கரி உற்பத்தியாகினவுடனே வேலை செய்யும் சக்தி செலவழிந்துவிடுகிறது. சோர்பு, அசதி உண்டாகிறது.

வேலை செய்யச் சக்தி யில்லாமல் உண்டாகும் சோர்பு களைப்பு. பலவீனத்தினாலும், சுத்தமான காற்று இன்மை, பசியினாலும் களைப்பு ஏற்படக்கூடும். சரீரத்தை நெளித்துக் கொடுத்தல், கொட்டாவி விடுதல், விரல் நொடித்தல், கழுத்தைத் தொங்கவிட்டுக்கொண்டு அயர்ந்து இருத்தல், படுத்துக் கொள்ளுதல் முதலிய சின்னங்களைக் கண்டால் களைப்பு உண்டாகிவிட்டது என்று அறியலாம்.

சரீர வேலை செய்வதால் சரீரக் களைப்பும், மனோ வேலை செய்வதால் நரம்புக் களைப்பும் உண்டாகும். ஆனால், நேரப் பட சரீரக் களைப்பு நரம்புக் களைப்பையும், நரம்புக் களைப்பு சரீரக் களைப்பையும் உண்டாக்கிவிடும். கையால் வேலை செய்யும்போது முதலில் களைப்படைவது கை. பின்னர், கைக்குண்டான அக்களைப்பு உடலின் மற்ற உறுப்புக்களிலும் சென்று பரவும். உடல் முழுவதும் களைப்புப் பரவும்போது உடலின் ஒரு பாகமாகிய நரம்பு மண்டலமும் களைப்படைவது இயற்கைதான் அன்றோ?

களைப்பைத் தடுக்கும் உபாயங்கள். களைப்பு ஏற்பட்ட பின்பு அதனை முற்றிலும் தடுக்கமுடியாது. சிறிது குறைக்கலாம். எங்ஙனமெனின்: கதவு ஜன்னல்களை நன்றாய்த் திறந்துவைத்துச் சுத்தமான காற்றோட்டம் இருக்கும்படி சுற்றுப்புறத்தை விருத்திசெய்யலாம். அல்லது காற்றோட்டமான வெளியிடத்தில், ஒரு மரநிழலில் வகுப்பை வைத்து நடத்தலாம். பாட அட்டவணை தயாரிப்பதில் பிள்ளைகளுக்குக் களைப்பு ஏற்படாவண்ணம் தடுக்கலாம். சிறுவர்க்கு நெடு நேரம் ஒரு பாடத்தில் கவனம் செலுத்தமுடியாது. ஆதலால், எலிமென்டரிப் பாடசாலைப் பிள்ளைகட்கு ஒரு பாடத்தின் கால அளவு 20 முதல் 30 நிமிஷங்கள் வரையும்; மிடில் ஸ்கூல் பிள்ளைகட்கு 40 நிமிஷங்கள் வரையும்; காலேஜ் வகுப்புக்களுக்கு 1 மணிக் காலமும் குறித்து அட்டவணை தயாரிக்க வேண்டும். குறிப்பிட்ட கால அளவுக்கு மேற்பட்டால் களைப்புண்டாகும்; சோம்பல், மனதின் அலைவு, குறும்புத்தனம் இவற்றுக்கெல்லாம் இடமுண்டாகும். தொடர்ந்து இரண்டு பாடங்கள் நடந்தபின் பிள்ளைகள் வெளியே சென்று, சுமார் 10 நிமிஷ காலம் ஓடி யாடிச் சுத்த ஆகாயம் சுவாசித்துக் களைப்பை ஆற்றிக்கொள்ளும்படி அவகாசம் கொடுக்க வேண்டும். காலையில் 8 முதல் 11 மணி வரையிலும், மாலை

2-மணிக்குப் பின்னும் நரம்புச் சக்தி அதிகப்படுகிறதென்றும், நடுப்பகலில் குறைவுபடுகிறதென்றும் சொல்கிறார்கள். ஆதலால், காலையிலும் மாலையிலும் கஷ்டமான பாடங்களையும், மற்ற வேளையில் இலகுவான பாடங்களையும் வைக்கவேண்டும். பாடங்களை மாற்றி மாற்றி அமைப்பதாலும் களைப்பைத் தடுக்கலாம். எழுத்து அதிகமாக இருக்கக்கூடிய பாடத்துக்குப்பின் வாசிப்பு அதிகமாக இருக்கிற பாடம்; கண்ணுக்கு அதிக வேலை கொடுக்கக்கூடிய பாடத்துக்குப் பின் கைக்கு அதிக வேலை கொடுக்கக்கூடிய பாடம்; மன வேலைக்குப்பின் சரீரவேலை—என்று இவ்வாறு பாடங்களை மாற்றி மாற்றி வைத்தால், ஏற்கனவே களைப்படைந்த பாகங்கள் திரும்பவும் சக்திபெற்றுக்கொள்ளச் சாவகாசம் இருக்கின்றது. பாடத்தின் தன்மையைப் பொறுத்தும் களைப்பு ஏற்படக்கூடும். ஆதலால், கடினமான பாடத்துக்குக் குறைந்த கால அளவும் சுலபமான பாடங்கட்குச் சிறிது நீண்டகால அளவும் குறிக்கலாம். பல ஆசிரியர் வேலைசெய்கிற ஒரு பாடசாலையில் பாடரீதியில் ஆசிரியர்கட்கு வேலை குறிக்கப்படும் பக்ஷத்தில், இவ்வாறு பாடங்கட்கு வித்தியாசமான கால அளவு குறிப்பிடுவது கஷ்டந்தான்! பாடத்தில் பற்றுண்டாகாமல் இருந்தாலும் களைப்புக்குரிய குறிகள் தோன்றும். கவனம் சிதறும். ஆதலால், பாடத்தில் பற்றுண்டாக்கும் விதிகளை அனுசரித்துக் கற்பிக்க வேண்டும். மேற்கூறிய முறைகள் களைப்பை அறவே மாற்றும் என்று சொல்வதற்கில்லை. களைப்பு அறவே நீங்க ஓய்வுதான் உபாயம். ஆதலால், அதிகக் களைப்பாய் இருக்கும் பிள்ளைகட்கும் (ஆசிரியர்க்கும்) ஓய்வு கொடுப்பதே தக்க பரிகாரமாகும்.

பாட அட்டவணை தயாரிக்கும்பொழுது கவனிக்கவேண்டிய சில விதிகள். 1. தினமும் ஐந்து மணிக்காலம் வேலை. காலை மூன்று, மாலை இரண்டு மணி நேரங்கள். காலை மாலைகளில்

ஒன்றரை மணிக்காலம் பாடம் நடந்தபின் குறைந்தது பத்து நிமிஷங்களாவது ஓய்வு இருத்தல் வேண்டும். 2. மொத்தம் பாடங்கள் எத்தனை? ஒவ்வொரு பாடத்துக்கும் எத்தனை (Period) பீரியட் என்று கணக்கிடவேண்டும். பாடத்தின் தன்மை, முக்கியம், அளவு இவற்றுக்குத் தக்க அதிக பீரியடுகளும் அல்லது குறைந்த பீரியடுகளும் கொடுக்க வேண்டும். பரீக்ஷைக்கு முக்கியம் என்று ஒரு பாடத்துக்கு அதிக மதிப்புக் கொடுக்கக்கூடாது. வாழ்க்கைக்கு உபயோக மாவதுதான் மிகவும் முக்கியமான பாடமாகும். 3. நரம்பு மண்டலம் உற்சாகத்துடனிருக்கும் காலை வேளையில் கணக்கு, தாய்மொழி, ஆங்கிலம் முதலிய கடின பாடங்களை வைக்க வேண்டும். 4. கடினமான பாடமும் இலகுவான பாடமும் மாறி மாறி வரவேண்டும். தமிழ், ஹிந்தி, ஆங்கிலம் முதலிய மொழிப் பாடங்கள் தொடர்ந்து வரக்கூடாது. 5. பாட அட்டவணையில் வீட்டு வேலைக்கும் (Home Work) விபரம் இருத்தல் வேண்டும். பரீக்ஷை சம்பந்தமில்லாத பொது அறிவு நூல்கள் வாசித்தலுக்கும், கைத்தொழில் பாடத்துக்கும் அட்டவணையில் பீரியடுகள் குறிப்பிடவேண்டும். 6. ஒருநாள் கஷ்டமான பாடங்களும், மறுநாள் முழுவதும் சுலபமான பாடங்களும் வரக்கூடாது. இரண்டும் கலந்து வர வேண்டும். வாரத்தில் இரண்டு மூன்று தடவை வரும் பாடங்கள் தொடர்ந்து வரக்கூடாது. ஒருநாள் விட்டு மறுநாள் வரும்படி கவனிக்கவேண்டும்.

---

21. வீட்டு வேலை.

பிள்ளைகளுக்கு வீட்டு வேலை கொடுப்பது அவசியந்தான் என்பதற்கும், அவசியம் அல்ல என்பதற்கும் காரணம் கூறும்

இரு கட்சியார் உளர். நாம் இரு கட்சியார் கூற்றையும் ஆராய்ந்து நலமானதைக் கையாளுவோம்.

வீட்டு வேலை அவசியம் இல்லை என்போருடைய தர்க்கம்: நாள் முழுவதும் வேலை செய்த பிள்ளைகளுக்கு மாலையில் ஓய்வு கொடுக்கவேண்டியது அவசியம். அவர்கள் அதிகமாய்க் களைப்படையக்கூடாது. படிக்கவேண்டிய சமயத்தில் படிக்கவும், விளையாடவேண்டிய சமயத்தில் விளையாடவும் வேண்டும். விளையாடவேண்டிய நேரத்தில் படிக்கக் கூடாது. வீட்டுவேலை ஆசிரியருடைய மேற்பார்வை இல்லாமல் நடைபெறுவது. ஆதலால், பிள்ளைகள் விளையாட்டு ஆசையின் மிகுதியால் வீட்டு வேலையை அசட்டை செய்து, பின்னர் மற்றவர்களைப் பார்த்துப் பிரதி செய்து, உண்மைத் தப்பான தீய செயல்களுக் குட்படுகிறார்கள். ஆசிரியர், பிள்ளைகள் வகுப்பில் செய்யும் வேலையுடன் அவர்கள் வீட்டு வேலையையும் கவனிக்கவேண்டிய இரட்டிப்பான வேலை அவர்க்கு ஏற்படுகிறது. சில வேளைகளில் வீட்டு வேலையைச் சரி பார்ப்பதற்குக் காலம் பிடிப்பதால், புதுப் பாடம் நடத்துவதற்கு இயலாமற்போவதுமுண்டு. எப்போதும் பாடம் படித்துக்கொண்டே இருந்தால், பிள்ளைகள் ஓய்ந்திருந்து வாழ்க்கை இன்பத்தை அனுபவிக்கக் கூடாமற்போகிறார்கள். மேலும், அழகான பக்ஷிகள், பிராணிகள் வளர்த்தல்; பூஞ் செடிகள் வைத்தல் முதலிய ஹாபிக்கு (Hobby) வழியில்லை. சுகம் அனுபவிப்பதும் வாழ்க்கையின் நோக்கம் அல்லவா? இந்த நோக்கத்தைத் தவறவிடக்கூடாது.

அடுத்த கட்சியாருடைய கூற்று. பிள்ளைகள் வகுப்பிலே கற்றுக்கொண்டவற்றிலுள்ள குறைவை வீட்டு வேலை நிறைவாக்குகிறது. திரும்பத் திரும்பப் படிப்பது ஞாபகத்துக்குச் சாதகம். குறிக்கப்பட்ட பாடங்களைக் குறைந்த கால அளவில் படித்து முடிக்கலாம். குறுகிய கால அளவில்

அதிகமான பாடங்களைப் படிப்பதினால் மனோவளர்ச்சி சீக்கிரம் உண்டாகிறது. வீட்டு வேலையினால், ஆசிரியரைச் சார்ந்தே படிக்கும் வழக்கம்போய் மாணவன் தன்னைச் சார்ந்து, சுயமாகவே கிரகித்துப் படிக்கக்கூடிய திறமையும் தன்நம்பிக்கையும் உண்டாகின்றன. மேலும், ஆசிரியர் வகுப்பிலே பிள்ளைகள் விரும்புவதையும் விரும்பாததையும் கற்பிக்கலாம். ஆனால், வீட்டுப் படிப்பில் பிள்ளைகள் தமக்கு விருப்பமான கலைப்பகுதிகளைமட்டும் அதிகமாகப் படித்துத் தமது வயது, வகுப்பு இவற்றுக்கு மிஞ்சிய பல விஷயங்களைச் சுயாதீனமாக அறியக்கூடும். நாம் வீட்டுவேலை கொடுப்பதாலுண்டாம் தீமைகளை விலக்கி, அதனால் உண்டாகும் நன்மைகளைக் கருதி வீட்டுவேலை கொடுப்பது நலம்.

வீட்டுவேலை கொடுக்கும்போது நாம் கவனிக்க வேண்டியவை: ஒன்று முதல் நாலு வகுப்புப் படிக்கிற பிள்ளைகட்கு—எலிமெண்டரிப் பாடசாலைப் பிள்ளைகட்கு வீட்டு வேலை அவசியமில்லை. கொடுத்தாலும் தினம் 20 நிமிஷங்களுக்கு அதிகமான அளவு கொடுத்தல் கூடாது. மிடில் ஸ்கூல் பிள்ளைகட்குச் சுமார் ஒரு மணி நேரமும், ஹைஸ்கூல் பிள்ளைகட்கு ஒன்றரை அல்லது இரண்டு மணி நேரமும் வீட்டுவேலை கொடுக்கலாம். வகுப்பில் நடந்த பாடத்தைத் திரும்பப் படித்து ஞாபகத்தை அபிவிருத்தி செய்வதற்கும், புதிய பாடங்களை ஆயத்தம் செய்வதற்கும், பிள்ளைகள் தமது இஷ்டப்படி படிப்பதற்குரியவைகளையும் பாடமாகக் குறிக்கலாம். பிள்ளைகளுடைய வீட்டுச் சௌகரியம் குடும்பச் சௌகரியங்களை உத்தேசித்தும் வீட்டுவேலை குறிக்கவேண்டும். இரவில் சரியான விளக்கு, மேஜை, நாற்காலி முதலிய புற விஷயங்கள் சீராக இல்லாத எளிய பிள்ளைகட்கு எழுத்து வேலைகள் கொடுப்பதால், அவர்கள் அசௌகரியமான நிலைமையிலிருந்து எழுதித் தமது

கண் பார்வையையும், எழுத்தையும் கெடுத்துக்கொள்ள இட முண்டாகும். வீட்டுவேலை கொடுத்தால் ஆசிரியர் அதைக் கிரமமாகச் சரிபார்த்துத் திருத்தவேண்டும். பிறரைப் பார்த் துப் பிரதி பண்ணும் தீயவழிக்கு இடம் கொடுக்கக்கூடாது.

---

22. பரீக்ஷைகள்.

பரீக்ஷை வைக்கக்கூடாது என்பதற்கும், வைக்கவேண் டும் என்பதற்கும் நியாயம் சொல்கிற இரண்டு கட்சியார் இருக்கிறார்கள். அவர்கள் கூற்றையும் ஆராய்ந்து நமக்கு நலமாகப் புலப்படும் முறையை அனுசரிப்போம்.

பரீக்ஷை வேண்டாம் என்போர் சொல்வது: ஜீவியத் தின் நோக்கம் பரீக்ஷையல்ல. படிப்பின் நோக்கமும் பரீக்ஷையல்ல. மனிதன் தனக்கும் பிறர்க்கும் க்ஷேமமுண் டாகும்படி சீராக வாழ்க்கைசெய்ய வேண்டுவதுதான் ஜீவியத்தின் நோக்கமும், படிப்பின் நோக்கமும் ஆகும். ஆகையால், பிள்ளைகளை நல்வாழ்க்கைக்கு ஏதுவாய்ப் பயிற்று விக்க வேண்டுமே யொழிய, நன்றாய்ப் பரீக்ஷை எழுதித் தேர்வதற்கு ஏதுவாகப் பயிற்றுவித்தல் கூடாது. பரீ க்ஷையை முக்கியப்படுத்துவதால், பிள்ளைகள் கல்வியினால் வாழ்க்கை நலத்துக்கு அனுகூலமாக அடையவேண்டிய முக்கிய அம்சங்களைக் கைசோர விடுகிறார்கள். ஆசிரியர் களும் அவற்றை வற்புறுத்தமாட்டார்கள். இது இயல்பு. பரீக்ஷைக்கு வராத பாடங்களையும் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரையும் பிள்ளைகள் அசட்டை செய்வார்கள். குறிக் கப்பட்ட பாடம் வருஷக் கடைசிக்குள் முடிந்துவிடவேண்டு மென்ற நோக்கத்துடன் ஆசிரியர்கள் ஆத்திரம் ஆத்திர மாய்ப் பாடத்தை நடத்திக் குறிப்பு எழுதிப்போடுவதைப் பிள்ளைகள் நெட்டுருச் செய்கிறார்கள். இதனால் கல்வியின் நோக்கம் சிதைந்து, மனதின் தத்துவங்களை அபிவிருத்தி

செய்தலாகிய விசாலமான நோக்கம் தவறுகின்றது. மாணுக்கர் பரீக்ஷை காலங்களில் தங்கள் சுகத்தைச் சிறிதும் பேணுமல் பரீக்ஷை அரக்கனை இரவும் பகலும் நினைத்து நினைத்துப் பயந்து பாடங்களை நெட்டுருப்போட்டு உடல் நலத்தைக் கெடுத்துக்கொள்கிருர்கள். உயர்ந்த கல்வி கற்று முடிப்பதற்குள் பலர் முற்றிலும் பலவீனர்களாகி சுகவாழ்க்கைக்கு லாயக்கில்லாத நிலையில் பரிதாபமான கதியை அடைகிருர்கள். இது பரீக்ஷையின் கொடுமைதான் என்பதில் ஐயம் இல்லை.

பரீக்ஷை வேண்டும் என்போர் சொல்வது: பரீக்ஷை இல்லாவிட்டால் பிள்ளைகளின் மனேவளர்ச்சியையும் திறமையையும் அறிவது எப்படி? ஒருவன் இன்ன வகுப்புக்குத் தான் லாயக்குள்ளவன் என்று கண்டறிவதும் கூடாதல்லவா? எல்லாரும் கல்விக்காகக் கல்வியை நாடுகிறவர்கள் அல்ல. அவர்களில் கல்விக்காகக் கல்வியைக் கற்காமல் கடமைக்காகக் கற்கிறவர்கள் பரீக்ஷை இல்லாவிட்டால் வகுப்பில் கவனமாய் இரார், புத்தகத்தைத் தொடார், படிக்கவே மாட்டார். பரீக்ஷைதான் அவர்களைப் படிக்கவைக்கும் தூண்டுதல். கல்வியின் பொருட்டுக் கல்வியைக் கற்பவருங்கூட, பரீக்ஷையின் நிமித்தம் அதிக முயற்சியுடன் படித்துப் பிரசித்தி அடைய விரும்புவர். அதனுல் தற்கால நாகரிக உலகத்தின் உன்னதமான வாழ்க்கைக்கு ஏதுவாக இயந்திரங்களைக் கண்டுபிடித்த பெரியோர்களைப் போன்ற சாஸ்திரிகள் தோன்றவும், சாஸ்திரம் அபிவிருத்தியடையவும் இடமாகும். அன்றியும், மனித வாழ்க்கையில் அடிக்கடி பரீக்ஷக்ள் உண்டு. அவற்றை வெற்றியுடன் சமாளிக்கக்கூடிய திறமை பிள்ளைகளுக்கு உண்டாகும்படி பரீக்ஷையும் படிப்பின் ஓர் அங்கம்தான் என்னலாம். ஆதலால், பரீக்ஷையைப் பரீக்ஷையாக அல்ல, படிப்பிக்கும் கருவியாகக் கையாளவேண்டும்.

பரீக்ஷை விதிகள் : படிப்பின் நோக்கம் பரீக்ஷையல்ல, வாழ்க்கை மேம்பாடே என்று பிள்ளைகள் அறியும்படி கல்வி முறைகளை மாற்றவேண்டும். பரீக்ஷைகள், கேவலம் மனப்பாடத்தையும் பாட விஷயத்தையும் சோதிப்பதாக இருக்கக்கூடாது. மாணவருடைய உழைப்பு, தேர்ச்சி, விவேகம், உற்றுநோக்குதல், யோசிக்கும் ஆற்றல், கற்பனு சக்தி, விஷயங்களின் உண்மை கண்டறிதல் முதலிய மனோதத்துவங்களைச் சோதிப்பதாகவும் இருக்கவேண்டும். வாய்மொழிப் பரீக்ஷை இருக்கவேண்டும். கீழ் வகுப்புக் களில் இது அதிகமாகவும் வர வரக் குறைந்தும் வரலாம். மேல் வகுப்புக்களில் அறவே வாய்மொழிப் பரீக்ஷை இல்லா மல் இருக்கக்கூடாது. பிள்ளைகள் இன்னின்ன பாடங்கள் தான் படித்திருக்கிறார்கள், அவர்களுடைய மனோவளர்ச்சி யின் அளவு இவ்வளவுதான் என்று அறிந்த வகுப்பு ஆசிரி யரே பரீக்ஷை அதிகாரியாக இருக்கவேண்டும். அவர் தாக்ஷண்யமும் பயமும் இன்றி, நியாய சிந்தையுடனிருக்க வேண்டும். படித்த விஷயங்கள் எல்லாவற்றையும் ஒரே மொத்தமாய்ப் பரீக்ஷை செய்வதைவிட, கொஞ்சங் கொஞ்ச மாய்ப் பரீக்ஷிப்பது நலம். பிள்ளைகள் வருஷ முழுவதும் தூங்கிவிட்டுக் கடைசியில் விஷயங்களை நெட்டுருச்செய்து ஒப்பிப்பதற்கு இடம் கொடுக்கக்கூடாது. வாரா வாரம், அல் லது மாதா மாதம் பரீக்ஷை வைத்தால், அந்தந்த வாரம், மாதத்துப் பாடங்களைத்தவிர மற்ற வாரம், மாதத்துப் பாடங் களை அசட்டை செய்துவிடுவார்கள். ஆதலால், வருஷத் துக்கு மூன்று முறை பரீக்ஷை வைக்கவேண்டும். இடை யிடையே பிள்ளைகளை ஊக்கப்படுத்தும்படி வாரம், மாதப் பரீக்ஷைகள் அவசியம் ஏற்பட்டால் வைக்கலாம். பரீக்ஷை முடிந்தபின், தலைமை ஆசிரியரும் உதவி ஆசிரியர்களும் பிள்ளைகளுடைய மார்க்குகளைக்கொண்டு அவர்களுடைய

திறமையை அளந்தறிந்து, குறிப்பிட்ட ஒரு அளவு மார்க்குக்கு அதிகம் வாங்கி இருப்பவர்களை மேல் வகுப்புக்கு மாற்றவேண்டும். தாக்ஷண்யம், பக்ஷபாதம் இல்லாமல் இதைச் செய்யவேண்டியது.

விவேகச் சோதனை. (Intelligence Test). பாடப் புத்தகத்தைப் படித்து நல்ல மார்க்கு வாங்கும் ஒருவன் இயற்கையாகவே விவேகம் உள்ளவனாய் இருப்பான் என்று எண்ண முடியாது. நெட்டுருப் போடுகிறவன் நல்ல மார்க்கு வாங்குவான். ஆனால், அவனைக் காட்டிலும் விவேகத்தில் சிறந்த ஒருவன் குறைந்த மார்க்குகள் வாங்குவான். ஆதலால், பிள்ளைகளுடைய இயற்கையான விவேகத்தைச் சோதிப்பதற்கு பைனட் என்ற கல்வி நிபுணர் ஒரு முறை கண்டுபிடித்திருக்கிறார். அம் முறையாவது: சில கேள்விகளை எடுத்துக்கொள்வோம். அவை பாட சம்பந்தமில்லாத பொது அறிவுக்கடுத்தவைகளாய் இருக்கவேண்டும். அக் கேள்விகளை ஒரே வயதுடைய 100 பிள்ளைகளுக்குக் கொடுக்கவேண்டும். அவர்களில் 70 பேர் அல்லது 60 பேராயினும் விடை சொல்லக்கூடிய கேள்விகளைத் தனிப் படுத்தி, அக்கேள்விகள் அந்தக் குறிப்பிட்ட பிள்ளைகளுடைய வயதுக்குரிய விவேகக் கேள்விகள் என்று தீர்மானம் செய்யவேண்டும். இவ்வாறு பல ரகமான கேள்விகளை 6 முதல் 15 வயது வரையுள்ள பிள்ளைகளுக்குக் கொடுத்து, விடை சரிபார்த்து இவை இன்னின்ன வயதுக்குரிய கேள்விகள் என்று வகுத்து வைத்துக்கொள்ளவேண்டும். அப்படித் தெரிந்தெடுத்து வைத்திருக்கும் கேள்விகளில் ஒரு குறிப்பிட்ட வயதுப் பிள்ளைக்குரிய கேள்விகளை அந்த வயதுடைய பிள்ளை கூறிவிட்டால் அவன் அந்த வயதுக்குரிய விவேகம் உள்ளவன்; கூறாவிட்டால் அந்த வயதுக்குத் தாழ்ந்த விவேகம் உள்ளவன். அக்கேள்விகளில்

10-க்கு 7 வீதம் விடை கூறுகிறவன் முட்டாள் அல்ல. அதற்குக் கீழ்ப்பட்டு விடை கூறுகிறவன் முட்டாள் என்று தீர்மானிக்கவேண்டும்.

---

23. முறைக் கோட்பாடுகள்.

எடுத்துக்கொண்ட ஒரு விஷயத்தைக் குறைந்த கால அளவில் குறைந்த முயற்சியுடன் பிள்ளைகள் மனதில் தெளிவாயும், ஸ்திரமாயும் பதியும் வண்ணம் கற்பிப்பதற்குக் கையாளும் உபாயங்கள் முறை எனப்படும். பாடத்தின் தன்மைக்கும், பிள்ளைகளுடைய வகுப்பு, மனோநிலைகட்கும் தக்கவாறு முறைகள் வித்தியாசப்படும். புலப்பாட்டு நிலையில் பொருட்களைக் கொடுத்துப் பிள்ளைகள் அவைகளைக் கண்ணால் பார்த்தும், கையால் தொட்டும், நாவால் ருசித்தும், மூக்கால் முகர்ந்தும், காதால் கேட்டும்—ஐம்புலன்களின் வழியாகவும் விஷயங்களைப் படிக்கும்படி செய்யவேண்டும். பொருளறிவு நிலையில் அவர்கள் பாடத்தில் பற்றுக்கொள்ளும்படி கற்பித்தால், ஒருமுகமாய்க் கவனம் செலுத்திப் படிப்பார்கள். பற்றுண்டாவதற்கு ஏதுவாக அழகும் பிரகாசமுமான உபகரணப் பொருட்கள் மூலமாகவும், பரிசோதனை செய்து (Experiments) உற்றுநோக்கி யூகித்துக் கண்டறிவதின் மூலமாகவும், முற்கூறியபடி அவர்களுடைய இயற்கைத் தூண்டுதல்களை நல்வழியில் பயன்படுத்திக்கொள்வதின் மூலமாகவும் கற்பிக்க வேண்டும். படித்தவற்றைத் திரும்பப் படித்தல், ஞாபகசக்தி, நற்பழக்கம் உடையவர்களாக இருக்கவும் செய்யவேண்டும். பகுத்தறிவு நிலையில் விஷயங்களை யோசித்து யூகித்து ஒவ்வொன்றின் தாரதம்மியங்கள், உயர்வு தாழ்வுகளைத் தர்க்கித்துப் படிக்கும்படியாக முறை அமைந்திருக்கவேண்டும்.

பொதுவான சில போதனு விதிகள்:

1. தெளிவானவற்றிலிருந்து சடரானவைகளைக் கற்பிக்கவேண்டும். எளிதானவற்றிலிருந்து கஷ்டமானவற்றைக் கற்பிக்கவேண்டும். எது எளிதானது, எது தெளிவானது என்று கண்டறிவது அனுபவமுள்ள ஆசிரியரைப் பொறுத்தது.

2. ரூபங்கள் மூலமாய் அரூபமானவைகளைக் கற்பிக்கவேண்டும். பொருட்களின் மூலமாய்க் குணங்களைக் கற்பித்தல் என்பதும் இதுதான். ஐம்புல வளர்ச்சியும், பலவிதமான பொருளறிவும் மனேவளர்ச்சிக்கு வழியாய் இருப்பதால், புலப்பாடு, பொருளறிவு நிலைகளில் இருக்கும் பிள்ளைகட்குப் பொருட்களைக்கொண்டு கற்பித்தலே ஆரம்பத்தில் இயற்கையான நன்முறையாகும்.

3. தெரிந்தவற்றிலிருந்து தெரியாத புதிய விஷயங்களைக் கற்பிக்கவேண்டும். முற்றிலும் புதிய விஷயங்கள் மனதில் புதிரை உண்டாக்கும். விஷயத்தெளிவு ஏற்படுவதற்கு அப்பர்செப்ஷன் அவசியம். ஆதலின், பிள்ளைகளின் பூர்வ அறிவைக் கண்டு, அப்பூர்வ அறிவுக்குச் சம்பந்தப்பட்ட புதிய விஷயத்தைக் கற்பிக்கவேண்டும்.

4. திட்டமல்லாதவற்றிலிருந்து திட்டமானவைகளைக் கற்பிக்கவேண்டும். (From indefinite to the definite). இதனை, வெளிப்படையானவற்றிலிருந்து குறிப்பானவற்றைக் கற்பிக்கவேண்டும் என்றும் சொல்வர். யானையைப் பற்றிய பாடம் என்று வைத்துக்கொள்வோம். முதலாவது அதன் பெரிய உருவம், கரிய நிறம் இவற்றைப்பற்றிப் படித்துக்கொண்ட பின்பு அதன் துதிக்கை, நாஸிகை, வாய் முதலிய உறுப்புக்களைப்பற்றித் திட்டவட்டமாகப் படிக்க வேண்டும். வசன பாடமாயின் முதலாவது ஒரு பாரா முழுவதையும் வாசித்துக்கொள்க. பின் ஒவ்வொரு வசனமாக எடுத்து, அதிலுள்ள அருஞ்சொல்லுக்கு அர்த்தம், இலக்கணம், சொல், பொருள் நயங்களைப்பற்றிப் படிக்கலாம்.

சில முறைகள் :

1. சொற்பொழிவு முறை: ஆசிரியர் பிள்ளைகளுக்கு விளங்கத் தக்க பாஷை நடையில் நிறுத்தியும் தெளிவாயும் பிரசங்கம் செய்து பாடம் கற்பிக்கும் முறை இது. இது பகுத்தறிவு நிலை அடைந்த கல்லூரி மாணவர்க்குப் பாடம் சொல்லிக்கொடுக்கும் முறையாகும். ஆதலால், இதைப்பற்றி நாம் அதிகமாய் எழுதவேண்டுவதில்லை. புதிய விஷயங்களைக் கற்பிக்கும்போது பிள்ளைகளிடமிருந்து அவற்றை வருவிக்கும்படி முயல்வது தவறு. அது வீண் வேலை. புதிய விஷயங்களை ஆசிரியர் தாமே சொல்லிவிடவேண்டும்.

2. வினாவிடை முறை அல்லது சம்பாஷணை முறை: வினாவிடைகளால் மாணவருடைய மனவளர்ச்சி, அறிவு இவற்றின் அளவைக் கண்டுகொள்ளலாம். பிள்ளைகளின் முன்னறிவைச் சோதித்துக்கொள்வதற்கும், கற்பிக்கப்பட்ட பாடம் தெளிவாகி இருக்கிறதா என்பதைச் சோதித்து அறிவதற்கும் வினாவிடை முறை ஏற்றது. கற்பிக்கும் பாடத்தைப் பிள்ளைகள் கவனித்து வருகிறார்களா என்று அறிவதற்கும், கவனமற்று அஜாக்கிரதையாக இருப்பவர்களைக் கவனிக்கும்படி தூண்டுவதற்கும் வினா உதவுகிறது. வினாக்களின் வகை இரண்டு. அவை: போதனை வினா, சோதனை வினா எனப்படும். விஷயத்தை மாணவனிடமிருந்து வருவிக்கும்படி உபயோகிக்கும் வினாவும், போதனை வினாவின் வகையைச் சேர்ந்ததேயாகும். நல்ல வினாக்களைக் கேட்பது நல்லாசிரியன் இலக்கணங்களில் ஒன்று. தக்கவாறு வினவுவதற்கு ஆசிரியர் தாம் கற்பிக்கும் பாடத்தில் பூரண அறிவுடையவராகவும், அனுபவத்தில் முதிர்ந்தவராகவும், சொல் ஆற்றல் உடையவராகவும் இருக்கவேண்டும்.

நல்ல வினாக்களின் இலக்ஷணம் பின்வருமாறு: அதிகமான வார்த்தைகளை அடுக்கிக் கேள்வியை நீட்டாமல்

தெளிவும், நேர்மையும் (Simple and Direct) சுருக்கமுமாக இருக்கவேண்டும். திட்டவட்டமான ஒரே விடையைத் தருவதாக இருக்கவேண்டும். சரியான விடை இதுவோ அதுவோ என்று சந்தேகிக்கும்படி இருக்கக்கூடாது. பிள்ளைகளுடைய மனோநிலைக்குக் குறைந்ததாக அல்லது அதிகப்பட்டதாக இராமல் ஏற்றதாகவும்; யூகிப்பதற்கு ஏதுவாய் மனதைத் தூண்டுவதாகவும்; விடையை வெளிப்படுத்தாத தன்மையுடையதாகவும் இருக்கவேண்டும். ஆம், அல்ல என்று ஒரு சொல்லில் விடை கூறிவிடக்கூடிய வினாக்கள் பயனற்றவை. புத்தகத்திலுள்ள அதே வினாக்களாய் இருக்கக்கூடாது. சந்தர்ப்பத்துக்கு ஏற்ப ஆசிரியரே அவற்றை மாற்றித் தமது சொந்த வாக்கியத்தில் அமைத்து முழு வாக்கிய ரூபமாகக் கேட்கவேண்டும். குறிப்பிட்ட ஒரு பாடத்தில் கேள்வி கேட்பதாயின் அங்குமிங்கும் இடைமுறித்துக் கேளாமல் வரிசைக் கிரமமாகக் கேட்கவேண்டும். வகுப்பிலுள்ள பிள்ளைகள் யாவரையும் வினவவேண்டும். பாடம் முழுவதும் வினவவேண்டும். வகுப்பிலுள்ள ஒரு பகுதியாரை மட்டும் வினவுதலும், பாடத்தின் ஒரு பகுதியை மட்டும் வினவி நிறுத்திக் கொள்ளுதலும் நன்றன்று. குறிப்பிட்ட ஒரு பையனை மட்டும் வினவினால் வகுப்பிலுள்ள மற்றவர்கட்கு அவ் வினாவால் பயனில்லை. ஆதலால், எப்போதும் வினா வகுப்புக்குப் பொதுவாக இருக்கவேண்டும். விடை கேட்கும்போது ஒரு பையனைக் குறிப்பிட்டுக் கேட்கலாம். அசதியாய் இருக்கும் பிள்ளையினுடைய கவனத்தைப் பெறும்படி அவனை மட்டும் வினவ வேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு.

விடையைப் பற்றிய முக்கிய கவனிப்பு: சில பிள்ளைகள் வினாவுக்கு விடை கூறாமல் மௌனம் சாதிப்பர். மூடத்தனமான விடை கொடுப்பதைவிட அமைதியாய் நிற்பது நல்லதுதான்.

ஆயினும், ஒரு வினுவின் விடையைப்பற்றி மாணவருடைய கருத்துத்தான் என்னவென்று ஆசிரியர் அறிய வேண்டியது அவசியம். ஆதலின், அவர்கள் தாம் நினைக்கும் விடையைக் கூறும்படி அவர்களை வற்புறுத்த வேண்டும். வேண்டுமென்று குறும்புக்காகத் தவருன விடை கொடுப்பவனைக் கண்டிக்கவேண்டும். ஆனுல், உண்மையிலேயே பிழையான விடைதான் அவனுல் சொல்லக்கூடுமாயின் ஆசிரியர் அவனிடத்தில் அனுதாபம்கொண்டு மற்றப் பிள்ளைகளைக் கொண்டாயினும் தாமாயினும் அப்பிழையைத் திருத்த வேண்டும். அரை குறையாகச் சரியான விடை கூறுவானுயின் அவனே முழு விடையையும் சரியாகக் கூறும்படி வேறு வினுக்களாலும், அச்சமயத்தில் கையாளக்கூடிய பிற உபாயங்களாலும் அவனுக்கு உதவி செய்யவேண்டும். அவனைப் பரிகசித்து, தளர்ச்சியடைய விடக்கூடாது.

3. கண்டறிதல் முறை: புத்தகங்களிலுள்ள விஷயங்களை வாசித்தும், ஆசிரியர் சொல்லுகிறவற்றைக் கேட்டும் அடையும் அறிவு இரவல் அறிவு; சொந்தமாகச் சம்பாதித்த அறிவு அல்ல. மனது சுருசுருப்பின்றி அமர்ந்திருந்து, மற்றவர்கள் கண்டறிந்து கூறுகிறவைகளைக் கேட்டு மனப்பாடம் செய்து கொள்வதில் பயனில்லை. இதனுல் உற்றுநோக்கி, யோசனை செய்து, தர்க்கித்து விஷயங்களின் உண்மையைக் காணக்கூடிய மனதின் தத்துவங்கள் அபிவிருத்தியடையாமல் துருப்பிடித்து, உறங்கிவிடும். பிள்ளைகள் தாமாகவே விஷயத்தைப் பரிசோதனை செய்து, உற்றுநோக்கித் தாமாகக் கண்டு பிடிக்கும் அறிவே உண்மையான அறிவு. இதனுல் மனதுக்கு வேலை அதிகம்; அதின் தத்துவங்கள் பயிற்சியடைந்து வளர்ந்து நாளடைவில் பூரணப்படுகின்றன. பிள்ளைகள் பாடசாலையை விட்டு வெளியேறி வாழ்க்கையிற் புகுந்த பின்னரும் தம்மை வந்து எதிரும் பல பல பிரச்னைகளையும் ஆராய்ந்து

தீர்த்து க்ஷேமகரமான வழியைக் கண்டு உய்வதற்குரிய தத்துவம் மனதுக்கு ஏற்படுகிறது. ஆதலால், நூல்களிலும் ஆசிரியருடைய நாவிலும் உள்ளதைப் பிள்ளைகள் மனதில் பிடுங்கி நடாமல், ஆசிரியரின் உதவியால் அவர்கள் தாமாகவே பல பல விஷயங்களையும் பொருட்களையும் உற்றுநோக்கி ஆராய்வதின் மூலமாய் அறிவை அடையும் முறைதான் கண்டறிதல் முறை அல்லது உற்றுநோக்குதல் முறை எனப்படும்.

4. அப்பியாச முறை: கண்டும் கேட்டும் படிப்பது பூரணமான படிப்பு அல்ல. கண்டும் கேட்டும் படிப்பவற்றை அநுபவமாகச் செய்தும் படித்தல் வேண்டும். கணக்குப் போடும் விதியை, வாய்ப்பாடுகளைப் படித்துக்கொள்ளுவது மட்டும் போதாது. அந்த விதிகளுக்கு இசைந்த கணக்குகளைச் செய்தும் படிக்கவேண்டும். இலைகள் சுவாசிக்கும் விதத்தைப்பற்றி நூல்களில் வாசித்துப் படிப்பதிலும், அவை சுவாசிக்கும் விதத்தைக் காட்டும் பரிசோதனையைச் செய்து படிப்பது நலம். அப்பியாச முறையை உத்தேசித்துத்தான் பாடசாலைத் தோட்டம், படங்கள், உருவங்கள் முதலியன செய்கிறோம். கற்றவைகளை உபயோகிக்கத் தெரியவேண்டுமல்லவா? பாடச்சுருக்கம் எழுதுதலும், சரித்திரம், பூமி சாஸ்திரம், இயற்கை சம்பந்தமான படங்கள் வரைதலும் வேண்டும். பிரயோக முறை அல்லது செய்து படிக்கும் முறை என்பது இதுதான். இதற்கும் முன் கூறப்பட்ட முறைக்கும் சம்பந்தம் உண்டு.

5. பாகுபாடு, தோகுத்தல் முறைகள்: முதலாவது பூவரசம் பூ, அகத்திப் பூ, சப்பாத்திப் பூ என்று தனித்தனிப் பூக்களைப் பற்றிப் படிக்கிறோம். பின்பு பூக்களின் பொதுவான இயல்புகளைப் பற்றிப் படிக்கிறோம். பூக்களைத் தனித் தனியாக எடுத்துப் படிப்பது பாகுபாடு முறை. பின்பு பூக்கள்

யாவற்றையும் சேர்த்து அவற்றின் பொது இயல்புகளைப் பற்றிப் படிப்பது தொகுத்தல் முறை. முதலாவது மொகலாய அரசர்கள் ஒவ்வொருவரையும் பற்றிப் படித்துக் கொண்டு, பின்பு மொகலாயரின் கீழ் இந்தியாவின் வாழ்வு என்ன என்று படிக்கிறோம். இது பாகுபாடு, தொகுத்தல் முறை.

முற்காலத்தில் முதலாவது எழுத்துக்களைப் படிப்பித்துப் பின் சொற்களைக்கற்பித்தார்கள். தற்காலம் முதலாவது சொற்களைக் கற்பித்துப் பின்பு எழுத்துக் கூட்டப் படிப்பிக்கிறார்கள். 'படம்' என்று படித்துக் கொடுத்தபின் ப–ட–ம் என்று பாகுபாடு செய்து எழுத்துக் கூட்டப் படிப்பிக்கிறார்கள். முதலாவது சொல் முழுவதையும் சேர்த்துத் தொகுத்துப் படிப்பிப்பது தொகுத்தல் முறை; பின், சொல்லை வகுத்து எழுத்து இனம் அறியப் படிப்பிப்பது பாகுபாடு முறை. முதலாவது சொல்லையும் பின்னர் எழுத்தையும் படிப்பிப்பதில் தான் நியாயம் இருக்கிறது. பிள்ளைகள் முதலாவது சொற்களைத்தான் சொல்லிப் பேசப் படிக்கிறார்கள். சொற்களில் அர்த்தம் உண்டு. எழுத்தில் அர்த்தம் இல்லை எளிதான, தெளிவானவற்றிலிருந்து—கஷ்டமான, தெளிவற்ற விஷயங்களைக் கற்பிக்க வேண்டும் அல்லவா? ஆதலால், சொல்லிலிருந்து எழுத்தைக் கற்பிப்பதுதான் இயற்கை முறை. இதில் தொகுத்தல் முன்பும் பாகுபாடு செய்தல் பின்புமாக மாறி வருகிறது. இதைக் கவனிக்க.

6. பார்த்துச் சொல்லும் முறை: பிள்ளைகள் ஒரு பொருள், அல்லது படம், அல்லது காக்ஷியைப் பார்த்து அதன் பெயர், வடிவம் நிறம் முதலிய பல தன்மைகளையும் சொல்வது பார்த்துச் சொல்லும் முறை. அறிவு, மன வளர்ச்சிகளுக்கு ஏதுவான விஷயங்களை மட்டும் அவர்கள் அப்பொருளிலிருந்து பார்த்துச்சொல்லும்படி ஆசிரியர் தமது

வினைக்களாலும் பிற உபாய்ங்களாலும் அவர்களை வழி நடத்த வேண்டும். நவீன பாஷைகள், இயற்கை, சரித்திரம், பூகோளம், வாய்மொழிக் கட்டுரை முதலிய பாடங்கள் படிப்பிப்பதற்குப் பார்த்துச் சொல்லும் முறை பயன்படும். போதிய அளவு உபகரணப் பொருட்கள் இல்லாவிடில் பார்த்துச் சொல்லும் முறைக்கு இடமில்லை. இம்முறையைக் கையாளுவதால் இளமையிலேயே பிள்ளைகட்கு உற்று நோக்குதல், கற்பனுசக்தி, பொருட்களின் உண்மைத் தன்மை அறிதல், சொல் ஆற்றல் முதலிய தத்துவங்கள் அபிவிருத்தியடைவதற்கு ஏதுவான பயிற்சி உண்டாகும்.

7. அனுமான அனுமித முறைகள். பசு புல், வைக்கோல், பருத்திக்கொட்டை, பிண்ணுக்கு, கடலை முதலிய பொருட்களைத்தின்னும்; அது பூனை, நாய்களைப்போல் மாம்சம் தின்னாது. ஆதலால், அது ஒரு சாகபக்ஷிணி என்ற முடிவை அனுமானித்துக் கூறும்படி பாடம் கற்பிப்பது அனுமான முறை. அனுமானம்—புறக் காரியங்களைக் கொண்டு யூகித்துப் பெறும் முடிவு; பல உதாரணங்களிலிருந்து ஒரு பொதுவான விதியைக் காண்பது. இலக்கணப் பாடத்தில் பல உதாரணங்களைக் கொடுத்து அவற்றிலிருந்து சூத்திரம் அல்லது விதியை அடைவது அனுமான முறை. பொருள் அறிவைக் கொண்டு பொது அறிவை அடைதல் என்பது இதுதான். பொருள் அறிவு நிலையிலிருப்பவர்க்கு அனுமான முறை—உதாரணங்களிலிருந்து ஒரு பொது விதியை அடைவதாகிய இம்முறையை அனுசரித்துக் கற்பிக்க வேண்டும்.

அக்பர் ஒரு மகா சக்கரவர்த்தி என்று அழைக்கப்படுகிறார் என்ற பொதுவிதியை முதலாவது கூறிவிட்டுப் பின்னர் அப்பொதுவிதியை ஸ்தாபிக்கும்படியாக அவருடைய அரசியலின் அம்சங்கள் ஒவ்வொன்றையும் அதற்கு உதாரணமாகப் படிப்பதும், பசு ஒரு சாகபக்ஷிணி என்ற

பொதுவிதியைக் கூறியபின் அதற்கு உதாரணமாக அதன் ஆகாரம், தேக அமைப்பு இவற்றைப்பற்றிப் படிப்பதும் அனுமித முறையாகும். இம்முறை பொருளறிவு நிலையைக் கடந்து பொது அறிவு நிலையடைந்துவிட்ட பெரிய மாண வர்க்கு ஏற்றது. ஆயினும், சிறுவர்க்கும் ஓரளவு பொது அறிவு இருப்பதால் ஆசிரியர் தமது யுக்தம்போல அனுமித முறைகளைக் கையாளவேண்டிய சந்தர்ப்பங்களும் உண்டு. மாண வர்க்கு எந்தப் பொருளைப் பற்றிப் போதிய பொருளறிவு, அனுபவம் இருக்கிறதோ அப்பொருள் சம்பந்தப்பட்ட பாடங்களை அனுமித முறைப்படி கற்பிக்கலாம்.

---

24. ஐந்து படிகள் அல்லது ஹெர்பார்ஷியன் ஸ்டெப்ஸ்.

நாம் கற்பிக்கும் ஒவ்வொரு பாடத்திலும் பின்வரும் ஐந்து படிகள் உண்டு. இவ்வைந்து படிகளும் பாடத்தின் வளர்ச்சிக்கிரமத்துக்கு அனுகூலமாக அமைந்திருப்பவை.

1. ஆயத்தம்செய்தல்: பிள்ளைகள் புதுப்பாடத்தைப் பற்றுதலுடன் கவனித்துப் படிப்பதற்கு ஏதுவாக அவர்களுடைய மனதை ஆயத்தம் செய்தல் என்பதுதான் இதன் சரியான பொருள். பிள்ளைகளுடைய மனது முன் நடந்த பாடத்தில், அல்லது அவர்கள் பாடசாலைக்கு வெளியே கண்ட ஒரு காக்ஷியில் ஈடுபட்டு அதைப்பற்றிய சிந்தனையில் இருக்கலாம். புதிய பாடம் கற்பிக்கப்போகிற ஆசிரியர் அவர்கள் மனது புதிய விஷயத்தை ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கும்படி அதை ஆயத்தம் செய்தல்வேண்டும்.

'பாடத்தைக் கவனி' என்று சொல்லி அதட்டுவதும், புதுப் பாட சம்பந்தமில்லாத பழைய பாடத்தில் கேள்வி கேட்பதும் ஆயத்தம் செய்தலாகாது. விஷயத் தெளிவு ஏற்படுவதற்கு மனதில் ஜீரணவேலை — அப்பர்செப்ஷன் நடைபெற வேண்டும் என்று சொல்லியிருக்கிறோம். ஆதலால், புதுப்பாட சம்பந்தமாகப் பிள்ளைகளுடைய மனதிலிருக்கும் பழைய விஷயம் என்ன, அவர்களுடைய பழைய அறிவு என்ன என்பதைச் சில வினாக்கள் வாயிலாய்க் கண்டறியவேண்டும். கண்டறிந்த அப்பழைய அறிவுடன் புதிய விஷயத்தைக் கோப்பதுதான் ஆயத்தம். பழைய அறிவு தூண்டப்பட்ட வுடன் மனது அப்பழைய அறிவுடன் சம்பந்தமுள்ளதாக ஆசிரியர் கற்பிக்கப்போகிற புதிய விஷயங்களை அறிய,பெற்றுக் கொள்ளச் சித்தமாகிறது. இதுதான் ஆயத்தம். இங்ஙனம் ஆயத்தம் செய்வதுடன் புதுப்பாட நோக்கத்தையும் வெளி யிட்டால் அதில் பற்றுண்டாகும். மனம் சுருசுருப்பாக வேலைசெய்யக்கூடிய ஸ்திதியை அடையும். பாடத்தின் கால அளவில் ஐந்தில் ஒரு பாகத்தை ஆயத்தப் படிக்காகச் செலவிடலாம்.

2. புதுப்பாடம் கொடுத்தல் : புதிய விஷயத்தை ஏற்றுக் கொள்வதற்கு ஆயத்தமாய் இருக்கும் மனதுக்குப் புதிய விஷயத்தைக் கொடுப்பது. முன் கூறியுள்ள பொதுவிதி களையும் முறைகளையும் அனுசரித்து, பிள்ளைகளுக்குப் பற்றும் கவனமும் உண்டாகும் வண்ணம் உபகரணங்கள், உதாரணங் கள் மூலமாய்த் தெளிவாகக் கற்பிக்கவேண்டும். 'ஞாபகம்' என்னும் அத்தியாயத்தில் தெளிவு உண்டுபண்ணுவதற்கு உபாயமாகக் கூறப்பட்டவைகளைக் கவனித்துக் கற்பிக்க வேண்டும்.

3. இனப்படுத்துதல் அல்லது சம்பந்தப்படுத்துதல்: புதி தாகக் கற்ற விஷயத்தை அதற்கு இனமான பழையவற்றுடன்

சம்பந்தப்படுத்திக் காட்டுதலாம். இது ஒற்றுமைச் சம்பந்தம், வேற்றுமைச் சம்பந்தம், காரண காரியச் சம்பந்தம் என்று இவ்வாறு பலவகைப்படும். உதாரணமாக, தவளை நிலத்திலும் நீரிலும் வசிப்பது என்ற பழைய விஷயத்துடன் ஆமை நிலத்திலும் நீரிலும் வசிக்கும் என்னும் புதிய விஷயத்தை ஒற்றுமைப்படுத்திக் காட்டலாம். அக்பர் ஹிந்துக்கட்கு மதசுயாதீனம் கொடுத்து பிரஜாசமத்துவம் பாராட்டியதால் நாடு க்ஷேமம் அடைந்தது என்னும் பழைய விஷயத்துடன், ஔரங்கசீப் ஹிந்துக்களை இம்சித்து அவர்கட்குரிய பிரஜா உரிமைகளை மறுத்ததால் நாட்டில் கலகம் ஏற்பட்டு ராஜ்யம் சீர்குலைந்தது என்னும் புதிய விஷயத்தை வேற்றுமைப்படுத்திக் கூறலாம். நிறப் பாதுகாப்பு பிராணிகளுக்கு இயற்கைச் சுற்றுப் புறத்தால் அமைவதால் வீட்டிலிருக்கும் பல்லி வெண்ணிறமாகவும், மரத்திலிருக்கும் பல்லி மரப்பட்டை போன்ற நிறமாகவும் இருக்கிறது—மேற்கூறிய மூன்றும் முறையே ஒற்றுமை, வேற்றுமை, காரண காரியச் சம்பந்தங்கட்கு உதாரணங்களாம். புதுப்பாடமும் இனப்படுத்தலும் இரண்டு தனிப் படிகளாகக் கூறப்பட்டிருப்பினும் இரண்டும் கலந்தே வருவன. புதுப்பாடம் கற்பிக்கும் பொழுதே இனப்படுத்தலும் நடக்கும். சில பாடங்களில் இனப்படுத்திக் காட்டக்கூடாமலும் இருக்கலாம். புதுப் பாடம் கொடுத்தல், இனப்படுத்தல்—இவ்விரண்டு படிகட்கும் பாடத்தின் கால அளவில் ஐந்தில் மூன்று பாகம் செலவிடலாம்.

4. பொதுவிதி கூறுதல்: புதுப் பாடத்தில் பற்பல உதாரணங்கள் அல்லது பொருட்களைப்பற்றிப் படித்தபின் அவற்றுக்குப் பொதுவான ஒரு விதியை அனுமானத்தால் கண்டறிந்து கூறுதல். இலக்கணப் பாடத்தில் பொதுவிதி தவறாமல் இருக்கும். செய்யுட்பாடம், கதை சொல்லுதல்

இவற்றில் கருத்து அல்லது படிப்பினையைத்தான் பொது விதியாகக் கொள்ளவேண்டும். சரித்திரம் முதலிய மற்றைப் பாடங்களிலும் பொதுவிதிக்கு இடமுண்டு. ஆனாலும், ஒவ்வொரு தனிப் பாடத்திலும் தவறாமல் பொதுவிதி கூறக்கூடும் என்பதில்லை.

5. அப்பியாசம் அல்லது திரும்பக் கேட்டல்: படித்த புதுப் பாடத்தில் ஏற்பட்டிருக்கும் தெளிவின் அளவை அறியவும் அவ் விஷயத்தைத் திரும்பவும் மனதிற் பதிக்கவும் நோக்கமாக அப்பியாசம் கொடுக்கப்படவேண்டும். பாடச் சுருக்கம் கூறுதல், அல்லது எழுதுதல்; மாதிரிக் கணக்குப் போன்ற வேறு சில கணக்குகளைச் செய்தல்; ஆசிரியரது வினாக்களுக்கு விடைகூறுதல்; கற்ற விஷயத்தைப் படம் வரைந்து காட்டுதல் முதலிய இவை திரும்பக் கேட்டல் அல்லது அப்பியாசமாம். இந்தப் படிக்கும், முன் படிக்கும் மற்றப் படிகட்குச் செலவான கால அளவு போக மீதியிருக்கும் ஐந்தில் ஒரு பகுதிக் காலத்தையும் செலவிடலாம். பெரும்பாலும், கணக்குப் பாடத்தில் அப்பியாசப்படிக்குக் கால அளவு அதிகம் செல்லும்.

கரும்பலகைச் சுருக்கம்:

கற்பிக்கும் துறையில் கரும்பலகை பெரும் பயன் தருவது. காதால் கேட்டவற்றைக் கண்ணாலும் பார்த்தால்—இரு புலன்கள் வழியாக அறிவு மனதுக்குச் சேர்வதால் மனப் பதிவு தெளிவும் திட்டமுமாகும் ஆகலால், புதிய விஷயங்களைக் கற்பிக்கும்போது தெளிவேற்படும் பொருட்டுக் கண் புலன் மூலமாகவும் கற்பிப்பதற்குப் படங்கள் வரைந்து காட்டலாம். கற்பிக்கப்படும் விஷயச் சுருக்கத்தை அதில் எழுதி வைக்கலாம். கரும்பலகையில் எழுதியவற்றைப் பார்த்து, பிள்ளைகள் தமது குறிப்புப் புத்தகத்தில் பிழையற எழுதிக்கொள்வதாலும், அதைத் திரும்பப் பார்க்க

நேரிடுவதாலும், ஞாபகம் உண்டாகிறது. ஆதலால், ஆசிரியர் கரும்பலகையை உபயோகிக்க மறக்கலாகாது

25. பள்ளிக்கூட ஆட்சிமுறை.

இதற்கு ஆங்கிலத்தில் Discipline என்பார்கள். ஒரு குரு சொல்வதின்படி அவருடைய சிஷன் கேட்டுக் கீழ்ப் படிந்து நடப்பது என்பது அதின் பொருள். இங்கு, பாடசாலை விதிகளுக்குட்பட்டு அடங்கி நடத்தல் என்று பொருள் கொள்ளலாம். கீழ்ப்படிதலும் அடங்கி நடத்தலும் அடிமைத் தனம் அல்ல. மனிதன் சமூக விதிகளுக்கு உட்பட்டு வாழ் வதுதான் சுவாதீனம் என்னலாம். ஒரு மாணவன் அவனு டைய க்ஷேமத்தைக் கருதி விதிக்கப்பட்டிருக்கும் பாடசாலை விதிகளைச் சந்தோஷமாகக் கைக்கொள்வதுதான் அவனுக்குச் சுவாதீனமாகும்.

ஆட்சி முறை என்றால் அடக்கி ஆளும் முறை என்றும் அர்த்தமல்ல. ஆளும் நோக்கமாகப் பாடசாலை ஆட்சிமுறை ஏற்பட்டிருப்பதன்று. பிள்ளைகள் தங்களுடைய இயற்கைத் தூண்டுதல்களின்படி செய்கிறவர்கள். எதையும் திட்ட வட்டமாக யோசித்து, நிர்ணயித்து ஒரு நோக்கத்துடன் வேலை செய்யமாட்டார்கள். ஆகையால், அவர்கள் தங்கள் தூண்டுதலுக்கும் சுற்றுப்புறக் கவர்ச்சிகட்கும் ஈடுபட்டுப் பயனற்ற வேலைகளைச் செய்யாமல், நிர்ணயத்துடனும் திட்டமான நோக்கத்துடனும் கருமம் செய்யக்கூடிய உயர் நிலைக்கு அவர்களை வழி நடத்துவதுதான் ஆட்சி முறையின் லக்ஷியமாகும். அவர்கள் தங்கள் மனச்சாக்ஷியின் நிமித்தம் சத்காரியங்களைச் செய்யும்படி அவர்களைப் பயிற்றுவிப்பது தான் உண்மையான ஆட்சி முறையாகும்.

ஆட்சிமுறை சீராக இருந்தால் மட்டும் வகுப்பில் ஒழுங் கும் அமைதியும் நிலவும். பாடம் நன்கு நடைபெறும்.

பிள்ளைகள் நற்பழக்கங்களிலும் சன்மார்க்கத்திலும் தேர்ச்சி யடைவார்கள்.

ஆட்சிமுறைக்கு அனுகூலமானவை.

1. ஆசிரியருடைய தோற்றம்: ஆசிரியருடைய தோற்றம் என்பது அவருடைய நிறம், உயரம், பருமன், அழகு இவற்றைக் குறிக்காது. இவை அவருடைய தோற்றத்துக்கு ஒரு பான்மை உதவி செய்யக்கூடியவைகளே. சிறந்த கல்வியறிவு; சொல்வன்மை; கற்பிக்கும் திறமை; தனது தொழிலில் பற்று, அபிமானம்; பிறரிடத்திலும் பிள்ளைகளிடத்திலும் அன்பு, அனுதாபம்; திடமான மனம், திடமான பேச்சு, செய்கை; இடையிடையே சிறிது தமாஷ்; சற்குணம்; மற்றவர்கள் தன்னைப் பார்க்கும்போது அவர்கள் மனதிலே தன்னைப் பற்றிய பயம், மரியாதை, அன்பு இவற்றை ஒருங்கே எழுப்பக்கூடிய இயல்பு முதலிய இவையெல்லாம் சேர்ந்து ஆசிரியரின் தோற்றமாகும். மேலும், அவர் கூர்மையான கண், காது உடையவராகவும் யாதொரு அங்கவீனமும் இல்லாதவராகவும் இருக்கவேண்டும். இத்தகைய அம்சமுள்ள ஆசிரியர் இருக்குமிடத்தில் ஒழுங்கு இல்லாதிருப்பது அசாத்தியம்.

2. பாடசாலை, வகுப்பறையின் சுற்றுப்புறங்கள்: இவை தாராளமான காற்றோட்டம், தட்பம், வெளிச்சம் உடையதாகவும், விசாலமாகவும் இருக்கவேண்டும். வகுப்பறையில் ஒரு பிள்ளைக்குச் சராசரி $9\frac{1}{2}$ சதுர அடி இடம் இருக்க வேண்டும். பாடசாலைச் சுற்றுப்புறம் சந்தடியின்றிச் சாந்தமாகவும், மனோகரமாகவும் இருக்க வேண்டும். வகுப்பறையில் புழுக்கம், இருள், அதிகக் குளிர் அல்லது வெப்பம் இருப்பின் பிள்ளைகளின் உடலுக்கு ஏற்படும் அசௌகரியத்தால் அவர்கள் கவனம் பாடத்திற் செல்லமாட்டாது. அங்கு மிங்கும் எட்டிப் பார்த்துக் குறும்பு செய்துகொண்டு

அல்லது தூங்கிக்கொண்டிருக்க ஏதுவாகும். இதனால் ஒழுங்கு கெடுமல்லவா?

3. பாடசாலை ஒழுங்கு முறை: பிள்ளைகளை வகுப்பு மாற்றுதல், ஆசிரியர்கட்குப் பாடம் விதித்தல், பாட அட்டவணை இவற்றில் தவறு இருந்தாலும் ஆட்சி முறை பேதப்படும். தகுதியற்ற பிள்ளைகளை மேல் வகுப்பில் வைத்தல் கூடாது. ஆசிரியரால் இயலாத அல்லது அவர்க்குப் பற்றில்லாத பாடங்களைக் கற்பிக்கும்படி வீதிப்பதாலும், தோற்றம் இல்லாத ஆசிரியர்களை நியமிப்பதாலும் ஒழுங்கு கெடும். பாடம் படித்துக் களைத்த வேளைகளில் கணக்கு முதலிய கடின பாடங்களை வைத்து நடத்தினாலும், காலை 6-மணி முதல் மாலை 6-மணி வரை பிள்ளைகளை வகுப்பறையில் அடைத்துவைத்தாலும் ஆட்சிமுறையைச் சீராகப் பேணிக்கொள்வது அரிது. தக்க முறைகளைக் கையாளாமல் கற்பித்தாலும் அமைதி குன்றும். இடுக்கமாகவும் நெருக்கமாகவும் பெஞ்சுகளை இட்டுவைத்து, பிள்ளைகள் இருக்கவும், எழும்பவும், எழுதவும் வசதிக்குறைவேற்பட்டாலும் அமைதிக்குப் பங்கம் விளையும்.

4. ஆட்சி முறைச் சட்டங்கள் புத்திசாலித்தனமாக அமைந்திருக்கவேண்டும். இன்னின்னபடி செய் என்று விதிக்க. செய்யாதே என்று விதித்தால் மீறுவதற்குத் தூண்டுதல் உண்டாகும். நிமித்தம் ஏற்பட்டாலன்றி விதி ஏற்படுத்தக் கூடாது. ஏராளமான விதிகள் இருப்பதும் தவறு. ஒரு விதி ஏற்படுத்தினால் அதன் நல்நோக்கம் பிள்ளைகளுக்குத் தெளிவாய்த் தெரிந்திருக்கவேண்டும். விதிகளைப் பக்ஷபாதமில்லாமலும், வருஷம் முழுவதும் அமுல் செய்யவேண்டும். இடையில் தளரவிடக்கூடாது.

பாடசாலை சிறைச்சாலை அல்ல, பிள்ளைகள் மனோ வளர்ச்சியடையும் ஆலயம். 'வா, போ, செய்' என்று

கடுங்குரலுடன் தடபுடல் செய்யாமல் நிதானமாகவும் இயற்கையாகவும் இருக்கவேண்டும். அளவான எல்லைக்குள் பிள்ளைகளின் இயற்கைச் சுபாவங்கட்கு இடம் கொடுக்கவேண்டியதே. வகுப்பு மாறும்போது அல்லது ஒரு பாடம் முடியும்போது சப்தம் செய்வார்கள். இதை அதிகமாய்ப் பாராட்டாமல், மெல்ல மெல்ல நிறுத்தவேண்டும். எவ்விதமான ஒழுங்கீனத்துக்கும் எந்தச் சந்தர்ப்பத்திலும் இடம் கொடுக்கக்கூடாது.

பரிசு.

சிறுவர்கள் வருங்காலத்தைப்பற்றி நினைக்கக் கூடியவர்கள் அல்லர். கல்விக்காகக் கல்வியைப் படிக்கவேண்டும், கடமைகளைச் செய்யவேண்டும் என்ற உயர்ந்த மனோபாவம் உடையவர்களும் அல்லர். ஆதலால், இளமையில் அவர்கள் பாடசாலைக்குக் கிரமமாக வந்து, ஒழுங்காய்ப் படித்து, நல்லொழுக்கத்தில் தேறி வாழ்க்கைக்கு லாயக்குள்ளவர்களாக்கும்படி அவர்களைத் தேற்றி உற்சாகப்படுத்த வேண்டியது அவசியம்.

இரண்டு விதமாக அவர்களை ஊக்கப்படுத்தலாம். புகழ், பரிசு பெறவேண்டுமென்ற ஆசையை உண்டாக்குவதாலும், இகழும் தண்டனையும் கிடைக்குமென்ற பயத்தை உண்டுபண்ணுவதாலும் ஊக்கம் அடைவார்கள். இவற்றுள் பரிசு முறை சிரேஷ்டமானது. தண்டனை இரண்டாந்தரமானது மட்டுமல்ல, கீழ்த்தரமுமானது. எல்லாப் பிள்ளைகள் இயல்பும் ஒருவிதமாக இராது. சிலரைச் சில விஷயங்களில் பயமுறுத்தித்தான் திருத்தவேண்டியதிருக்கிறது.

பரிசும் தண்டனையும்.

1. பரிசு: இது மனோகரமான தூண்டுதல். சந்தோஷமானது. வகுப்பில் முதலிடம், பரீக்ஷையில் வெற்றி, பட்டம் பதவி பெற்றுப் புகழடையவேண்டும் என்று எண்ணிப் படிப்பதினால் அதிகமான அபிவிருத்தியுண்டாகிறது.

சந்தோஷத்தினுல் இரத்த ஓட்டமும், நரம்பு மண்டலமும் பரிசுத்தமான சுகஸ்திதியை அடைகின்றன. இரத்த ஓட்டத்தால் உடல் நிலையும், நரம்பு மண்டலத்தால் மனோநிலையும் ஆரோக்கியமாக இருக்கும்பொழுது மனம் நன்ருய் வேலை செய்யக்கூடும். இதுவே அதிக அபிவிருத்திக்குக் காரணம். ஒருவன் ஒரு பரிசைக் கருதி ஒரு பாடத்தைப் படிக்கும் போது, நாளடைவில் அவனுக்கு அப்பாடத்தில் விசேஷ மான ப்ரீதி உண்டாகி, அவன் அப்பாட சம்பந்தமாகப் பெரிய ஆராய்ச்சிகளைச் செய்து மேன்மை யடையக்கூடும். மந்தமாய் இருப்பவனைக் கண்டித்தல், தண்டித்தலைவிடத் தேற்றுவதே சாலச் சிறந்த முறையாகும்.

பரிசு கொடுத்தல் கூடாது என்று சொல்லும் கக்ஷியா ரும் உளர். அவர் கூறுவது: சுமார் 30 முதல் 40 பேர் வரை இருக்கும் ஒரு வகுப்பில், அல்லது, 10 அல்லது 15 பேர் ஓடக்கூடிய ஒரு பந்தயத்தில் இருவர்தான் பரிசு பெறக்கூடும். இதையறிந்த மற்றவர்கட்கு ஊக்கம் உண்டாவதற்குப் பதி லாகத் தளர்ச்சியே உண்டாகும். பரிசு பெறுபவர் கருவ மடையவும், பெருதார் பெற்றவர்மீது அழுக்காறு கொள்ள வும் ஏதுவாகும். பாடத்தில் பற்றுதல் உண்டாகும்படி போதிக்கும்பொழுது பிள்ளைகள் உற்சாகமாய்ப் படிப்பார் களே: பின்னை ஏன் பரிசு அவசியம்?

நாம் பரிசு கொடுப்பது குற்றமா? கொடுக்கும் முறை குற்றமா என்பதை ஆராய்ந்தால்—கொடுக்கும் முறை சரியாய் இருந்தால் பரிசு கொடுப்பதில் குற்றமில்லை, பயனுண்டு என்பதை அறியலாம். ஆதலால், பரிசு அளிப்பதற்குரிய சில விதிகளைக் கூறுவோம். பிள்ளைகளிற் சிலருடைய இயல்பான திறமைக்கும் விவேகத்துக்கும் பரிசு கொடுப்பதுடன், உண்மையான உழைப்புக்கும் பரிசுத் திட்டம் வேண்டும். கேவலம், பரீக்ஷை மார்க்குகளைமட்டும் வைத்துத் தீர்ப்புச்

செய்யாமல், நாளடைவில் தொடர்ச்சியாக ஒருவன் உழைக்கும் உழைப்பைக் கவனித்துப் பரிசு அளிக்கவேண்டும். பரிசுகளின் தொகையும் அதிகப்படவேண்டும். ஒரு முதற் பரிசும், இரண்டு மூன்று இரண்டாம், மூன்றும் பரிசுகளும் வைப்பது நலம். பாடத்தில் திறமைக்கு மட்டுமன்றி நற்குணம், ஒழுக்கம், சுத்தம், காலம் தவறாமல் பள்ளிக்கூடத்துக்கு வருதல், பாடசாலைத் தோட்டவேலை, மியூசியத்துக்குப் பொருள் சேகரித்தல், விளையாட்டில் திறமை, உடல் நலம் முதலிய பற்பல விஷயங்கட்கும் பரிசு கொடுக்கலாம்.

சில பரிசுகள்.

மாதம் ஒருமுறை வகுப்பில் முதல் ஐவருடைய பெயரைக் கரும்பலகையில் எழுதி வைக்கலாம். இதனை The Roll of Honour என்று சொல்வர். தமிழில் 'பஞ்சரத்தினங்கள்' என்று இவ்விதமான ஒரு கண்ணியமான பெயரால் அழைக்கலாம். வகுப்பில் சட்டம்பிள்ளை, விளையாட்டு ஸ்தலத்தில் தலைவன் பதவிகள் கொடுக்கலாம். நன்றாக எழுதப்பட்ட எழுத்து, வியாசம், படம் இவற்றை வகுப்புக்கு மாதிரியாகக் காண்பிக்கலாம். பாடசாலைக்குப் பொதுவான கண்காட்சி ஸ்தலத்தில் வைக்கலாம். நன்றாக எழுதக்கூடிய பிள்ளைகளுக்குப் பாடசாலை சம்பந்தமான பத்திரிகைகளில் எழுதும்படி இடம் கொடுக்கலாம். பரீக்ஷை வைத்து மார்க்கு அளித்து வகுப்பில் இடம் மாற்றிவைப்பதும், மேல் வகுப்புக்கு மாற்றுவதும் பரிசுதான். 'திறமைசாலி', 'கெட்டிக்காரன்' என்று புகழலாம். புகழுக்குப் பாத்திரமானவனை ஆசிரியர் உசிதம்போல தனியேயும், வகுப்பிலும் பாடசாலையிலுள்ள எல்லார் முன்னிலையிலும் வைத்துப் புகழலாம். பொருட்களைப் பரிசாக அளிக்கலாம். நற்குணத்துக்கு நற்சாட்சிப் பத்திரங்கள்; பாடத்தில் திறமைக்கு ஸ்காலர்ஷிப், பணம், புத்தகம், மெடல்கள்; விளையாட்டில் திறமைக்கு மெடல், பணம், சாமான்கள், ஷீல்ட்

கொடுக்கலாம். பாடத்திலும், விளையாட்டிலும் ஒருவனுடைய திறமையைக் கண்டறிவது எளிது. ஆனால், ஒருவனது குண மேம்பாட்டைக் கண்டறிவது எப்படி? மாணவர்களுடைய வோட்டு மூலமாகவும், நாளடைவில் ஆசிரியர்களும் தலைமை யாசிரியரும் கவனித்து வந்ததிலிருந்தும் ஒருவாறு கண்டறியலாம்.

2. தண்டனை: இது கசப்பான தூண்டுதல். ஏதோ பெற்றோர், ஆசிரியருடைய கண்டிப்புக்காகவும் உபத்திரவத்துக்காகவும் பயத்தினாலும் வேலை செய்ய ஏவுகிறது. இதனால் ஏற்கனவே பாடத்தில் இருக்கக்கூடிய சிறிது பிரியமும் கெட்டு, மந்தமும் அப்பிரியமும் அதிகரிக்கின்றன. ஆகையால், பாடத்தின் நிமித்தம் தண்டிப்பதில் பயனில்லை. தண்டனையால் உடல் நிலையும் மனோ நிலையும் கெட்டு வேலை செய்யக்கூடாத மனோபாவம் உண்டாகும். ஆனாலும், கவலைத் தாழ்ச்சி, கீழ்ப்படியாமை, முரட்டுத்தனம், போக்கிரித்தனம் முதலிய குற்றங்கட்குத் தண்டனை அவசியம்.

பழிக்குப்பழி வாங்கும் நோக்கத்துடன் தண்டிக்கக் கூடாது. பயமுறுத்தும் பொருட்டும், சீர்திருத்தும் பொருட்டும் தண்டனை கொடுக்கலாம். ஒரு முரட்டுப் பையனைப் பயமுறுத்தும்படி அமைதியாக உட்கார்ந்திருக்கிற ஒரு சிறு பையனை அடிக்கக்கூடாது. குற்றத்தின் தன்மைக்குத் தக்க தண்டனையின் அளவு இருக்கவேண்டும். வருத்தவேண்டுமென்பது அல்ல, திருத்தவேண்டுமென்பதே தண்டனையின் முக்கிய நோக்கம். ஏற்கனவே ஆசிரியர், பெற்றோர் தண்டித்துத் திருத்தாவிடில் இயற்கை தண்டிக்கத் தவறாது. இயற்கையின் தண்டனை பெரும்பாலும் கோரமானது. நீந்தத் தெரியாதவன் நீரில் இறங்கும் சிறிய குற்றத்துக்கு மரணமாகிய கொடும் தண்டனை கிடைக்கிறது. படியாதவன் பரீக்ஷையில் பட்டுக்கொள்வான். இதனால் காலமும், பணமும் வீணாகி, பையனுக்கும் படிப்பில் சோர்வுண்டாகிறது.

ஆரம்பத்திலேயே தண்டித்தால் ஒருவன் திருந்தி க்ஷேமம் அடைவதற்கு அவகாசம் இருக்கிறது.

தண்டனை வகை. முதலாவது கண்டித்துப் பேசி எச்சரிப்பது அடிக்கடியும் அதிகமாகவும் கண்டிக்கக்கூடாது. குற்றம்செய்தவனைத் தனியாகவைத்துத் தான் செய்தது தவறு என்று அவன் உணரும்படி பேசவேண்டும். அவன் மனம் கன்னலடைந்து கடினப்பட்டு, அதிகமாய்க் கெட்டுப் போகும்படி இடித்துப் பேசக்கூடாது. திருத்தும் நோக்கத்தைச் சிந்தையில் கொண்டு அளவறிந்து இடித்தும் உரைக்கலாம். எழுத்துக் கொடுத்தல். மிகவும் அதிகமாய் எழுதச் சொன்னால் பிறரைக்கொண்டு எழுதி வாங்கி, உண்மைத்தப்புச் செய்வார்கள். இதைக் கவனித்து அளவாக எழுத்துக் கொடுக்கலாம். நிறுத்தி வைத்தல். பிந்திவந்தால் பிந்தி வீட்டுக்கு அனுப்புவது, பாடம் படியாமல் வந்தால் படித்து ஒப்பித்தபின் போக விடைகொடுப்பது நிறுத்தி வைத்தலாம். சிலகாலம் பாடசாலைக்கு அல்லது விளையாட்டுக்கு வரவொட்டாமறறுடுத்து வைத்துத் திரும்பச் சேர்த்துக் கொள்ளலாம். பெற்றோருக்கும் அடங்காத ஒரு பையனுக்கு இத்தகைய தண்டனை கொடுத்தால் எங்கேனும் ஓடிப் போய்க் கெட்டுப் போவான். இதைக் கவனித்துச் செய்யவேண்டும். அபராதம் விதிக்கலாம். இது பிள்ளைகள் செய்யும் குற்றத்திற்குப் பிள்ளைகளையல்ல, பெற்றோரைத் தண்டிப்பதாகும். ஆயினும், பள்ளிக்கூடத்துச் சாமான்களை உடைத்து நஷ்டப் படுத்தினால், பெற்றோருடைய கவலைத்தாழ்ச்சியால் பிந்தி வந்தால், அசுத்தமாய் இருந்தால் பிள்ளைகளுக்கு அபராதம் விதிக்க வேண்டியதுதான். பிரம்படி கொடுக்கலாம். பகுத்தறிவுள்ள மனிதனை மிருகத்தைப் போல பாவித்து அடிப்பது நியாயம் அல்ல. ஆனாலும், ஒருவன் பகுத்தறிவு கெட்டு மிருக சுபாவத்துடன் கீழ்ப்படியாமை, பிடிவாதம்,

கவலையின்மை, தூஷணம் பேசுதல், எழுதுதல், சண்டை பிடித்தல், பாடசாலைக்கு வராமல் ஓடி ஒளித்தல், மற்றவர்களைப் பரிகசித்தல் முதலிய குற்றங்களைச் செய்தால் பிரம்படி கொடுப்பது தகும். 'பிரம்பை கையாளாத பிதா தனது புத்திரனுக்குப் பகைவன்' என்று ஓர் அறிஞர் இயம்பியிருக்கிறார். தலைமையாசிரியர் அல்லது அவரால் குறிக்கப்பட்ட உதவி ஆசிரியர் அவருடைய மேற்பார்வையில் பிரம்பை உபயோகிக்க நியாயம் உண்டு. மற்ற ஆசிரியர்கட்கு அந்த அதிகாரம் இல்லை. பிள்ளையினுடைய வயது, தேகஸ்திதி, மானம்கொள்ளும் இயல்பு இவைகளைக் கவனித்துக் கூட்டியும் குறைத்தும் அடி கொடுக்கவேண்டும். முதல் குற்றமா, வாடிக்கையாகச் செய்யும் குற்றமா என்றும், ஆலோசனை கூறியும் எச்சரித்தும் பயனில்லை என்றும் கண்டபின் தண்டிக்கவேண்டியது. ஆலோசனை கூறியும், எச்சரித்தும், பெற்றோருடன் கலந்து பேசியும், வேறு தண்டனைகள் கொடுத்தும், அடித்தும் திருத்துவதற்கு இணங்காத பையனை, மற்றவர்களையும் கெடுக்கக்கூடிய நிலையில் இருப்பவனைப் பாடசாலையை விட்டு அனுப்பிவிடவேண்டும். குற்றம் செய்யக் காரணம் என்ன என்று கண்டு, அதற்குத் தக்க தண்டனை முறைகளை மாற்றிக்கொள்ளவேண்டும்.

சோம்பற் கை சாத்தானுடைய இயந்திரசாலை என்பார்கள். ஆதலால், பிள்ளைகள் சும்மா இராமல் ஏதாவது செய்துகொண்டு இருக்கும்படி அவர்களுக்கு வேலை கொடுக்கவேண்டும். ஆசிரியர்களுக்குள் ஒற்றுமையும், ஆசிரியர் தோற்றமும், ஆசிரியரிடத்தில் மாணவர்க்கு நம்பிக்கையும் இருப்பதாலும், குற்றத்தை முளையிலே கிள்ளிவிடுவதாலும் குற்றங்கள் குறையும். குற்றங்கள் குறையவே தண்டனைகள் குறையும். தண்டனை குறையக் குறையப் பாடசாலையின் ஆட்சி முறை மேம்பட்டதென்று கருதவேண்டும்.

26. சுயநோக்க முயற்சி முறை.

ஒரு பாடசாலையில் மாணவனுகச் சேர்ந்து, வகுப்பறைக்குள் ஆசிரியர் முன்பு இருந்து பல பாடங்களைப் படித்து சர்டிபிக்கட்டு அல்லது பட்டம் பெறுகிறவனைத்தான் படித்தவன் என்று தீர்மானிக்கிறோம். ஆனால், ஒரு பாடசாலையிலும் சேராமல் தனது தந்தையினுடைய பலசரக்கு மளிகையில் அவர் கையின்கீழ் அமர்ந்து வியாபாரம் செய்யும் ஒரு பையனைப் படிக்கிற பையன் என்று நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். ஆனால், வாஸ்தவத்தில் அவனும் படிக்கிற பையன்தான். வியாபாரத்திலும், வாழ்க்கையிலும் போதிய அறிவும் அனுபவமுமுடைய அவனுடைய தந்தையே அவனுக்கு அன்புள்ள ஆசிரியன். அந்தப் பலசரக்கு மளிகையே அவனுடைய பாடசாலை. அவன் படிக்கும் பாடங்கள் என்ன? பலவகைச் சாமான்கள், அவற்றின் பெயர், அவை விளையுமிடம், ஏற்றுமதி இறக்குமதியாகுமிடம், அவை மலிவாகக் கிடைக்குமிடம், கிராக்கியான இடம், அவற்றின் உபயோகம், விலை, வரவு செலவு கணக்கு கடைக்கு வருகிற பெரியோர் சிறியோரிடம் நயமாகப் பேசிப் பழகுதல், உண்மை, சுத்தம், ஒழுங்கு, கிரமம் முதலியன. இவ்விஷயங்களை பாடசாலைப் பாடம்போல் வாசித்து எழுதி நெட்டுருச் செய்து அவன் கற்றுக்கொள்ளவில்லை. ஆனால், இயற்கையாக, சுலபமாக நாளடைவில் இவ்விஷயங்கள் அவன் மனதில் ஏறிவிடுகின்றன. முடிவென்னவென்றால், ஏதோ சிறிது எழுத்து வாசனை மட்டும் உடையவனுயிருந்து, கடையில் சில வருஷங்கள் வேலை பார்த்து, லாபமும் சம்பாதித்த ஒரு பையனையும், பாடசாலையிலேயே வகுப்பறைக்குள் ஆசிரியர் முன்பிருந்து கற்று, சர்டிபிக்கட்டு பெற்ற ஒரு பையனையும் ஒப்பிட்டுப் பார்த்தால், முந்தியவனே

வாழ்க்கைக்கு லாயக்குள்ள அனுபவமும் சாதுரியமும் உடையவனாக இருப்பதையும், பிந்தியவன் 'பள்ளிக் கணக்கு புள்ளிக்குதவாது' என்றபடி ஏட்டுச் சுரைக்காயாகப் பயனற்று இருப்பதையும் காண்கிறோம். ஆகவே, இவ்விருவரில் யார் படித்தவன் என்பது இப்போது வெளிப்படை.

உலகம் பள்ளிக்கூடமல்ல, அது சமூக வாழ்க்கைக்குரிய அரங்கு. ஆகையால், பிள்ளைகளை அறிவினாலும், அனுபவத்தினாலும், உழைப்பினாலும், குணத்தினாலும் வாழ்க்கைக்கு லாயக்குள்ளவர்களாக்கும்படி கல்வி முறைகளைக் கையாளவேண்டும். கற்றவர்களை கல்லாதவர்களைவிட எல்லா அம்சத்திலும் தேர்ந்தவர்களாக்கத்தக்க முறையே கல்வி முறைகளில் முதற்றரமான முறை. இந்த முறையைப் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியேறியபின் பிள்ளைகள் படிக்கும்படி ஒதுக்கிவிட்டு, அவர்களுடைய பள்ளிக்கூட வாழ்க்கையான சில வருஷங்களை எழுத்தறிவுக்காக மட்டும் செலவழிப்பது எவ்வளவு வீண்? பெற்றோருக்குப் பாரம்! ஆகையால், வகுப்பறைக்குள்ளேயே பிள்ளைகளை வாழ்க்கைக்கு (Practical Life) ஏற்ற புத்திசாலிகளாகவும், தொழிலாளிகளாகவும், குணசாலிகளாகவும் பயிற்றுவிக்க ஒரு முறையில்லையா? ஆம், உண்டு.

அம்முறையை முதல் முதல் 1918-ம் ஆண்டில் பிரஸ்தாபித்தவர் அமெரிக்காவிலுள்ள டாக்டர் கில்பத்ரிக் என்னும் ஆசிரியர். அதற்கு ஆங்கிலத்தில் The Project Method என்கிறார்கள். தமிழில் சுயநோக்க முயற்சி முறை என்கிறோம். பிள்ளைகளும் (ஆசிரியரும்) நோக்கத்துடன் ஒரு வேலையைத் தெரிந்துகொண்டு, அதில் கருத்தாயிருந்து அதைச்செய்து வருகிற காலத்தில், அவ்வேலையின் மூலமாக வாழ்க்கைக்கு இன்றியமையாத சகலவிதக் கல்வியையும் ஆசிரியருடைய உதவியால் கற்றுக் கொள்வதே அம்முறையாகும்.

கடை வியாபாரம், தோட்டவேலை, கிராமப் போஸ்ட் ஆபீஸ், வைத்தியசாலை, பள்ளிக்கூட க்ஷேமநிதி, பட்டம் செய்தல், அட்டைவேலை, பந்தடித்தல் முதலிய விளையாட்டுகள், தேன்ஈ, முயல் வளர்த்தல் முதலிய வேலைகளைத் தெரிந்துகொள்ளலாம்.

ஒவ்வொரு சுய நோக்க முயற்சியிலும் நான்கு அம்சங்கள் உண்டு. அவையாவன :—

நோக்கம்	—	Purposing
ஒழுங்குப்படுத்தல்	—	Planning
காரியத்தைச் செய்தல்	—	Executing
பயனை நிதானித்தல்	—	Judging or Testing the results.

காற்ருடி செய்தலை முதலாம் வகுப்பில் சுயநோக்க வேலையாகத் தெரிந்து கொள்வதாக வைத்துக்கொள்வோம். ஆடிமாதம் காற்றுக்காலம் கிராமத்தில் அங்கங்கேகாற்ருடிகள் பறக்கின்றன. ஆசிரியர் பிள்ளைகளைத் தூண்டுகிருர். பிள்ளைகள் காற்ருடி செய்வது நோக்கம். நோக்கப்படி காற்ருடி செய்வதற்கு ஆசிரியரிடம் அமர்ந்து பிள்ளைகள் ஒரு திட்டம் போடுகிருர்கள். எல்லாருக்கும் ஒரு காற்ருடியாக இருபத்தைந்து காற்ருடிகள் வேண்டும். இதற்கு மூங்கில், நூல், கயிறு, தாள் முதலிய சாமான்கள் எவ்வளவு எவ்வளவு செல்லும்? எங்கே வாங்கலாம்? என்ன விலை? எப்போது செய்ய ஆரம்பிக்கலாம்? இது அவர்கள் போட்டதிட்டம். பின்பு காற்ருடி செய்கிருர்கள். செய்துமுடித்த காற்ருடியைப் பறக்கவிட்டுத் தங்கள் வேலையின் பயனைச் சீர்தூக்கிப் பார்த்து ஆனந்திக்கிருர்கள்.

இதன் மூலமாய்க் கற்கக்கூடிய பாடங்கள் :

தமிழ்:— காற்று, காற்ருடி, பட்டம், நிறம், காகிதம், தென்னை, மூங்கில் முதலிய வார்த்தைகளை எழுத வாசிக்க.

கணக்கு :— வரவு செலவு, ரூபா அணா பைசாக் கணக்கு, சதுரம், வட்டம், கோணம்.

இயற்கை :— பிசின் தரும் மரங்கள், மூங்கில், காற்றுக் காலம் முதலியவைகள், அவற்றின் உபயோகங்கள்.

கைவேலை :— பிசின் எடுத்தல், ஊறவைத்தல், தாள் வெட்டுதல், ஒட்டுதல், கட்டுதல்.

மற்ற முறைகளின்படி கல்வி கற்பிப்பதில் ஆசிரியர் ஒருவருக்கே பொறுப்பும் வேலையும் அதிகம். பிள்ளைகள் கல்வி கற்பதில் அவர்களது வேலையின் பாகம் குறைவு. ஆனால், இம்முறையில் பிள்ளைகளுக்கு மேற்கூறிய நான்கு அம்சங் களின் வாயிலாகவும் அதிக மனவேலை, கை வேலைகள் இருக் கின்றன. ஒரு வேலைக்கு நோக்கம் தீர்மானிக்கும்போதும், அதனைச் செய்ய ஒழுங்கு செய்யும்போதும், செய்து தீர்க்கும் போதும், செய்த வேலையின் முடிவைச் சீர்தூக்கிப் பார்க்கும் போதும் பிள்ளைகளுக்குப் பொறுப்பு அதிகம், உழைப்பு அதிகம். அவர்கள் தமக்குள் ஒத்துழைப்புடனும், ஒருவருக் கொருவர் இணக்கமும் கீழ்ப்படிதலுமான உற்சாக உணர்ச்சியி னுடனும், போட்டிச் சிந்தையுடனும் வேலை செய்கிறார்கள். பாடத்தை நேரடியிலும், புத்தக மூலமாகவும் படியாமல், வேலைகள், விளையாட்டுகள், சம்பாஷணைகள், உற்று நோக்கி ஆராய்தல் மூலமாகச் சிரமம் தோன்றாமலே படித்துக்கொள் கிறார்கள். ஒரு பாடத்திற்கும், மற்றப் பாடங்களுக்கும் சம்பந்தம் ஏற்படுகிறது. இம்முறையினால் படிப்பிற்கும், வாழ்க்கைக்கும் இருந்து வருகிற பெரிய பிளவு நீங்குகிறது. வாழ்க்கைக்கடுத்த வேலைகளை அறிவுடன் சீராய்ச் செய்து முடித்துப் பயனடைவது என்னும் கல்வியின் நோக்கம் நிறைவேறுகிறது.

இம்முறையைக் கையாளுவதால் நேரிடக்கூடிய சில குறை களும் உண்டு. பிள்ளைகள் மனதில் நன்கு பதிய வேண்டிய

விஷயத்தைத் திரும்பத் திரும்பக் கற்பிக்க இயலாது. ஒரு விஷயத்தைப்பற்றிப் பூரணமாக ஒரே தடவையில் அறிந்துகொள்ளமுடியாது; அவ் விஷயத்தைப்பற்றிய சில அம்சங்கள் விட்டுப்போக நேரும். இம் முறைப்படி கற்பிக்கும் கல்வியில் ஒழுங்கும் கிரமமும் தொடர்ச்சியும் இரா. அறிவுக்கடுத்த விஷயங்களுக்கு விலக்காக பயனற்ற காரியங்களைச்செய்து, வீண்காலம் கழிப்பதில் பிள்ளைகள் இறங்கிவிடக்கூடும். இத்தகைய சில குறைபாடுகளினிமித்தம் இவ் வியற்கை முறையை அலக்ஷியம்செய்து விடாமல், இக் குறைகளை நிவிர்த்திக்கத்தக்க வேறு முறைகளையும் உசிதம்போல கையாண்டு, விஷய ஞானம் தெளிவாகவும், தொடர்ச்சியாகவும், உண்டாகும்படி ஆசிரியர் கருத்தாய் இருக்கவேண்டும்.

டாக்டர் மெக்கி என்னும் ஒரு ஐரோப்பிய மிஷனரி முதன் முதலாக நம் நாட்டில் இந்தச் சுயநோக்க முயற்சி முறையைப் பிரஸ்தாபித்தார். அதன் பின் அம்முறை வட இந்தியாவில் 'மோகா'வில் பல பாடசாலைகளில் கையாளப் பட்டுவருகிறது. நமது சென்னை மாகாணத்தில் ஈரோடில் L. M. C. ட்ரெயினிங் ஸ்கூலில் இம்முறையை அனுசரித்துப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அந்த ட்ரெயினிங் ஸ்கூல் தலைமை ஆசிரியர் Mr. J. T. Rajanayagam எழுதிய 'சுய நோக்க முயற்சி முறையை இந்திய ஆரம்பக் கல்வியில் கையாடும் விதம்' என்னும் விரிவான நூலை வாங்கி வாசித்து இம் முறையைப்பற்றி நன்கு அறிக.

சிறிது கூர்ந்து பார்ப்போருக்கு, இந்தச் சுயநோக்க முயற்சி முறைக்கும், நாம் இப்பொழுது கேள்விப்படுகிற வார்தாத் திட்டத்திற்கும் மிக நெருங்கிய சம்பந்தம் இருப்பதாகத் தெரியவரும். ஆகையால், வார்தாத் திட்டத்தைப் பற்றியும் இவ்விடத்தில் சில வார்த்தைகள் சொல்வோம்.

வார்டாத் திட்டம்

தற்காலக் கல்வித் திட்டத்தின் மீது, 'நமது பாடசாலை களில் அளிக்கப்படும் கல்வியால் வீண்காலப் போக்கு, பண விரயம் ஏற்படுவதுடன் அக்கல்வி கற்போர் அனைவருக்கும் வேலை கிடைப்பதில்லை. அவர்கள் தம் உடல் நலத்தையும் கெடுத்துப் பாரமான கல்வியைக் கற்கிறார்கள். அக்கல்வியால் பட்டங்களைப் பெற்றாலும், வாழ்க்கைக்குப் பயன்படாத போலிக் கல்விப் பயிற்சியாக அது முடிவடைகிறது' என்பது போன்ற குற்றங்கள் சாட்டப்படுகின்றன.

ஆகையால், 'விற்பனைக்கு ஏதுவான சாமான்களை உற்பத்திசெய்யும் கைத்தொழிற் கல்வி தேசத்தின் பிள்ளைகள் அனைவருக்கும் கொடுக்கப்படவேண்டும். கல்விக்கென்று பிள்ளைகளும், பெற்றோரும், சர்க்காரும் பணம் செலவு செய் யாமல், பாடசாலைகளில் பிள்ளைகளால் உற்பத்தி செய்யப்படும் சாமான்கள் விற்பனையினாலேயே கல்விக்காகும் செலவைச் சரிக் கட்டவேண்டும்' என்று நமது நாட்டின் தலைவராகிய மகாத்துமா காந்தியின் தலைமையில் வார்டாவில் கூடிய தேசியவாதிகள் கூட்டம் ஒரு புதிய கல்வித்திட்டத்தை வகுத்திருக்கிறது. அதற்கு 'வார்டாத் திட்டம்' என்று பெயர். இந்த வார்டாத் திட்டத்தின் சில அம்சங்கள் சுயநோக்க முயற்சி முறையில் அடங்கி இருப்பதைக் காண்கிறோம்.

வார்டாத் திட்டம்தான் பரிபூரணமான, மிகவும் வெற்றி கரமான பயனைத் தரக்கூடிய சுயநோக்க முயற்சி முறை என்று கல்வி நிபுணர்கள் ஒப்புக்கொள்கின்றார்கள். கைத்தொழிலின் வாயிலாகவே கல்வி கற்பிக்கப்படவேண்டும் என்பது அத் திட்டத்தின் அடிப்படையான கோட்பாடு. அதன்றியும், கைத்தொழிலுடன் கல்வியறிவையும் பெற்றுக்கொள்ளும் இளைஞர்கள், பாடசாலையை விட்டு வெளியேறியவுடன்

உலகநடை தெரிந்து சமூகவாழ்க்கை செய்வதற்கு லாயக்குள்ளவர்களாகவும், உத்தியோக மோகத்தை விட்டொழித்துத்தன்நம்பிக்கையுடன் சுயாதீனமாகத் தொழில் செய்து, தம்முடையவும் தாய்நாட்டினுடையவும் பொருளாதாரத்தை விருத்தி செய்து, சுயமரியாதை யுடையவர்களாய் வீர வாழ்க்கை செய்யக்கூடுமென்றும் இத்திட்டத்தின் கர்த்தாவாகிய காந்தியடிகள் நம்புகிருர்.

இத்திட்டத்தைப்பற்றி விபரமாக அறிய விரும்புவோர்க்கு உதவியாக 'வார்டாத் திட்டம்' என்று Mr. P. K. Sundararajan எழுதிய நூலை வாசிக்க. நமது தேசத் தலைவர்கள் காணும் மனோகரமான இக்கனவு-வார்டாத் திட்டம் அமுலுக்கு வரும்போது, அது இந்திய இளைஞர் உலகுக்கும், நாளடைவில் அகில இந்திய சமூகத்துக்கும் நலமளிக்கத் தக்க சிந்தாமணி என்னும், தெய்வீக ரத்னமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை. கல்வித்துறையில் இத்தகைய சீர் திருத்தங்கள் உண்டாகும் இககாலத்தில், ஆசிரியத் தொழிலில் ஈடுபட்டிருக்கும் நாம் உன்னதமான தேசத் தொண்டு செய்யும் பாக்கியம் பெற்றவர்கள் தான்.

ஹிலால் பிரஸ், திருநெல்வேலி — 1938.